
அனுபமா
தா முகுந்தன்
அனுபமா * லதா முகுந்தன்
அனுபமா
லதா முகுந்தன்

## உள்ளே...


5

86


# அனுபமா

1



"அம்மா... அம்மா..." யாரோ கூப்பிடும் ஒலி கேட்டு வெளியே வருகிறாள் அனுபமா. ஜன்னல்களுக்கெல்லாம் வெள்ளையும் நீலமும் கலந்த பூப்போட்ட திரைகளை மாட்டிக் கொண்டிருந்தவள், அப்படியே அதைத் தொங்க விட்டு விட்டு வந்து கதவைத் திறக்கிறாள்.

"யார்... என்ன வேணும்?" எதிரே ஒரு அறுபது வயது இருக்கும் முதியவனைப் பார்த்துக் கேட்கிறாள். தலை மயிர் முழுவதும் கொட்டிப் போய் கண்ணுக்கு அடியில் வாயின் ஓரங்களில் எல்லாம் சுருக்கம் விழுந்து, யார் இந்தப் பெரியவர் என்று நினைத்தபடி கண்களில் 'நீர் யார்' என்ற கேள்வியைத் தேக்கியபடி அவரைப் பார்க்க,

''வந்தும்மா... நான் ஐயா ஆபீசிலே வேலை பண்றேங்க. அடுத்த வருஷம் ரிடையர் ஆயிடுவேனுங்க.''

''சரிப்பா. அதெல்லாம் எங்கிட்ட ஏன் சொல்றே? ஐயா இங்கே இல்லே. ஆபீசுக்குப் போயிருக்காரு'' அனுபமா கூற.

''இல்லைங்க, ஐயாதான் அனுப்பிச்சாரு. நேத்துதான் வந்தோம். வீட்டுலே சாமான் செட்டெல்லாம் க்ளீன் பண்ணி வைன்னு சொன்னாரு. வீட்டு வேலை செய்யறவங்களைக் கூட ஏற்பாடு பண்ணச் சொன்னாரு. நாளைக் காலை வேலை செய்யறவங்களைக் கூட்டிகிட்டு வந்துடறேன்.''

அவன் சொல்லச் சொல்ல அனுபமாவிற்கு பயம் வந்தது. இந்தக் கிழவன் யாரோ எவரோ? உள்ளே வந்து மண்டையில் ஒன்று போட்டு இருக்கும் சாமான்களைத் தூக்கிக் கொண்டு போய் விட்டால்...

''கொஞ்சம் இருப்பா, ஐயாவிற்கு போன் பண்ணிக் கேக்கறேன். அவங்களைக் கேக்காம யாரையும் வேலைக்கு வச்சுக்க முடியாது. கதவைச் சாத்திவிட்டு செல்போனில் கணவனைத் தொடர்பு கொள்கிறாள்.

''ஏங்க ஏதோ ஒரு கிழவன் வந்திருக்கானே...''

''ஆமாம். நான்தான் அனுப்பிச்சேன். அவனை வச்சுகிட்டு ஸ்க்ரீன் மாட்டி, கட்டிலை எல்லாம் மாட்டி, சோபாவை பிரிச்சுப் போட்டு எல்லாம் செய்.''

வந்தவனை உள்ளே அழைத்து வேலைகளை ஆரம்பித்தாள். வயதானவன் ஆனதாலோ என்னவோ சற்று மந்தமாகத்தான் வேலை செய்கிறான். கண் சரியாகத் தெரியவில்லையோ என்னவோ, ஓட்டை இருக்கும் இடத்தில் ஸ்குரூவை திருகாமல் வெளியே மணிக்கணக்காக



ஸ்குரூவைத் திருகிக் கொண்டு இருக்கிறான். எத்தனை முறை கூப்பிட்டாலும் ரொம்ப நேரம் கழித்து 'என்னம்மா' என்கிறான். 'காது கேக்கலைம்மா' என்கிறான்.

'சே! என்ன மனுஷன் இவர். உதவிக்குன்னு இப்படிப்பட்ட ஆளையா அனுப்புவாங்க?' எரிச்சல் அடைகிறாள்.

ஒரு வழியாக சாமானைப் பிரித்துப் போட்டு சுத்தம் செய்து கதவுக்கெல்லாம் ஸ்க்ரீன் கட்டி, கூட வந்த ஆளைவிட அனுபமாதான் மாய்ந்து மாய்ந்து வேலை செய்கிறாள்.

சில இடங்களில் சுவற்றில் ஆணி அடிக்க வேண்டும் என்றவன் ஆணியை வைத்து அடித்து சுவற்றை ஓட்டை யாக்கி விட்டான். ''இதில் ஆணி இறங்காது அம்மா. டிரில் பண்ணிதான் ஆணியை இறக்க முடியும்.'' என்றான்.

ஒரு வழியாக சாமான்களைப் பிரித்து ஷெல்பில் அடுக்கி, எலக்ட்ரீஷியனை வரவழைத்து ஃபேனை மாட்டி பல்புகளை மாட்டி என்று அனுபமாதான் லோல்பட்டுக் கொண்டிருந் தாள்.

சுமார் மூன்று மணிக்கு கணவன் நாகராஜே வந்து விட்டான்.

''என்ன அனு சுவரெல்லாம் பூகம்பம் ஏற்பட்ட பூமியோட மேல்பகுதியாட்டம் இருக்கு.''

''ஆமா நல்லா அனுப்பிச்சீங்க. ஆணி அடிக்கறேன்னு ஹால் சுவர், பெட்ரூம் சுவர், சமையல் ரூம் சுவர் எல்லாம் நாசம் பண்ணிட்டான். இத்தனை அடிச்சும் ஆணி இறங்கலே சுவர்தான் பள்ளமா போச்சு.''

''சரி விடு. இவன் ஒரு பியூன்தான் இருக்கான். இன்னும் ரெண்டு பேர் லீவுலே போயிருக்காங்களாம்'' என்றவன்,

''சரி ஓட்டல்லே சாப்பாடு எடுத்துட்டு வந்துடச் சொல்றேன். நாளைக்கு வேலைக்கு ஆளை கூட்டிகிட்டு வந்துடச் சொல்லி இருக்கேன். செட்டில் ஆயிடுவோம்'' என்று புன்னகைத்தவாறே பாக்கி வேலைகளை முடிக்கிறான்.

''ஏங்க அஞ்சு மணிக்கு ஓட்டலுக்கு அனுப்பியிருக்கீங்க. இன்னும் வரலியே.''

சற்று கவலையுடன் எட்டிப் பார்த்தவாறே கேட்கிறாள் அனுபமா. இவர்கள் இருக்கும் பகுதியே ஊருக்கு வெளியே எத்தனையோ கிலோ மீட்டர் தள்ளி வரவேண்டும் என்று நாகராஜ் சொல்லி இருக்கிறான். கம்பெனி தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு இங்கேயே குவார்ட்டர்ஸ் போல் கட்டிக் கொடுத்திருக்கிறது.

நாகராஜ் மானேஜர் பதவியில் இருப்பதால் உயர் அதிகாரிகள் இருக்கும் இடத்தில் இவனின் குடியிருப்பு இருந்தது. ஒரு வீட்டிற்கும், இன்னொரு வீட்டிற்கும் நல்ல இடைவெளியே இருந்தது. ஓவென்று தனியாக யாருமில்லாமல்... அனுபமாவிற்கு இந்த இடமே பிடிக்கவில்லை. மெல்லிய பெருமூச்சு விட,

''என்னாச்சு அனு?'' என்று பெருமூச்சு விட்டபடி நாகராஜ் கேட்க,

''இடத்தைப் பாத்தீங்களா? எப்படி அத்துவானமாக இருக்கு.'' அனு பேச,

''பெரிய பொஸிஷன்னா அப்படித்தாம்மா இருக்கும். ஏன் திருடன் கிருடன் வந்துடுவான்னு பயமா?''

அனுபமா இடி இடி என்று சிரிக்கிறாள்.

''எதுக்கு சிரிக்கறே.'' கணவர் கேட்க,



''ஏங்க காக்கா குருவியே இத்தனை தூரம் எப்படி வரும்னு யோசிக்கும்போது திருடன் வந்துடுவானா? இந்தக் காலத்துலே எல்லாமே சுலபமாக இருந்தாத்தான் செய்யறாங்க.''

நாகராஜ் பதில் சொல்லவில்லை. வயிற்றைப் பசி கிள்ள,

''என்னங்க ஓட்டல் ரொம்ப தூரம் போகணுமா என்ன? இன்னும் ஏன் இவன் வரலை. பசி எடுக்குது'' அனு கூற,

''அதுதான் எனக்கும் புரியலை'' என்கிறான் நாகராஜ்.

உள்ளுக்கும் வாசலுக்கும் அலைந்ததில் கடைசியாக எட்டு மணிக்கு வருகிறான், கிழவன்.

''என்னய்யா? இத்தனை லேட்.''

''சாப்பாடே ஆகலைங்க.''

''இப்ப வாங்கிட்டு வந்தியா இல்லையா?''

''ஏங்க இந்த மணிகிட்டே ஒரு வேலையைச் சொன்னா நடக்காம இருந்திடுமாங்க.''

நாகராஜ் ஒன்றும் சொல்லாமல் பையை அனுபமாவிடம் தர,

''என்னது வெயிட்டே இல்லை'' என்றவாறே திறந்தவள் 'கொக்கொக்' என்று பெரிதாகக் கத்திக் கொண்டு கோழி கீழே விழுவதைப் பார்க்கிறாள். கால்கள் கட்டப்பட்டதால் இறக்கையை பலமாக அடித்து அடித்து கத்துகிறது கோழி.

கோழி விழுந்த வேகத்தில் அனுபமா அலறுகிறாள். அது துடிப்பதைப் பார்க்க பாவமாக இருக்க, சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கால் கட்டை கட் பண்ணி விடுகிறாள். கோழி பெரிதாகக் கத்திக் கொண்டு வீட்டினுள்

இங்கும் அங்கும் ஓடிற்று. சற்று பயந்தவாறே அனுபமா ஓட, அவள் பின்னாலேயே வருகிறது.

நாகராஜ் கோபத்தோடு கத்துகிறான்.

''என்னய்யா இது? நாங்க சைவம்னு தெரியாது. சமைச்ச உணவு வாங்கிட்டு வான்னா கோழி வாங்கிட்டு வந்திருக்கே.''

''இல்லை சாரு. பை மாறிடிச்சுங்க. சோறு ரெடியாகலே. டிபன் வாங்கி வந்துட்டேன். அம்மாவுக்கும் உங்களுக்கும் தோசையும் இட்லியும் வாங்கிட்டு வந்திருக்கேன்'' சொல்லிவிட்டு அவன் வேறு பொட்டலத்தைத் தருகிறான்.

இதற்குள் பின்பக்கம் திறந்திருந்த கதவு வழியாக கோழி மறைய, ''என்னம்மா என் கோழி எங்கேம்மா?'' தலையைச் சொறிந்து கொண்டு கேட்கிறான்.

''தெரியலையேப்பா'' அனுபமா பதில் கூற.

''என்னம்மா இப்படி சொல்லறீங்க? இந்தக் கோழிக்கு நூறு ரூபா கொடுத்து வாங்கிட்டு வந்தேன்.''

''என்னது நூறு ரூபாயா?''

''இது விடைக் கோழிம்மா.''

''என்னங்க இது?''

''யோவ் பின்னாடி தான் போச்சு. போய்ப் பாரு.''

நாகராஜ் எரிச்சலுடன் கூற,

''என்னங்க ஐயா இங்கே போய் எங்கே தேடறது? இருக்கற ரூபாயெல்லாம் போட்டு வாங்கி வந்தேன். பொண்ணு முழுகாம இருக்குங்க. அதுக்குதான் வாங்கிட்டு வந்தேன். நாளைக்கு வீட்டுலே விசேஷம். உறவு முறை



வந்திடுமே. நான் என்ன செய்வேன்'' கிழவன் புலம்ப ஆரம்பிக்க,

''இந்தாப்பா வாங்கிட்டு போ'' நாகராஜ் நூறு ரூபாயைக் கொடுத்து கிழவனை அனுப்பிவிட்டு கதவைச் சார்த்திவிட்டு வர,

வெளியே வந்த மணி, ''ப்ப... ப்ப...'' என்று குரல் கொடுக்க வெளியே மேய்ந்து கொண்டிருந்த கோழி குடுகுடுவென்று ஓடி வருகிறது.

''நூறு ரூபா சம்பாதிச்சு கொடுத்துட்டடா'' என்றவாறே கோழியைத் தடவியவாறே தூக்கிச் செல்லுகிறான் மணி.

''ஏங்க இப்படி ஏமாந்து போய் ரூபா தந்துட்டீங்க.''

''விடு. எப்படியும் வீட்டுலே வந்து வேலை செய்திருக்கான். அதுக்கு கொடுத்ததா நினைச்சுக்க வேண்டியதுதான்.''

'சே...' என்று மனதிற்குள் திட்டியவள்,

''வா சாப்பிடுவோம்'' என்று கணவன் கூற,

தோசைப் பொட்டலத்தைப் பிரிக்கிறாள். மசால் தோசையில் மசாலா இல்லை. ஒரு ஓரத்தில் சட்னி மட்டும் வைக்கப்பட்டு இருந்தது. சாம்பார் பொட்டலம் கூட இல்லை. உள்ளே உருளைக்கிழங்கு வைத்ததன் அடையாளம் இருந்தது. ஆனால் உருளைக்கிழங்கை காணவில்லை.

''கிழவன் எல்லாத்தையும் எடுத்திருக்கான். எதுக்குங்க இவனைப் போய் வாங்கிட்டு வரச் சொன்னீங்க. நம்மளே ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டிருக்கலாம்.''

''இல்லைப்பா. இன்னிக்கு முதல் நாள் ஒரே டயர்ட். இரு ஆபீசிலே போய் வச்சுக்கறேன்'' என்று ஒரு கெட்ட வார்த்தையால் அவனைத் திட்டுகிறான் நாகராஜ்.

இருவரும் எரிச்சலோடும், ஆத்திரத்தோடும் சாப்பிட்டு முடிக்கும்போது கதவு தட்டப்படும் சப்தம் கேட்க, எரிச்சலோடு எழுந்து போய் கதவைத் திறக்கிறான் நாகராஜ். சற்று பின்பக்கமாகத் தள்ளி இருக்கும் பிளாட்டிலிருந்து அசிஸ்டன்ட் மேனேஜரும், அவன் மனைவியும் வருகிறார்கள்.

''அடடா வாங்க ரகுராம், என்ன..?'' நாகராஜ் சற்று ஆச்சரியத்தோடு வினவ,

''இல்லை சார், இன்னிக்குதான் வந்தீங்க. செட்டில் ஆயிட்டீங்களான்னு பாக்கலாம்னு வந்தேன்'' நாங்க பின் பக்கம்தான் இருக்கோம். ஏதாவது வேணும்னா...''

''குரல் கொடுக்கணுமா?'' அனுபமா கிண்டலாகக் கேட்க,

''இல்லை... இல்லை கால் பண்ணுங்க'' என்றவன் ''லௌட் ஸ்பீக்கர் வச்சு கத்தினாலும் அடுத்த வீட்டுக்குக் கேட்காது. அத்தனை கிட்டே இருக்குது வீடு'' என்று சொல்லி சிரிக்கிறார்.

''சார் நைட்டுக்கு ஏதாவது சாப்பிட்டீங்களா? வாங்கிட்டு வரலாமா?'' அவர் கேட்க,

''இங்கே ஒரே ஒரு ஒட்டல்தான் கொஞ்சம் கிட்டே. ஆனா ஃபுட் ரொம்ப நல்லா இருக்கும்'' ரகுராமின் மனைவி பாமா கூற,

''எது?'' நாகராஜ் கேட்க,

''உடுப்பி ஒட்டல்தான்.''



''அங்கேர்ந்துதான் டிபன் வாங்கிட்டு வந்தான். ஒரு தோசை இருபது ரூபாய்'' நாகராஜ் அலுத்துக் கொள்ள,

''இருபது ரூபாய் கொடுத்தாலும் ஒரு தோசைக்கு அவ்வளவு சைட் டிஷ் யார் கொடுப்பாங்க. அஞ்சு இல்லேன்னா ஆறு சைட் டிஷ் கிடைக்கும்.'' பாமா கூற,

''என்ன சொல்றீங்க?'' என்று விழிக்கிறாள் அனுபமா.

''ஆமாங்க. இன்னிக்கு ஆறு சைட் டிஷ். எங்க பையனுக்கு வாங்கித் தந்தேனே. சாம்பார், தேங்காய் சட்னி, மிளகாய்த் தூள், வெங்காய சட்னி, புதினா சட்னி, கொஸ்து. இத்தனையும் தந்தானே.''

சொல்லச் சொல்ல நாகராஜனும் அனுபமாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அன்று இரவு ''த பாருங்க. இனிமே உங்க பிராடு பியூனை வீட்டுப் பக்கம் அனுப்பாதீங்க?'' அனுபமா எரிச்சலோடு கத்த,

''அப்படியெல்லாம் இருக்க முடியுமா? நான் பாத்துக் கறேன். நாளைக்கு வேலை செய்யறவங்க வரணும். ஏதாவது சண்டை போட்டா வேலைக்காரி கிடைக்க மாட்டா. பேசாம இரு'' நாகராஜ் பதில் உரைக்கிறான்.

மறுநாள் ஆறு மணிக்கு அழைப்பு மணி கூப்பிட ஓடிச் சென்று கதவைத் திறந்த அனுபமாவிடம் 'வணக்கம்' என்று சொல்லிவிட்டு ''வேலைக்கு ஆள் கேட்டீங்களே இட்டாந்து இருக்கேன்'' என்று காவிப் பற்கள், ஓட்டை வாய் தெரிய மணி புன்னகைக்க, வேலைக்காரியைப் பார்த்து அதிர்ந்து போய் நிற்கிறாள் அனுபமா.



## 2

பஞ்சான தலை. இடுங்கிய கண்கள். நன்றாக சுருங்கிய கன்னங்கள். சப்பிப் போட்ட மாங்கொட்டை போல் இருந்தாள். கைகளும், கால்களும் சுருங்கிப் போய் பார்ப்பதற்கே பாவமாக இருந்தாள்.

''என்னப்பா இவுங்களா வேலைக்கு வரப் போறாங்க?''

''ஆமாங்கம்மா எங்கக்கா வீட்டோடு இருக்காங்க. வீட்டு வேலை எல்லாம் பிரமாதமா செய்யும். எம் வீட்டுலே எல்லா வேலையும் அதுதாங்க செய்யுது.''

அனுபமாவிற்கு முகத்தில் ஈயாடவில்லை.

''யம்மா என்ன வேலை செய்யணும்?'' கேக்கும்போதே குரல் நடுங்கியது.

''தோ.. ஒரு நிமிஷம் இருப்பா.. என்னங்க'' என்று உள்ளே வந்தவள்,

''என்ன'' படுக்கையில் படுத்தவாறே கண்ணை மூடி படுத்திருப்பவனை எழுப்புகிறாள்.

''என்ன...''

''உங்க ப்யூன்...'' அனுபமா வார்த்தைகளை முடிக்க வில்லை.

சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொள்கிறான்.

''என்னாச்சு? மறுபடியும் கோழியைக் கொண்டாந் துட்டானா?''



அவன் எரிச்சலோடு கேட்க,

''இல்லை'' என்று அவள் சொல்ல,

''பின்னே எதுக்கு அவன் பேரை ஜபிச்சுகிட்டு இருக்கே.

''நான்தான் பாத்துக்கறேன்னு சொன்னேன் இல்லே.''

''ஐயோ அவன் வேலைக்காரியைக் கூப்பிட்டுகிட்டு வந்திருக்கான்.''

''வரட்டுமே என்ன வேலை சொல்லு. எவ்வளவு சம்பளம் கேக்கறாங்கன்னு பாரு'' படுக்கையிலிருந்து எழுந்திருக் காமல் நாகராஜ் கூற,

''ஐயோ கொஞ்சம் வெளியே வந்து பாருங்களேன். ஒரு பழுத்த கிழத்தை கூட்டிகிட்டு வந்திருக்கான். என்ன வேலை செய்ய முடியும்?''

நாகராஜுக்கு கோபம் வந்தது. எரிச்சல் ஆத்திரத்துடன் எழுந்து வருகிறான்.

''வாங்க சாமி.''

''ஏய்யா வேலை செய்யறவங்களை கூப்பிட்டுகிட்டு வாப்பான்னா முதியோர் இல்லத்திற்கு ஆள் கூப்பிட்டுகிட்டு வந்திருக்கே.''

''என்ன சாமி தமாசா பேசறீங்க? எங்க அக்கா மாதிரி வேலை செய்யறவங்க இந்த ஏரியாவிலேயே கிடையாது சாமி. கேட்டுப்பாரு. ஒரு மாசம் செய்யட்டும். பிடிக் கலைன்னா நிறுத்திக்க. முதல்லே வேலையைப் பாரு. அரை மணி நேரத்துல இந்த வேலையை செய்திடும்.''

அனுபமா ஏதோ சொல்ல வாயெடுத்தவள், நாகராஜ் பேசாமல் இருக்குமாறு சைகை செய்ய வாயை மூடிக் கொண்டாள்.

''ஆமா சம்பளம் என்ன கேக்கறே?''

''அறுநூறு ரூபா...''

''என்னது?'' என்று நாகராஜ் எரிச்சலாகக் கேட்க,

''சாதாரணமா அவ்வளவுதான் வாங்கறது. ஆனா சார் உங்ககிட்டே அப்படி வாங்க முடியுமா? முன்னூறு ரூபா தாங்க.''

சொல்லி முடிப்பதற்குள் ''ஏம்மா... பா...த்திரம் எங்கே?'' நீட்டி முழக்கி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கேட்கிறாள் புதியவள்.

எரிச்சலோடு முணுமுணுத்துக் கொண்டே பாத்திரங்களை ஒரு பிளாஸ்டிக் கூடையில் கொண்டு வந்து போடுகிறாள்.

பாத்திரங்களைப் பார்த்ததுமே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறாள் புதியவள்.

''என்னம்மா தாயி.

''ஒரு நாளைக்கு இத்தனை பாத்திரமா உபயோகப் படுத்துவே?''

அனுபமாவிற்கு ஆத்திரம் வந்தது. 'இந்தப் பியூன் யார்? எதற்காக தங்களை இப்படி மாட்டி விட வேண்டும். நாளைக்கே இதன் சீட்டைக் கிழிக்க வேண்டும்' என்று எண்ணியவாறு உள்ளே போக,

''ஏம்மா பவுடரு, சோப்பு எதுவும் இல்லையா?'' கேட்க,

சபீனாவைக் கொண்டு வந்து தருகிறாள். பக்கெட்டில் தண்ணீரைப் பிடித்து பாத்திரங்களைக் கழுவுகிறாள். ஒரு பக்கம் குழாய் திறந்தது திறந்தபடி இருக்க, இன்னொரு பக்கம் பக்கெட் நிரம்பி வழிந்து தண்ணீர் போய்க் கொண்டிருந்தது.



''ஏம்மா தாயி தண்ணியை வேஸ்ட் பண்ணாதேம்மா.''

அனுபமா கெஞ்சாத குறையாகக் கூற,

''களுவறேன் இல்லே. ஒண்ணும் வேஸ்ட் ஆவலே. நீ போ'' என்கிறாள்.

காலையில் காபியும் மிச்ச மீதி இருந்தால் தருவதாக பேச்சு. சுடச் சுட காபியைக் கலந்து தர,

''யம்மா அத்தை அப்படி வை. ஒரே சூடு'' என்றவாறு ஆற வைக்கிறாள். ஆற வைத்தாள். பாத்திரங்களை அப்படியே போட்டுவிட்டு ஆற்றிக் கொண்டிருக்கிறாள். தண்ணீர்பாட்டுக்கு போய்க் கொண்டிருக்க, காபியை உறிஞ்சி உறிஞ்சி குடிக்கிறாள்.

ஒரு வழியாக காபியைக் குடித்துவிட்டு பாத்திரங்களைக் கழுவித் தள்ளிவிட்டாள். பிறகு கிழவியை பெருக்கச் சொல்கிறாள் அனுபமா. பெருக்கினாலும் அங்கங்கே குப்பைகள் விடுபட, ''ஏம்மா படிய பெருக்கும்மா. எதைச் செய்தாலும் சுத்தமா செய்யணும். குப்பை அப்படியே இருக்கு பாருங்க'' அனுபமா கூற தன் வெளிறிப்போன கண்களால் இவளையே பார்த்தாள் கிழவி. மடமடவென்று கண்கள் கலங்கிப்போக அனுபமா நடுங்கிப் போகிறாள்.

'சனியன் இதை இரண்டு நாள் கூட வைத்திருக்கக் கூடாது' நினைத்துக் கொள்கிறாள் அனுபமா.

துணிகளை சோப்பு போட்டு ஏற்கனவே ஊற வைத்திருந்தாள் அனுபமா. ஒரு பத்து நிமிடத்தில் தோய்த்து போட்டு விட்டு காயப் போட்டிருந்தாள். அழுக்குகள்

அப்படியே இருக்க, துணி சுருக்கம் சுருக்கமாக காயப் போடப்பட்டிருந்தது. மனதிற்குள் கிழவியைத் திட்டியவாறே துணிகளை ஒழுங்காகப் போடுகிறாள் அனுபமா.

தேய்த்த பாத்திரங்களில் பத்தே போகாமல் அங்கங்கே கறையோடும், எண்ணெய் பிசுக்கோடும் இருக்க பயங்கர கோபம் வந்தது அனுபமாவிற்கு. இதற்குள் கணவனுக்கு காலை இட்லியை செய்து கொடுத்து அனுப்ப, தானும் உண்டு மிச்சம் இருந்த மூன்று இட்லிகளை சிறிது மிளகாய்த் தூள் போட்டுத் தர, உம்மென்று சாப்பிடுகிறாள் கிழவி.

அவள் கிளம்பிச் சென்றவுடன், பாத்திரத்தை இன்னொரு முறை தேய்த்து வீட்டையும் சுத்தமாகப் பெருக்கி எல்லாவற்றையும் சுத்தமாக வைத்த பின்தான் அனுபமாவிற்கு மூச்சே வந்தது. இரவு உள்ளே நுழைந்த நாகராஜ் சந்தோஷத்தோடு கேட்கிறான்.

''பரவாயில்லையே கிழவியா இருந்தாலும் வீட்டை எத்தனை சுத்தமா வச்சிருக்கா. பாத்திரமெல்லாம் பள பளன்னு மின்னுது. பரவாயில்லையே.''

''வெப்பா... மொத்தமும் நான்தான் சுத்தப்படுத்தி வச்சிருக்கேன்.''

''என்னது?''

''ஆமாங்க. பாத்திரம் எல்லாம் அப்படியே சாப்பாடு எல்லாம் ஒட்டிகிட்டு இருந்தது. வீட்டை மறுபடியும் பெருக்கித் துடைச்சேன். துணியெல்லாம் உதறிப் போட்டேன். வேலைக்காரி கேட்டா இப்படியா கொண்டு வந்து விடுவான் உங்க பியூன்'' அனுபமா வெடிக்க, ஒரு நிமிடம் விழித்தவன்,



''சரி.. சரி.. ஒரு வாரம் போகட்டும். நாம நிறுத்திக்கலாம்'' என்கிறான்.

மறுநாளும் இதே கதைதான். ''இதப் பாரும்மா, முதல்லே இந்த பாத்திரத்தை ஒழுங்கா தேச்சு வை'' என்று மறுபடியும் பாத்திரத்தை அனுபமா போட, கொடுத்த காபியைக் கூட குடிக்காமல் பிழியப் பிழிய அழுகிறாள் கிழவி. அனுபமா அதிர்ந்து போகிறாள். எரிச்சலும் வேதனையும் பிடுங்கித் தின்றது. பேசாமல் உள்ளே போய் தன் அறையில் உட்கார்ந்து கொள்கிறாள்.

படுக்கை அறையில் அனுபமா உட்கார்ந்தது தெரிந்ததும், சட்டென்று கண்ணைத் துடைத்துக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்த கிழவி பாத்திரத்தை உள்ளே கொண்டு வைத்து விட்டு மடமடவென்று பெருக்கித் துடைத்து விடுகிறாள். அனுபமா வெளியே வருவதற்குள் துணியைத் துவைத்துப் போட்டாகி விட்டது.

மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தவள்,

''யம்மா.. யம்மா.. நான் கிளம்பறேன்..'' குரல் கேட்டு விருட்டென்று எழுந்து வருகிறாள்.

''என்ன கிளம்பறே? வேலையை முடிச்சிட்டியா?''

''ம்..'' என்று தலையை லேசாக ஆட்டுகிறாள். இரண்டு முறை இருமிவிட்டு, நெஞ்சை பிடித்துக் கொள்கிறாள்.

''முடிச்சிட்டேன்.. வரேன்.''

''என்னது முடிச்சிட்டியா?'' அனுபமா பார்ப்பதற்குள் இறங்கி மறைகிறாள்.

அனுபமா அவசரம் அவசரமாக உள்ளே போய் பார்க்கிறாள். இவள் போட்ட பாத்திரங்கள் மறுபடியும் அதே

பிசுபிசுப்புடனும் சோற்றுப் பருக்கைகள் ஒட்டிக் கொண்டு அப்படியே திருப்பி வைக்கப்பட்டு இருந்தது.

வீட்டில் நறநறவென்று மண் ஒட்டிக் கொண்டிருந்தது. விறுவிறுவென்று பின்னால் போய் பார்க்கிறாள். துணிகளெல்லாம் சுருக்கத்தோடு போடப்பட்டிருந்தது. துணிகள் வேறு மிக மிக அழுக்காக இருக்க, மறுபடியும் சோப்பு போட்டு துவைக்கிறாள் அனுபமா. வீட்டைச் சுத்தமாக பெருக்கிவிட்டு, துடைத்துப் பாத்திரத்தை சுத்தமாகக் கழுவிவிட்டு நிமிர்ந்தபோது மணி பன்னிரண்டு அடித்தது. 'கிழவி நன்றாகவே ஏமாற்றுகிறது. இனிமேல் ஏமாறக் கூடாது.' நினைத்தவள் 'நாளை வரட்டும்' என்று கறுவிக் கொள்கிறாள்.

அடுத்த நாள் கிழவி வரும் போதே ஏகப்பட்ட தைலத்தை தடவிக் கொண்டு வந்தது. மூக்கை உறிஞ்சுக் கொண்டு வர, பார்க்கையிலேயே எரிச்சல் வந்தது அனுபமாவிற்கு. இரவு வந்த கணவனிடம் கிழவி செய்யும் ஏமாற்றுகளை சொல்லி சொல்லி புலம்புகிறாள் அனுபமா.

''இதப் பாருங்க. உங்க ப்யூன்கிட்டே சொல்லிடுங்க. வேலைக்கே ஆள் வேண்டாம். இது என்னோட தண்ட வேலை. மறுபடியும் மறுபடியும் நான் செய்ய வேண்டியிருக்கு.''

''சரி.. காலையில் வரட்டும் நான் பேசிக்கறேன்'' என்றவன், காலையில் கிழவி வந்த நிலைமையைப் பார்த்து அதிர்ந்து போகிறான். எதுவும் பேசத் தோன்றாமல் விழிக்கிறான்.

''தாயி நீ கிளம்பும்மா. உடம்பு சரியில்லை. நாளைக்கு வாம்மா. நான் பாத்துக்கறேன்'' அனுபமா சொல்ல,



''உன்னைய கஷ்டப்படுத்திட்டு நான் போவேனா. இந்த உடல்லே உசிர் இருக்கறவரைக்கும் உழைச்சிட்டுதான் போவேன்.''

''இல்லை பாட்டிம்மா நீங்க கிளம்புங்க. நாங்க பாத்துக்கறோம். உங்க உடம்பு சரியில்லை. நீங்க வீட்டுலே போய் ஓய்வு எடுத்துக்கங்க.''

''உயிர் இருக்கற வரைக்கும் உனக்கு உழைச்சிட்டுப் போவேன்.''

மெதுவாக நடந்து சாமான்களை எடுத்துப் போட்டுக் கொண்டு தேய்க்க, ஆத்திரத்துடன் முணுமுணுக்கிறாள் அனுபமா.

''உசிர் போனாலும் நல்லாதான் இருக்கும்.''

அன்றும் பாத்திரங்களை சரியாக விளக்காமல் போக,

''த பாரும்மா. இந்த பாத்திரங்களை எல்லாம் சுத்தமாக கழுவு.''

''இத்தைவிட எப்படி கழுவுவாங்க'' ஒரு பாத்திரத்தை டப்பென்று போட,

''இத பாரும்மா ஒழுங்கா வேலை செஞ்சா செய். இல்லேன்னா கிளம்பு.'' எரிச்சல்பட்டு கத்துகிறாள் அனுபமா.

கண்ணீரோடு அழுது கொண்டே வேலை செய்கிறாள் கிழவி.

''என்னதான் கூலி வேலை செய்யரோம்னாலும் இப்படியா? சதா இது சரியில்லை, அது சரியில்லைன்னு யாராவது இப்படி சொல்லிகிட்டே இருப்பாங்களா? எல்லாம் என் தலையெழுத்து. இல்லாத கொடுமைக்கு வேலைக்கு வந்தா இதுவும் வேணும்.. இன்னமும் வேணும்.''

"இத பாருங்க.. இப்படி இருந்தா ஒண்ணும் ஆகாது. நீங்க தயவு செய்து அந்த பியூன் கிட்ட சொல்லிடுங்க. இந்தக் கிழவி வேண்டாம்."

"இன்னிக்கு பேசறேன். நாளைக்கு நல்ல ஏற்பாடு பண்றேன்." நாகராஜ் சொல்லிவிட்டுப் போனவன், மாலை வந்து 'பியூனிடம் பேசி விட்டதாகவும், பியூன் அதற்கு தகுந்த ஏற்பாடு செய்வதாக சொல்லிருக்கான்' என்று சொல்ல நிம்மதிப் பெருமூச்சு விடுகிறாள் அனுபமா.

அடுத்த நாள் வழக்கம் போல் காலை கதவைத் தட்ட, வேலை செய்யும் கிழவியுடன், இன்னும் பாவமாக மிக மிக வயதானவளாக ஒரு கிழவி நிற்க அதிர்ந்து போய் நிற்கிறாள் அனுபமா.

## 3



"நீ யாரும்மா?" அனுபமா சற்று திடுக்கிடலோடு சொல்ல,

"நான் இவ அம்மா. சரியா பெருக்கறது இல்லை, பாத்திரம் தேய்க்கறது இல்லே, துணி தோய்க்கறது இல்லேன்னு சொன்னியாமே. சரி கொஞ்ச நாட்கள் பெண்கூட வந்துட்டுப் போறேன். உம் வேலை எல்லாம் கரீக்டா நடக்கும்."

கிடுகிடுவென்று உள்ளே வந்தவள் கணவனை எழுப்புகிறாள். "என்னங்க நீங்க எழுந்திருங்க." ஆழ்ந்த



உறக்கத்தில் இருந்த நாகராஜும் திடுக்கிட்டுப்போய் எழுந்திருக்கிறான்.

"என்ன?" சற்று எரிச்சலுடன் கேட்க,

"அங்க வந்து அந்தக் கண்றாவியைப் பாருங்க."

"உன்னோடு பெரிய தொல்லையா போச்சுடி."

எரிச்சலுடன் எழுந்து வருகிறான். ஏற்கனவே கிழவியின் பக்கத்தில் இன்னும் தொண்டு கிழமாக ஒன்று நிற்க ஆத்திரம் தான் வந்தது.

"ஏம்மா என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க? வேற சின்ன பசங்க வந்து வேலை செய்யாதா?"

"என்ன சாமி. இப்டி கேக்கறே? இந்த ஊர் முச்சூடும் கேட்டுப் பாரு. தனம்மா எப்படின்னு கேளு? வேலை அத்தினி கரெக்டா இருக்கும். இத ஏன் நான் சொல்லணும். ஒரு நாலு நாள் நான் வேலை செய்யறதைப் பாரு. அப்பவும் என்னையத் தவிர யாரையுமே வச்சுக்க மாட்டே."

"த... பாரு... நீயாச்சு. உன் வேலைக்காரியாச்சு. மனுஷனை இனிமே தொந்தரவு பண்ணாதே" மறுபடியும் போய் படுக்கையில் விழுந்தான் நாகராஜ்.

'சரி பார்ப்போம். இன்னும் ஒரே வாரம். இது மட்டும் ஒழுங்கா இல்லாம இருக்கட்டும். கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிடறேன்' கறுவிக் கொண்டு உள்ளே போகிறாள் அனுபமா.

அனுபமா உள்ளே போவதற்கும் இரண்டு கிழவிகளும் உள்ளே சென்று ஒருத்தி பாத்திரம் தேய்க்கிறாள். இன்னொருத்தி பெருக்குகிறாள்.

''என்னம்மா பாத்திரம் எல்லாத்திலேயும் அப்படியே அழுக்கு இருக்கு.''

அனுபமா தேய்த்த பாத்திரங்களை மறுபடியும் கொண்டு வந்து போட, ''ஏம்மா இது ஞாயமா? எனக்கு இன்னா வயசு இருக்கும் தெரியுமா? எண்பது வயது. வயித்துப் பாட்டுக்காக உங்க வீட்டுக்கு வந்து வேலை செய்தா இப்படியா?''

எரிச்சலுடன் கிழவி கத்த, ''த பாரு.. இந்தக் கதையெல்லாம் வேணாம். ஒழுங்கா தேய்க்கறதுன்னா தேய், இல்லேன்னா கிளம்பு'' அனுபமா கறாராகச் சொல்ல, பாத்திரத்தை இப்படியும் அப்படியும் கீழே தேய்த்து எடுத்து வைக்கிறாள் தனம்.

''இத பாரு வீடெல்லாம் சுத்தமா பெருக்கினா இரு. இல்லேன்னா கிளம்பு.'' அதற்குள் கிழவியின் பெண் துணி துவைத்து இருக்கிறாள்.

''இது என்ன இத்தனை அழுக்கா தோச்சு இருக்கே?'' வள்ளென்று விழுகிறாள் அனுபமா.

''இன்னிக்கு தண்ணி வரும். துணியை ஒழுங்காத் தோச்சுப் போட்டு தொட்டியிலே தண்ணியை ரொப்பிட்டு போ.''

அனுபமா சொல்லச் சொல்ல, எதிரியைப் பார்ப்பது போல் பார்க்கிறாள் தனம்.

கணவனை அலுவலகத்திற்கு அனுப்பி விட்டு உள்ளே வந்த அனுபமா தனம் முறைப்பதைப் பார்த்து ஆச்சரியப் படுகிறாள். இருவரும் தூக்க முடியாமல் கால் குடம் அரை குடம் பிடித்து தொட்டியை ரொப்பிக் கொண்டிருந்தனர்.



''நீ எல்லாம் என்ன மனுஷி. எம் பொண்ணு பாவம் களைச்சு உளைச்சு ஓடாயிடுச்சு. அதைப் போய் வேலை வாங்கறியே. அதுங்கையப் பாத்தியா?'' நடுங்கும் எலும்புக் கூட்டைக் காண்பிக்கிறாள். ஒரு எலும்புக்கூடு இன்னொரு எலும்புக் கூட்டைப் பிடித்துக் கொண்டிருப்பது போல இருந்தது. ''அதுக்கு என்ன வயசுன்னு நினைக்கறே. எளுபது முடிஞ்சு போச்சு. எனக்கு எம்பத்திரண்டு ஆச்சு. இந்த வயசுலே நீ உசிரோட இருந்துடுவியா? ஏதோ வயத்துப் பாட்டுக்கு வரோம். மனசுலே கருணை வேணாம்.'' வள்ளென்று விழுகிறாள் தனம்.

அனுபமா அதிர்ந்து போகிறாள். ஒரு நிமிடம் விழித் தாலும் அடுத்த நிமிடம் சுறுசுறுவென்று கோபம் தாக்க வள்ளென்று விழுகிறாள்.

''இத பாரும்மா. வேலைன்னு வந்துட்டா வேலை செய்யணும். வயசாச்சின்னா வீட்டிலேயே உக்காந்துக்க. வராதே, உனக்கு தண்டத்துக்குச் சம்பளம் தர முடியாது.''

''என்னாம்மே எங்கம்மாகிட்டே போய் தண்டம் கிண்டம்னு பேசறே? மருவாதை. ஏதான மருவாதைக் குறைவா சொன்னா நாக்கை இளுத்து வச்சு அறுத்துடுவேன். யம்மா நீ கிளம்பு. இந்தப் பொம்பளைகிட்ட நாம்ப ஏன் வேலை செய்யணும்?'' முறைக்க, பின்னும் அதிர்ந்து போகிறாள் அனுபமா.

''சரி கிளம்பு வெளியே போ'' அவள் கத்த,

''த... கூவாதே. போறோம். துட்டை எண்ணி வை'' தனம் கூற.

''யம்மா இதுகிட்டே நாம ஏன் பிச்சை கேக்கணும்'' சாமிகிட்டே வாங்கிப்போம். அஞ்சு நாள் துட்டு.''

''ஏய்.. ஏய் வேலை செஞ்சது. நாலு நாள் தான். அஞ்சு நாள் சம்பளம் தருவாங்களா? ரொம்ப நல்லா இருக்கு?'' அனுபமா பதறிப் போய் பேசுகிறாள்.

''யம்மா.. அதுங்கிட்டே என்னம்மா பேச்சு? அண்ணன் கிட்டே சொல்லி சாமிகிட்டே வாங்கிப்போம். சாமி நல்லவரு.''

அவள் சொல்லச் சொல்ல சட்டென்று அவர்களை வெளியே அனுப்பி கதவை மூடுகிறாள் அனுபமா.

'ஏழைகளில் நல்லவர்களே கிடையாதா? எப்படி எல்லாம் ஏமாற்றுகிறது. அநியாயம், சாதாரண நாணயம்கூட ஒருவருக்கும் கிடையாதா? சே..' அலுத்துக் கொள்கிறாள் அனுபமா.

'ஏழைகள் என்றால் ஏமாத்தத்தான் வேண்டுமா? சே!' நினைத்தவள் கணவன் வருகைக்காகக் காத்து நிற்கிறாள்.

அன்று வரும்போதே கடுகடுத்தான் கணவன். ''என்ன பண்ணி வச்சிருக்கே?''

''என்னங்க?''

''ஆபீசே நாறிடிச்சு. அந்த வேலைக்காரிங்க ரெண்டு பேரும் ஆபீசுக்கு வந்து ஒரே அமர்க்களம். அப்புறம் அம்பது ரூபா கொடுத்து அனுப்பிச்சேன்.''

''ஏங்க நாலு நாள் தானே வந்தாங்க.''

''ஒழியட்டும். நான்தான் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ பதமா, நிறுத்திக்கலாம்னு சொன்னேன் இல்லை. சண்டையா போடுவே.''

''ஆமா என்னைத்தான் சொல்லுவீங்க?'' அனுபமா புலம்ப,



''அம்மாவும் பொண்ணும் வந்ததிலேருந்து ஒரே சண்டை ரொம்ப கேவலமா பேசி, போதும் போதும்னு ஆச்சு. பியூனை பிடிச்சு கொஞ்சம் எச்சரிக்கை செய்யவேதான் அடங்குச்சு.'' நாகராஜ் பெருமூச்சு விட்டவாறே கூறுகிறான்.

அடுத்த நாள் சற்று காலையில் எழுந்து அனுபமா பரபரவென்று வேலைகளை முடிக்கிறாள். பின் வீட்டில் இருக்கும் அஸிஸ்டன்ட் மேனேஜரின் மனைவி வந்து கூப்பிடுகிறாள்.

''வர்றீங்களா? கொஞ்ச தூரத்திலே மார்க்கெட் இருக்கு பார்த்துட்டு வருவோம்.''

''வரேன்'' என்றவள் பின் அரை மணி நேரம் பொறுத்து கிளம்பி அஸிஸ்டன்ட் மேனேஜரின் மனைவியோடு கிளம்புகிறாள்.

மார்க்கெட்டிற்குப் போய் வேண்டிய காய்கறிகள் சாமான்கள் வாங்கித் திரும்பும்போது, எதிர்ப்படுகின்றனர் காலையில் வேலை செய்த தனமும் அவள் மகளும்.

''ஏம்மா எப்படி இருக்கீங்க?'' என்று பின் வீட்டுக்காரியை விசாரித்தவர்கள், அனுபமாவைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள்.

''ஏம்மா இத்தோட போய் என்ன? பத்தரம்.'' அனுபமாவின் காதுபடவே விமரிசித்தார்கள். அனுபமாவிற்கு அவமான மாக இருந்தது. 'சே! என்ன மட்டமான ஜனங்கள்.' லேசான அவமானத்தோடு அனுபமா மௌனமாக இருக்க,

''என்னாச்சு மேடம்?'' அஸிஸ்டன்ட் மேனேஜரின் மனைவி பாமா கேட்க,

மெதுவாக எல்லா விஷயத்தையும் சற்று எரிச்சலோடும் ஆத்திரத்தோடும் சொல்கிறாள் அனுபமா.

''ஐயோ நீங்க வேற இங்க வேலை செய்யறது எல்லாம் சரியான ஆளுங்க. கொஞ்சம் ஏமாந்தா மிளகாய் அரைச்சிடும். எங்க வீட்டு வேலைக்காரிக்கு தங்கை இருக்கு. சின்ன வயசுதான். வேலை வேணும்னு கேட்டுட்டு இருந்தது. நான் சாயங்காலமா அனுப்பி வைக்கறேன்.''

அனுபமா நன்றியோடு பாமாவைப் பார்த்து 'தேங்க்ஸ்' என்கிறாள்.

அன்று மாலை பாமாவே வேலைக்காரியை அழைத்து வந்து விட்டாள். இருபத்து ஐந்து வயது இருக்கலாம். தலையை நன்றாக வாரிப்பின்னி ஏர்ப்பின் குத்தி இரண்டு முழம் பூ வைத்துக் கொண்டு சிரித்தபடி வந்து நிற்கிறாள்.

அவளைப் பார்த்ததுமே அனுபமாவிற்கு பிடித்துப் போய் விட்டது. ''சம்பளம் எல்லாம் கூட பேசிட்டேன். அதே முந்நூறு ரூபாய் கொடுத்திடுங்க. கடை, கண்ணிக்கு எல்லாம் கூட போகணும்னு சொல்லிட்டேன்'' பாமா சொல்லச் சொல்ல நன்றியோடு கைகளைப் பிடித்துக் கொள்கிறாள் அனுபமா.

''ரொம்ப தேங்க்ஸ் பாமா.''

''இதுக்கென்ன நீங்க வேற. ஒருத்தருக்கு ஒருத்தர் இருக்கோம். இந்த ஒரு உதவி கூட இல்லாம என்ன?''

அடுத்த நாள் காலையிலிருந்து வருவதாகச் சொல்லி விட்டுப் போகிறாள் புதியவள். புதிதாக வேலைக்கு என்று வந்தவளின் பெயர் கிரிஜா என்று சொன்னார்கள்.

காலையில் மடமடவென்று வீட்டிற்கு வந்து வாயிலைக் கழுவித் தள்ளி கோலம் போட்டு, பாத்திரங்களைத் தேய்த்து, துணி தோய்த்து என்று பரபரவென்று செய்கிறாள். உடல் செய்தாலும் முகம் புன்சிரிப்போடு பூரித்துப் போய்



ஒவ்வொரு வேலையாகச் செய்ய காபியைக் கலந்து வைக்கிறாள் அனுபமா. டிபனில் கூட மீந்து போயிருந்த நான்கு இட்லிகளை எடுத்து கிரிஜாவுக்குத் தருகிறாள். கொஞ்சம் சாம்பார் ஊற்றித் தர, ''ரொம்ப சூப்பரா இருக்கும்மா'' என்று சொல்லியவாறே வேலைக்காரி சாப்பிட, அகமகிழ்ந்து போகிறாள் அனுபமா.

''ரொம்ப நல்ல வேலைக்காரி. உங்க அஸிஸ்டன்ட் மேனேஜர் வைஃப் பாமாதாங்க ஏற்பாடு செய்து கொடுத்திருக்காங்க.'' மகிழ்ச்சி தூக்கலிட குதூகலித்துப் பேசுகிறாள் அனுபமா.

நாகராஜன் பெருமூச்சு விடுகிறான். சற்று நிம்மதிப் பெருமூச்சு. ஒரு வழியாக ஒரு நல்ல வேலைக்காரி கிடைத்து விட்டாள். ஒரு வாரம் சென்றது. எந்தவித சங்கடமுமில்லாமல் போனது.

அன்று எங்கோ போக வேண்டுமென்று பாத்திரம் மட்டும் தேய்த்து விட்டுப் போகிறாள். அடுத்த நாள் பத்து மணி வரையில் ஆளே வரவில்லை. 'இன்னும் ஊரிலிருந்தே வரவில்லையா?' யோசிக்கிறாள். 'பாமாவிடம் கேட்டுப் பார்க்கலாமா?' யோசிக்கிறாள். கேட்போம்.

எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு துணியை ஊறப் போடுகிறாள். பாமாவின் வீட்டிற்குப் போய் கேட்டு விட்டுப் பின் துணி துவைக்கலாம்.

எல்லாவற்றையும் பூட்டிவிட்டு, கீழே இறங்கியபோது வேலைக்காரி வந்து நிற்கிறாள்.

''என்னம்மா எங்கே போறீங்க?'' கிரிஜா கேட்க,

''என்ன ஆச்சு? இன்னும் வரவே இல்லையேன்னு யோசிச்சுகிட்டு இருந்தேன். பின்னாடி வீட்டுலே போய் கேட்டுட்டு வரலாம்னு புறப்பட்டேன்.''

''மன்னிச்சிடுங்கம்மா. இன்னிக்குத்தான் நானே ஊரிலேர்ந்து வர்றேன். ஊர்லே ஒரு அலுவல்மா, அதுதான் உடனே வர முடியலே. எல்லா வேலையையும் முடிச்சிட்டீங்களா? இன்னும் பாக்கி இருக்கா?''

''துணிதான் துவைக்கணும்.''

''இருங்க வந்தது வந்தேன். துணியை துவைச்சுக் கொடுத்துட்டுப் போறேன்.''

உள்ளே வந்தவள் மடமடவென்று துணியைத் துவைத்து காயப் போட்டு விட்டு கிளம்புகிறாள். சற்று நிம்மதிப் பெருமூச்சுடன் ஒரு நிமிடம் சந்தோஷப்பட்டாலும் அடுத்த நிமிடம் ஏதோ நெருடியது. 'ஒவ்வொரு வாரமும் இப்படியே நடந்து விடுமோ' லேசான பயம் எழுந்தது.

அடுத்த நாள் காலையில் எழுந்து கணவனுக்கு டிபன் செய்து கொடுத்து கணவனை அனுப்பும் வரை வேலைக்காரி வராமல் போக அதிர்ந்து போகிறாள் அனுபமா.




மணி ஒன்பதை அடித்தது. கணவனும் அலுவலகத்திற்குக் கிளம்பிப் போகிறான். கிரிஜா இன்னும் வரவில்லை. அனுபமா உள்ளுக்கும் வாசலுக்கும் அலைகிறாள்.



கிரிஜாவைக் காணவில்லை. 'எங்கே போனாள்?' ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறாள். 'ஒரு வாரம் நன்றாகத்தானே வந்தாள்? என்னாயிற்று அவளுக்கு? ஏன் இப்படி திடீர் திடீர் என்று மட்டம் போடுகிறது?'

பார்த்துப் பார்த்து தவித்துவிட்டு பின் மெதுவாக வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கிறாள். பாத்திரம் தேய்த்து, துணி துவைத்து விட்டு, வீட்டைப் பெருக்கித் துடைத்து எல்லாம் முடியும் வரைக்கும் யாரும் வரவில்லை. துவைத்த துணியை காயப் போடப் போனபோது காலிங் பெல் ஒலித்தது. 'யார்' என்று நினைத்தவாறே கதவைத் திறந்தபோது கிரிஜா நின்று கொண்டிருக்கிறாள். எரிச்சலும், ஆத்திரமும் வந்தது.

''என்னம்மா இப்ப வந்திருக்கே?'' கோபத்தோடு கேட்கிறாள் அனுபமா.

''இல்லைம்மா கொஞ்சம் லேட்டாயிடுச்சும்மா?''

''கொஞ்சமா? மணி பத்தரை ஆகுது. ஞாயமா?''

''எங்கதையை ஏம்மா கேக்கறே? ஊருக்கு போயிட்டு வந்தவுடனே குடிகாரப் புருஷன் கூடவே வந்துட்டான். வீட்டுலே ஒரே பிரச்சினை. இருக்கவே முடியலே. காலைல குடிச்சிட்டு ஒரே கலாட்டா. எப்படியோ சமாளிச்சிட்டு இப்பதாம்மா ஓடி வந்தேன். வேலை செஞ்சிட்டீங்களா? ஐயோ கொஞ்சம் வெயிட் பண்ணக் கூடாதாம்மா.''

''எத்தனை நேரம் வெயிட் பண்றது? பத்தரை ஆவுது. இன்னுமா வெயிட் பண்றது?''

''மன்னிச்சிக்கம்மா. எல்லாத்தையும் செய்துட்டியா? வேற ஏதாவது பாக்கி இருக்கா?''

''ஒண்ணும் பாக்கி இல்லேம்மா.'' அவள் சொல்லி முடிக்கு முன் உள்ளே எட்டிப் பார்க்கிறாள். ''என்னம்மா துணியை எல்லாம் போடலையா?'' கேட்டவாறு மடமடவென்று உள்ளே நுழைந்து துணிகளை நன்றாக உதறிக் காயப் போட்டுவிட்டு, ''அம்மா தப்பா நினைக்காதே ஒரே தலைவலி. கொஞ்சம் காபி தரயா?'' கெஞ்சிக் கேட்டவுடன், அனுபமா உள்ளே சென்று காபி கலந்து தருகிறாள். காபியைக் குடித்து விட்டு ''ரொம்ப டேங்க்ஸ்மா'' என்ற வாறே கிளம்புகிறாள் கிரிஜா.

அவள் கிளம்பிச் சென்றவுடன் ஏதோ யோசனையாக அவளையே பார்த்தவாறு நிற்கிறாள் அனுபமா.

போன கிரிஜாவைக் கூப்பிடுகிறாள். ''என்னம்மா..''

''இத பாரு நாளைக்கு வரலைன்னா...'' முடிப்பதற்குள் கிரிஜா குறுக்கே பேசுகிறாள்.

''நாளையிலேர்ந்து ரொம்ப கரெக்டா வந்துடுவேன்மா.''

அடுத்த நாள் ஆறு மணிக்கே வந்து விட்டாள் கிரிஜா. பழையபடி பாத்திரம் தேய்த்து, துணி துவைத்து, வீடு பெருக்கி எல்லாவற்றையும் செய்து விட்டு, சற்று கலகலவென்று பேசியபடி கிளம்புகிறாள் கிரிஜா. சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறாள் அனுபமா.

அடுத்த இரண்டு, மூன்று நாட்களிலும் ஓயாத வேலை தான். ஒட்டடைக் கொம்பை எடுத்து ஒட்டடை அடித்துப் பெருக்கி, துடைத்து என்று அனுபமா சொன்ன எல்லா வேலைகளையும் செய்கிறாள் கிரிஜா. அனுபமாவிற்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது. 'பாவம் கிரிஜா நன்றாகத் தான் வேலை செய்கிறாள். முதலில் தனியாக ஒட்டடை



அடித்ததற்கும் சுத்தம் செய்ததற்கும் தனியாக ரூபாய் தர வேண்டும்' என்று எண்ணியவள் பின் மனதை மாற்றிக் கொள்கிறாள். 'இதுதான் இரண்டு மூன்று நாட்கள் வரவே இல்லையே. எக்ஸ்ட்ரா வேலைகளை வாங்கிக் கொண்டால் சம்பளத்தைப் பிடிக்காமல் கொடுத்து விடலாம்' நினைத்துக் கொண்டாள்.

அடுத்த நாள் ரேஷனில் சர்க்கரைக்கு மட்டும் அட்டை இருக்க, சர்க்கரையை வாங்கி வரச் செய்தாள். வீட்டிற்கு வேண்டிய துடைப்பம், அம்மியை, வாஷ்பேஷின் அலம்பும் பிரஷ் எல்லாவற்றையும் வாங்கி வரச் செய்தாள். தேங்காய் ஒன்று வேண்டும் என்றவுடனே, தேங்காயும் வாங்கி வந்தாள் கிரிஜா.

அனுபமாவிற்கு மனம் உருகிப் போயிற்று. 'பாவம் நல்ல வேலைக்காரிதான். எத்தனை வேலை செய்கிறது. கணவனிடம் சொல்லி சிலாகித்தபோது, ''மேலே ரூபாய் வேணும்னாலும் கொடுத்திடு'' என்கிறான் கணவன்.

''பேசாம இருங்க. நீங்களே ஏத்தி விடுவீங்க போலருக்கு. அவுங்களே கேக்கல. கொஞ்ச நாள் இந்த ரூபாயிலே வேலை செய்யட்டும். நிலைச்சு இருந்தா ஒரு வருஷம் கழிச்சி ஏத்திக்கலாம்.''

ஒரு வாரம் சென்றிருக்கும். மறுபடியும் வேலைக்காரி அன்று வரவில்லை. பதினோரு மணி வரைக்கும் காத்திருந்து விட்டு, பின் வேலைகளைச் செய்தாள் அனுபமா.

சரியாக 12 மணிக்கு வந்தாள். ''என்னம்மா வேலை எல்லாம் முடிச்சிட்டியா?'' கேட்க, அனுபமா தாங்க முடியாத கோபத்தில் இருந்தாள். பதிலே பேசாமல் இருந்தாள்.

''என்னம்மா ஆச்சு? ஒரு மாதிரியா கீறே. எல்லா வேலையையுமா செஞ்சுட்டே?''

''ஆமாம்'' என்று தலை ஆட்டியவள்,

''சரி நீ கிளம்பு'' என்று எரிந்து விழுகிறாள்.

''என்னம்மா கோவிச்சுக்கறே? என் புருஷன்...'' ஆரம்பித்தவளை மடக்குகிறாள்.

''போதும் உன்னை அடிச்சானா? குடிச்சானாக்கும். இந்த பொய்யெல்லாம் பேசாதே. ஒரு வாரம் கூட ஒழுங்காக உன்னால வேலை செய்ய முடியாதா?'' அனுபமா கறாராகக் கேட்க, கிரிஜாவின் முகமும் மாறியது. இருந்தாலும் சமாளித்தவாறே கேட்கிறாள். ''என்னம்மா இப்படி பேசிட்டியே?''

''வேற எப்படிப் பேசறது? ஒரு மாதம் ஒழுங்கா உன்னால வேலை செய்ய முடியாதா?''

''எனக்கே ஒழுங்கா செய்யணும்னு ஆசையாத்தாம்மா இருக்கு. நான் என்ன பண்ணுவேன்? சூழ்நிலை'' என்றவாறே நகர்கிறாள் கிரிஜா.

''கிரிஜா... நில்லு. நாளைக்கு வருவியா இல்லையா?''

''கட்டாயம் வருவேன்மா. தேவை இல்லாம லீவு எடுக்க மாட்டேன்'' என்றவள் அடுத்த விடியற்காலையிலே வந்து விட்டாள். பாத்திரம் தேய்த்து, வீடு பெருக்கி துடைத்து விட்டு ''அம்மா துணி ஊறட்டும். இதோ வந்துடறேன்'' என்றவாறு கிளம்பிப் போகிறாள்.

போனவள் போனவள்தான். வரவே இல்லை. காத்து காத்து அலைந்ததுதான் மிச்சம். அவள் வரவே இல்லை. மணி இரண்டு அடித்தது. இருப்பு கொள்ளாமல் தவிக்கிறாள் அனுபமா.



கடைசியில் மூன்று மணிக்கு அனுபமா துணிகளைத் துவைத்துப் போடுகிறாள்.

ஆத்திரம், எரிச்சல் கோபம் எல்லாம் தாக்க துணிமணிகளைத் துவைத்துப் போட்டாள்.

'இனிமேல் கிரிஜாவை வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது.' நினைத்துக் கொள்கிறாள் அனுபமா. 'வந்தாலும் அதை வைத்துக் கொள்ளவேமாட்டேன்' முடிவு செய்து கொள்கிறாள்.

மாலை வந்த கணவனிடம் கூற,

''எடுத்தேன் கவுத்தேன்னு செய்யாதே'' அவன் பதில் உரைக்க,

''ஆமாங்க.. அவ வேணும்னுட்டு வரமாட்டா. நான் வச்சுக்கணுமா?''

''அவளைக் கூப்பிட்டு கரெக்டா சொல்லிடு. ஒழுங்கா வந்தா வச்சுக்கலாம். இல்லே நிறுத்திக்கலாம்.''

''ஆமா எப்பவுமே வேலைக்காரிக்கு சப்போர்ட்டாதான் பேசறீங்க?''

''அறிவு இருக்கா உனக்கு? உனக்கு சப்போர்ட்டாதான் பேசறேன். வேலை செஞ்ச வரைக்கும் நல்லா தானே செய்தா. நீ கஷ்டப்பட வேண்டாம்னு நினைச்சேன். அதுக்குப் போய் என்னென்னவோ பேசறே?''

அதற்கு மேல் அனுபமா பேசவில்லை. இதுதான் எல்லை? இதற்கு மேல் பேச முடியாது? பேசினால் பட்டென்று அடித்து விடுவான். கணவன். மௌனமாகவும், கோபமாகவும் எழுந்து உள்ளே போகிறாள்.

அடுத்த நாள் விடியற்காலையில் வந்த கிரிஜா முகம் எல்லாம் சிவந்து தலை கலைந்து பாவமாக நின்றாள்.

அனுபமாவிற்கு ஒரு நிமிடம் பாவமாகத் தோன்றினாலும் அடுத்த நிமிடம் எரிச்சல் வந்தது.

''என்னாச்சு? மறுபடியும் புருஷன் அடிச்சிட்டானா? இத பாரும்மா அவுங்கவுங்க வீட்டிலே ஆயிரம் ஆயிரம் இருக்கும். வேலை செய்யற இடத்துலே அதை எல்லாம் காண்பிச்சா நல்லா இல்லே.''

கிரிஜா மௌனம் சாதித்தாள். பிறகு எல்லா வேலைகளையும் முடித்து விட்டுப் போய் விட்டாள். அடுத்த நாள் விடியற்காலையில் வந்தவள் கணவனுக்கு அடிபட்டிருக்கிறது என்றும் நாளை வருவதாக சொல்லிவிட்டுப் போனாள். சொன்னவள் அடுத்த நாளும் வரவில்லை. அதற்கு அடுத்த நாளும் ஆளைக் காணோம்.

''என்னமோ வேலைக்காரிக்கு வக்காலத்து வாங்கினீங்க. இப்ப என்ன சொல்லப் போறீங்க?''

''உங்கிட்டே பேச முடியாது'' என்று தலையில் அடித்துக் கொண்டு கிளம்பிச் செல்கிறான் கணவன். 'உம்' என்று உட்கார்ந்து கொண்டிருக்கிறாள் அனுபமா.

மெதுவாக வேலைகளை செய்து முடிக்கிறாள். பின்னால் வீட்டு பாமா, எதேச்சையாக வந்தவள் திடுக்கிட்டுப் போகிறாள்.

''என்ன அனுபமா வேலைக்காரி வரலே?''

''இல்லையே ஏன்?''

''அவ புருஷனுக்கு உடம்பு சரியில்லைன்னு போனவ மூணு நாளாச்சு இன்னும் வரலே.''



''என்ன இப்படிச் சொல்றீங்க? முந்தா நாள் படத்துக்குப் போயிருந்தேன். அப்ப உங்க வேலைக்காரியைப் பார்த்தேனே. தலைல மல்லிகைப்பூ வைச்சுகிட்டு என் வீட்டு வேலைக்காரியோட நின்னுகிட்டு இருந்தாளே.''

பாமா சொல்லச் சொல்ல 'சொரேல்' என்றது. 'என்ன அநியாயம். பொய் சொல்லிவிட்டு இப்படிக் கூட போகுமா?'

''எங்க வீட்டு வேலைக்காரிகூட சினிமாவிற்குப் போகிறேன் என்று பைசா வாங்கிகிட்டு போனாளே.''

பாமா சொல்லிவிட்டுப் போனதிலிருந்து மனம் பயங்கர வதைப்பட்டது. வேலைக்காரி ஏமாற்றுகிறாளா? 'ஏன் அவளை நன்றாகத்தானே வைத்திருந்தேன். ஏன் இப்படிச் செய்தாள்? வந்ததுமே காபி கலந்து கொடுத்து விடுவாள். பிறகு மிச்சம் இருக்கும் டிபனை தந்து விட்டு பின் சமையல் செய்ய ஆரம்பிப்பாள். எத்தனையோ நாட்கள் முடித்து விட்டுப் போகும் போதும் சாப்பாடு போட்டு அனுப்பி யிருக்கிறாள். இத்தனை செய்தும் ஏன் அந்தப் பெண் இப்படிச் செய்கிறது?'

மன வருத்தத்துடன், மனம் புழுங்கிப் போய் அமர்ந் திருந்தாள்.

அன்று கணவன் வந்ததும் எல்லாவற்றையும் சொல் கிறாள். ''விடு வரலைன்னா விட்டுத் தொலை. வேற ஆளைப் பாப்போம்.''

சற்று எரிச்சலோடு இரவே பாத்திரங்களைத் தேய்த்து விடுகிறாள். காலையில் எழுந்ததுமே வீட்டைப் பெருக்கி, துணியை ஊறப் போட்டு கணவனுக்கு டிபன் செய்து

தந்துவிட்டு, அவனுக்கு மதியம் சாப்பாட்டை கொடுத்து விட்டு மறுபடியும் இருக்கும் பாத்திரங்களைத் தேய்த்து விட்டு வெளியே போய் மறுநாளைக்கு காய்கறிகள், பழங்கள் வாங்கி வரலாம் என்று நினைத்தபோது, வருகிறாள் கிரிஜா.

''என்னம்மா... வேலை எல்லாம் முடிச்சிட்டியா?''

''ஏன் துணி காயப் போட வந்தியா?'' இடக்காக கேட்க, கேட்கிறாள் அனுபமா.

பொலபொலவென்று அழுது விடுகிறாள் கிரிஜா. ''என்னம்மா இப்படிக் கேட்டுட்டீங்க? அம்மா என்ன ஆனாங்கன்னு பதறிப்போய் ஓடி வந்தேன்'' என்றவாறு அழ.

''த பாரும்மா இந்த அழற வேலை, நடிக்கற வேலை எல்லாம் வேண்டாம். என்னால ஏமாற முடியாது. இப்ப வெளியே போறேன். நாளைக்கு வந்து கணக்கு பார்த்து நீ வேலை செஞ்ச காசை வாங்கிட்டுப் போ.''

மறுநாள் விடியற்காலை ஐந்து மணிக்கே காலிங் பெல் ஒலிக்க, திடுக்கிட்டுப்போய் கதவைத் திறந்தவள் கிரிஜா நிற்பதைப் பார்த்து அதிர்ந்து போனாள்.



''என்ன கிரிஜா விடியற்காலை அஞ்சு மணிக்கே வந்துட்டே? என்ன?''



''ஏம்மா நீதான் இன்னிக்கு கணக்கு பாத்து தரேன்னு சொன்னியே?''

''அதுக்கு இத்தனை சீக்கிரம் வருவாங்களா?''

''என்னம்மா எம் விஷயம் புரியாம கோவிச்சுக்கறே? வீட்டுக்காரரை ஆஸ்பத்திரிக்கு இட்டுகிட்டுப் போகணும்.'' அவள் மெதுவாக ஆரம்பிக்க,

''ஏய் இந்த பொய் எல்லாம் போதும். விடியற்காலையிலே பொய் சொல்லாதே'' அனுபமா எரிச்சலோடு கத்த,

திடுக்கிட்டவளாய் அவளையே பார்க்கிறாள் கிரிஜா.

''போயிட்டு ஒன்பது மணிக்கு மேல வா. இல்லேன்னா வழக்கமா வருவியே பத்து மணிக்கு மேலே அப்ப வா'' என்றவாறு கதவை இழுத்து சாத்துகிறாள் அனுபமா. கணவனிடம் சொல்லி புலம்பியபோது 'விடு' என்கிறான் கணவன்.

அன்று வேலைகளை எல்லாம் முடித்து விட்டு சற்று அமர்ந்தபோது வருகிறாள் கிரிஜா. வாயில் வெற்றிலை சாறு. முகத்தில் கடுப்பு, எரிச்சல், கோபம். வாயில் கதவைத் தட்டியவள் முகத்தில் சூடு ஏற நிற்கிறாள். அவளைப் பார்த்ததுமே எரிச்சலோடு உள்ளே போய் வேலை செய்த பத்து நாட்களுக்கு கணக்கு பார்த்து நூறு ரூபாய் அனுபமா கொடுத்தபோது,

''என்னம்மா இது? ஏதோ வேலை கொடுத்தவளாச் சேன்னு மரியாதை வச்சா. இப்படியா நடந்துப்பே'' கிரிஜா ஆரம்பிக்க,

''என்ன?'' எரிச்சலோடு கேட்கிறாள் அனுபமா.

''என்ன.. இது என்ன இது?'' நூறு ரூபாய் நோட்டை ஆட்டி ஆட்டிக் கேட்கிறாள்.

''ம்... தெரியாதா? நூறு ரூபாய். நீ வேலை செய்த பத்து நாளுக்கான சம்பளம்'' அவள் போலவே அனுபமாவும் குரலை மாற்றிப் பேச, கிரிஜாவுக்கு பின்பும் எரிச்சல் வந்தது.

''ஏம்மா சொல்ல மாட்டே? வள்ளிசா பதிமூணு நாள் வேலை செய்திருக்கேன். மரியாதையா இன்னும் மூணு நாள் துட்டை கொடுத்திடு.''

''ஏய்.. யார்கிட்டே வச்சிக்கறே? இந்தக் கதை எல்லாம் எங்கிட்ட வேண்டாம். பத்து நாள்தான் வேலை செஞ்சே. மூணு நாள் லேட்டா வந்து ஒரு நாள் துணி துவைச்சே. இன்னொரு நாள் காயப் போட்டே. இன்னொரு நாள் அதுகூட இல்லே.''

''ஏதோ ஒண்ணு. வேலை செய்தேனா இல்லியா?''

''இத பாரு அதுக்குத்தான் பத்து ரூபா அட்வான்ஸ் அன்னிக்கே வாங்கிட்டுப் போயிட்டியே.''

''அந்தக் கதை எல்லாம் வேணாம். மூணு நாள் துட்டைக் கொடு.''

நூறு ரூபாய் நோட்டை ஆட்ட,

''வேண்டாம்னா அதையும் கொடு'' என்கிறாள் அனுபமா.

சட்டென்று நோட்டை இடுப்பில் முடிந்து கொண்ட கிரிஜா,

''கொடு முப்பது ரூபாய்'' என்று அனுபமாவைப் பிடுங்க, அனுபமா படாரென்று கதவை இழுத்து சார்த்தித் தாழ்ப்பாள் போட்டாள்.



ஒரு மணி நேரம் சென்ற பின் எட்டிப் பார்த்தபோது கிரிஜா போய்விட்டிருந்தாள். அனுபமா கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தாள். 'எத்தனை அடாவடிப் பெண் இது?' மனதில் நினைத்துக் கொண்டாள்.

அன்று மாலை கணவன் வரும்போதே எரிச்சல் பட்டான்.

''என்னங்க மூட் அவுட்டாயிருக்கீங்க?''

''என்ன பண்ணித் தொலைக்கறது? அவுட் ஆகாம வேலைக்காரிக்கு சம்பளத்தை ஒழுங்கா கொடுக்க மாட்டியா? என்னைத் தேடி ஆபீசுக்கே வந்து தொலைச்சுட்டா. முப்பது ரூபாய் கொடுத்து ஒழிச்சு அனுப்பினேன்.''

''ஏங்க இப்படி? என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கக் கூடாது. உங்களை ஏமாத்திட்டிருக்கா.'' என்று கோபத்தோடு சொல்கிறாள் அனுபமா.

'சரி ஒழியட்டும் விடு! 'கணவன் எரிச்சலோடு கூறினாலும் உள்ளுக்குள் குமைகிறாள் அனுபமா. 'என்ன ஏமாற்று. இப்படிக் கூடச் செய்யலாமா?' எரிச்சலும் ஆத்திரமும் வந்தது.

'என்ன செய்ய முடியும்? இனிமேல் வேலைக்காரியே வீட்டிற்கு வேண்டாம். நாமே செய்து கொள்ள வேண்டியது தான்.'

முடிவு செய்து கொண்டு வேலை செய்ய ஆரம்பித்து பத்து நாட்கள் ஆனது. இதற்குள் அந்த காலனியில் பல பேர் நண்பர்கள் ஆனார்கள். அங்கே லேடீஸ் கிளப் ஒன்று திறக்கப்பட்டது. அனுபமாவும் வாரத்தில் மூன்று நாட்கள் அவசரம் அவசரமாக வேலைகளை முடித்துவிட்டுப் போகிறாள். ஒருவரோடு ஒருவர் பழக்கம் ஏற்பட்டு, ஒருவர்

பிரச்சனைகளை மற்றவர் தெரிந்து கொண்டபோது இன்னொரு தோழி சுஷ்மா வேறொரு வேலைக்காரிக்கு ஏற்பாடு செய்தாள்.

"நாளை மத்தியானம் வேலை செய்யற பொண்ணை அழைச்சுகிட்டு வரேன். கவலைப்படாதே அனு" என்று தேறுதல் மொழிய, சந்தோஷப்படுகிறாள் அனு.

அடுத்த நாள் ஒரு பத்து வயதுப் பெண்ணை தன்னுடன் அழைத்து வந்தாள் சுஷ்மா.

"சின்னப் பொண்ணாயிருக்காளே. வேலை செய்ய முடியுமா?"

"இவ சின்ன பொண்ணுன்னு நினைக்காதீங்க. பயங்கர சுட்டி. எந்த வேலையாய் இருந்தாலும் சட்டென்று செய்து முடிச்சிடுவா." அடுத்த நாளிலிருந்து சின்னப் பெண் கௌரி வேலைக்கு வருகிறாள்.

விசுக் விசுக்கென்று நடந்து பெருக்குகிறது. பாத்திரம் தபதபவென்று தேய்க்கிறாள். துணி டப் டிப் என்று அடித்துத் தோய்க்கிறது. பாத்திரங்களில் அங்கங்கே சோப்புக் கறைகள். துணியில் சுத்தமாக அழுக்கே போகவில்லை. வீட்டைக் கூட்டினாலும் மூலை முடுக்கெல்லாம் அழுக்கு. அனுபமா பின்னாலேயே போய் "இன்னும் கொஞ்சம் கசக்கு, பாத்திரத்தைச் சுத்தமாகக் கழுவு, மூலைல இருக்கற குப்பையை வாரிப்போடு" என்று வரிசையாகச் சொல்லச் சொல்ல செய்கிறாள் கௌரி.

முதலில் சற்று கோபம் இருந்தாலும், இப்போது மனம் ஒப்புக் கொள்கிறது. பரவாயில்லை. சின்ன பெண் தானே. என்னதான் மறுபடியும் மறுபடியும் செய்தாலும் பெரிய



வர்கள் போல், அழுத்தமாக எதுவும் செய்யத் தெரியவில்லை? அனுபமா 'சரி போகட்டும்' என்று சற்று நிதானித்து, ஒவ்வொன்றையும் சொல்லிக் கொடுத்து செய்கிறாள். காபி கொடுக்கிறாள். டிபன் தருகிறாள். சாப்பிட அதிக நேரம் எடுத்துக் கொள்கிறது. சில நேரங்களில் ஒரு மணி நேரம் கூட சாப்பிடுகிறது.

காலை வேளையில் அலுவலகம் கிளம்பும் முன் நாகராஜன் டி.வி.யைப் போட்டால் டி.வி.யையே பார்த்துக் கொண்டு நிற்கிறது. அவன் டி.வி.யை அணைத்ததும்தான் உள்ளே போகிறது.

"ஏங்க நீங்க காலைல டி.வி. போடாம இருக்கீங்களா?"

"ரொம்ப அழகா இருக்கு. உம் வேலைக்காரி பொண்ணுக்காக நான் டி.வி. போடக்கூடாதா?" கணவன் குரல் உயர்த்திக் கத்துகிறான்.

"கூப்பிட்டுகிட்டுப் போய் உள்ளே வேலை வாங்கு."

சாதாரணமாக ஒரு மணி நேரத்தில் முடியும் வேலையை மூன்று மணி நேரம் செய்தாள் அந்தப் பெண். சில சமயம் 'டம் டம்' என்று வெளியில் ஏதேனும் ஓசை கேட்டால் இருக்கும் வேலையை அப்படியே போட்டு விட்டு அங்கே போய் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

"ஏய் கௌரி... கௌரி" பல தடவைகள் கூப்பிட்ட பின்தான் திரும்பி திரும்பி பார்த்தபடியே வரும்.

"என்னங்க பெரிய நியூஸன்ஸா இருக்கு. வாசல்லே ஒரு மேள சத்தம் கேட்கக் கூடாதுன்னு சொல்லுது. டி.வி... கொஞ்சம் அசைஞ்சதுன்னா போதும் வந்து உக்காந்துடுது. காலை ஆறு மணிக்கு வர பொண்ணு பதினோரு மணிக்

குத்தான் வேலையை முடிக்குது. ஒரு மணி வரைக்கும் டி.வி.யைப் பாத்துட்டு தான் போகுது. வேலையை அப்படி ஒண்ணும் சுத்தம் இல்லே'' அனுபமா கணவனிடம் புலம்புகிறாள்.

''அது சின்ன பொண்ணு. நம்ப பிரியா பத்து வயசுலே இப்படித்தானே இருப்பா. இதை பெரிசு பண்ணுவாங்களா? பாவம் இல்லாத கொடுமை வேலைக்கு வருது. விடு'' நாகராஜன் கூற,

கணவன் பிரியாவைப் பற்றி சொல்ல, அனுபமாவிற்கு பிரியாவின் ஞாபகம் வந்தது. 'மம்மி, மம்மி' என்று சுற்றிச் சுற்றி வரும் குழந்தை அவளின் ஒரே செல்ல மகள். பி.டெக் படித்து மேலே எம்.எஸ். படிக்க அமெரிக்காவிற்குப் போயாகி விட்டது. ஒரு வருடம் முடிந்தும் லீவில் கூட பெண் வரவில்லை. இந்த டிசம்பரில் வந்து விட்டுப் போகிறேன் என்று சொல்லி இருக்கிறாள். இன்னும் மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டியதுதான். குழந்தை அமெரிக்காவில் இருக்கிறாள் என்று பெருமைக்கு வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தான் குழந்தையைப் பார்க்க வேண்டுமென்றால் எத்தனை தவிப்பு? சட்டென்று அழுகை வருகிறது. படத்தில் இருக்கும் பிரியா 'மம்மி' என்று கூப்பிடுவது போல் தோன்ற, விரக்தியோடு பெருமூச்சு விடுகிறாள்.

பல நேரங்களில் நாம் நினைப்பது நடக்குமோ என்னவோ, ஆனால் சில நேரங்களில் நாம் நினைப்பது உடனே நடந்து விடுகிறது. பிரியாவிடமிருந்து தொலைபேசி அழைப்பு.



''பிரியா குட்டி. என்னடா, ஞாயித்துக்கிழமைதான் பேசுவே? இன்னிக்கு செவ்வாய்க்கிழமைதானே. என்னடா ஆச்சு?'' அனுபமா ஆர்வமாகக் கேட்க,

''ஏன்னா ஞாயிற்றுக்கிழமை நேர்ல வந்து பேசப் போறேன்'' பிரியா சொல்ல, ''ஏய் நிஜமாவா?'' பூரிக்கிறாள் அனுபமா.

அடுத்த நான்கு நாட்களும் அந்த சின்னப் பெண்ணை ஏவி ஏவி வேலை வாங்கிக் கொண்டிருந்தாள் அனு. 'இந்த அலமாரியை சுத்தம் பண்ணு. இங்கே ஒட்டடை அடி. அந்த ஜன்னல் எல்லாம் தொடை. சோபாவிற்கு வேற கவரை மாத்து. பிரியா அக்காவுக்கு மஞ்சளே பிடிக்காது. குப்பையை சரியா பெருக்கு. பிரியா அக்கா பார்த்தா வேற வினையே வேண்டாம். பாத்திரம் எல்லாம் சுத்தமா துடைச்சு அடுக்கு. அப்படியே வச்சா பிரியா அக்காவிற்குப் பிடிக்காது.' 'பிரியா.. பிரியா' என்று பிரிய ஜபம் செய்தாள் அனு.

கௌரியும் வீட்டிற்கு முதல் மந்திரி வருவது போல் பயந்து பயந்து வேலை செய்கிறாள். ''அக்கா இந்த கலர் பிரியா அக்காவிற்குப் பிடிக்குமா? பிரியா அக்கா இந்த போட்டோவிலே இருக்கற மாதிரி அழகா இருப்பாங்களா?''

''இதைவிட நேரே இன்னும் அழகா இருப்பா?'' அனுபமா சொல்லச் சொல்ல அந்தப் படத்தைத் துடைத்து துடைத்து வைப்பாள் கௌரி.

'வரப் போகிறேன், வரப்போகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்த பிரியா வந்ததும், அனுபமா தரையில் கால் பாவாமல் குதிக்கிறாள். பெண்ணுக்குப் பிடிக்கும் என்று விதம் விதமாக செய்து போடுகிறாள். பாத்திரங்கள் விழுந்து

கொண்டே இருந்தன. வீடு சுத்தம் செய்யப்பட்டு அவ்வப் போது பெருக்கிக் கொண்டே இருக்கும்படி ஆனது.

அந்தப் பெண்ணும் மாய்ந்து மாய்ந்துதான் செய்தது. இருந்தாலும் மியூஸிக் சிஸ்டத்தில் பாட்டு போட்டால் அப்படியே கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டே இருக்கும்.

''ஏய் பெருக்க வாடி...''

''இருங்க அக்கா. பிரியா அக்கா பாட்டு போட்டிருக் காங்க.'' சொல்லிவிட்டு தலையை ஆட்டியபடியே இருப்பாள் கௌரி. வி.சி.டி.யில் படம் போட்டு விட்டால் போதும். ''அக்கா வேலை அப்புறம் பண்றேக்கா'' கெஞ்சிய படி படம் பார்க்க அமர்ந்து விடுவாள்.

''பாவம் மம்மி சின்ன பொண்ணுதானே'' பிரியாவும் வாங்கி வந்த சாக்லெட் மற்றும் சின்ன பவுடர் டப்பா எல்லாம் தர, 'பிரியா அக்கா பிரியா அக்கா'' என்று உருகி உருகி வேலை செய்ய ஆரம்பித்தாள் கௌரி.

காலை ஏழு மணிக்கு வந்து விட்டால் சாதாரணமாக பன்னிரண்டு மணிக்குள் போகிறவள், ஐந்து மணி ஆனாலும் போகாமல் இவர்கள் வீட்டிலேயே இருந்தாள்.

பிரியா சாப்பிடும்போதெல்லாம், அவளுக்கும் வேண் டியதை எல்லாம் கொடுத்ததில், அந்தப் பெண்ணிற்கு வீட்டிற்குப் போகவே பிடிக்கவில்லை.

''ஏய் கௌரி கிளம்பு'' அனுபமா சொல்லிச் சொல்லி கிளப்பி அனுப்புகிறாள்.

அடுத்த நாள் ஆறு மணியாகியும் போகாமல் பிரியா கொடுத்த போண்டாக்களை சாப்பிட்டவாறு இருப்பவளை துரத்தி அனுப்புகிறாள் அனுபமா.



அன்று மணி பன்னிரண்டு அடிக்க, கௌரி இன்னும் துணி துவைக்கவில்லை. பாத்ரூம் கழுவவில்லை. பாதி பாத்திரங் களைக் கழுவவில்லை. டி.வி.யில் பெண் வாங்கிப் போட்ட புதுப்பட சி.டி.யைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஒரு முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு மாது அங்கே வந்து நிற்கிறாள்.

''ஏய் கௌரி... கௌரி இங்கே வந்து தொலை'' கத்துகிறள்.

கௌரி ஓடி வெளியே வருகிறாள். ''ஐ அம்மா... என்னம்மா.''

''வாடி வீட்டுக்கு...''

''போம்மா. வேலை முடியலை. அப்புறம் வரேன்.''

''என்னது வேலை முடியலையா? காலைல அனுப்பினா பத்து மணிக்கு வந்தவ, பன்னண்டு மணிக்கு வர ஆரம்பிச்சே. இப்ப சாயங்காலம் வரைக்கும் வேலை செய்துகிட்டு இருக்கியா? போதும்டீ நீ வேலை செய்த லட்சணம். வாடி ஊட்டுக்கு.''

''போம்மா கம்முனு இரு. புது படம் போடறாங்க.'' வந்தவள் ஓவென்று கத்த. அனுபமா திடுக்கிட்டுப் போய் நிற்கிறாள்.




''யாரு? என்னம்மா கத்தறே?''

''கத்தாம. ஏம்மா? ஏதோ வயத்துப் பாட்டுக்கு இல்லேன்னு அனுப்பினா சின்னக் குழந்தையை இத்தனை

வேலை வாங்குவாங்களா?'' அனுபமாவிற்கு சுருக்கென்று கோபம் வந்தது.

''த பாரும்மா உம் பொண்ணு காலைல வந்து டி.வி. பாக்கறா. பாட்டு கேக்கறா, விளையாடறா. எப்போதாவது தான் வேலையே செய்யறா?'' அனுபமா எரிச்சலுடன் கூற,

''ஏம்மா புளுவறே. படம் போட்டு, பாட்டு போட்டு அந்தப் பொண்ணை மயக்கி வச்சு, காலைல ஆறு மணிக்கு வந்த பொண்ணை ராவிக்கு ஆறு மணி வரைக்கும் வச்சுகிட்டு இருக்கியே. நீயும் பொம்பளை தானே. ஒரு தாய் தானே. ஒரு முந்நூறு ரூபாய்க்கு எம்மாம் வேலை வாங்கறது?''

பதிலை எதிர்பார்க்காமல் பெண்ணைத் தரதரவென்று பிடித்து இழுத்துக் கொண்டு போகிறாள் கௌரியின் அன்னை. பெண் கத்தோ கத்தென்று கத்தி அழுது தீர்த்தது. தெருவில் இருக்கும் அனைவரும் வேடிக்கைப் பார்க்க, ''இந்த வேலையும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். தூக்கிப் போட்டு வாடி'' கத்தியபடி கௌரியின் தாயார் சொல்ல, அனுபமா கூனிக் குறுகிப் போனாள்.

பார்ப்பவர்கள் எல்லோரும் என்ன சொல்வார்கள்? வேலை முன்னே பின்னே இருந்தாலும் ஏதோ வீட்டோடு ஒத்துக் கொண்டு இருந்ததே என்று நினைத்தால் இப்படியா? பிரியா அக்கா பிரியா அக்கா என்று சுற்றிச் சுற்றி வந்ததால் அது செய்யும் எல்லா தப்புகளையுமே மன்னித்தாள் அனுபமா.

கடைத் தெருவிற்கு அனுப்பினால் டி.வி.யில் படம் ஏதேனும் ஓடினால் அந்தச் சாமானே இல்லையென்று வந்து விடும். இல்லை என்றால் இரண்டு ரூபாய் சாமானுக்கு ஐந்து



ரூபாய் என்று சொல்லும். முதலில் எல்லாம் கண்டித்து கேட்டு காசு வாங்கியவள் பிரியா வந்த பின் எல்லாவற்றையுமே விட்டு விட்டாள். எங்கு அனுப்பினாலும் மேலே ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று அமுக்கி விடுவாள் கௌரி. போதாத குறைக்கு அரை மணி நேரம் வேலை செய்தால் மணிக் கணக் காக ரெஸ்ட் எடுப்பாள் கௌரி. டி.வி.யைப் பார்த்துக் கொண்டு, பாட்டு கேட்டுக் கொண்டு அமர்ந்து கொண்டே இருப்பாள்.

உண்மை இப்படி இருக்கையில் அவள் அம்மா எப்படி எல்லாம் கத்திவிட்டுப் போகிறாள். இந்தக் காலனியில் எல்லோர் வீட்டிற்கும் வேலைக்காரி இருக்கிறாள். ஏன் தன் வீட்டில் மட்டும் ஒன்றுகூட ஆறு மாதத்திற்கு மேல் இருக்க மாட்டேன் என்கிறது. கவலையில் ஆழ்ந்தாள் அனுபமா.

பிரியாவும் அடுத்த நாள் கிளம்பிப் போய் விடுகிறாள். மறுபடியும் வேலைக்காரி இல்லாமல் தவித்துப் போய் விடுகிறாள் அனுபமா.

ஒரு இரண்டு நாள் கழித்து கௌரியின் தாயார் வந்து கறாராக கணக்கு சொல்லி சம்பளத்தை வாங்கிக் கொண்டு போகிறாள். அனுபமா பழையபடி தானே வேலையை செய்ய ஆரம்பித்தாள். ஒருமுறை அஸோஸியேஷன் மீட்டிங் என்று போனவளை சுஷ்மா, பாமா இன்னும் மற்றும் பெண்கள் எல்லோருமே பிடித்துக் கொண்டார்கள்.

''என்னாச்சு? ஏன் வேலைக்காரி இல்லே.''

''அந்த சின்னப் பொண்ணு நல்லா செய்யுமே'' என்கிறாள். சுஷ்மா.

''கிரிஜாகூட வேலை வரைக்கும் நல்லாதானே செய்வா'' பாமாவும் சொல், அனுபமாவிற்கு ஒரு மாதிரியாய் ஆனது.

''எதைச் சொல்வது? என்னங்க பண்றது? கிரிஜா நல்ல வேலைக்காரிதான். ஆனா பாதி நாள் ஆளே இருக்க மாட்டா. கௌரி சுமாரா வேலை செய்யும். ஆனா டி.வி.யைப் பாத்தா வீட்டுக்குப் போன்னாலும் போகாது. அவுங்க அம்மாவுக்கு கோபம் வந்து கூட்டிகிட்டுப் போயிட்டாங்க. என்ன பண்ணச் சொல்றீங்க? நல்ல வேலைக்காரி அமையறதுகூட லக்கு தாங்க'' சொன்னபோது, அனுபமாவின் கணவனின் கீழ் வேலை செய்யும் மாதவனின் மனைவி பிரமிளா சொல்கிறாள்.

''மேடம் பெண் பிரசவத்துக்குப் போகிறேன். வர எப்படியும் நாலு மாசம் ஆயிடும். எங்க வீட்டு வேலைக்காரி பழனியம்மாளை அனுப்பி விடறேன். பிடிச்சிருந்தா வச்சுக்கங்க. சும்மா சொல்லக் கூடாது. வேலை அத்தனை சுத்தமா இருக்கும். ஆளும் படு சுத்தம். ஸ்மார்ட்டா டிரஸ் பண்ணிப்பா. ஒரு நாள் கூட லீவு போட மாட்டா. பத்து மணின்னா, பத்து மணிக்கு கரெக்டா ஆஜராயிடுவா. நாளைக்கு அனுப்பறேன் பாருங்க.''

அடுத்த நாள் சரியாக பத்து மணிக்கு பழனியம்மாள் வந்து விடுகிறாள். நீல நிறப் புடவை, ஜாக்கெட் அணிந்து கொண்டு பின்னலாகப் பின்னி குட்டிக் கொண்டை போட்டு அதில் மல்லிகைப் பூவை இரண்டு சுற்று சுற்றி முழு உருண்டையாக அரக்குக் கலர் பொட்டை வைத்துக் கொண்டு, அழகாக வந்து நிற்கிறாள் பழனியம்மாள். ஆழ்ந்த கறுப்பு நிறம்தான். மூக்கும், கண்ணும் திருத்தமாக இருந்தது.

அன்று வந்தவுடன் எல்லா வேலைகளையும் சட் சட் டென்று முடிக்கிறாள். வீட்டை வெகு சுத்தமாகப் பெருக்கித் துடைத்து பளபளவென்று மின்னியது வீடு. பாத்திரங்களை பளபளவென்று துலக்கி பாத்திரமே மின்னுகிறது. அத்தனை



சுத்தமாகச் செய்தாலும் மணிக்கணக்காக ஆக்குவதில்லை. துணிகளை சோப்பு போட்டு நன்றாக அடித்துத் தோய்த்து, சுருக்கம் இல்லாமல் நன்றாக உதறி காயப் போட்டாள். பத்து மணிக்கு வந்தவள் பதினோரு மணிக்குள் எல்லா வேலைகளையும் மிக மிக சுத்தமாகக் கச்சிதமாக முடித்தாள்.

அனுபமா வியந்தது மட்டுமல்ல. மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போனாள். 'இவள் முன்னமே எனக்குக் கிடைத்திருக்கக் கூடாதா?' மனது தவித்தது. இப்போதாவது கிடைத்தாளே, இவளை விடவே கூடாது. கணவனின் ஷர்ட், பேன்ட் எல்லாவற்றையும் எடுத்து இஸ்திரிக்குக் கொடுப்பதற்காக, வேலைக்காரி செல்ல அவள் பின்னே இறங்கினாள் அனுபமா.

''நீ எங்கம்மா இறங்கறே?''

''துணி இஸ்திரிக்குக் கொடுக்கணும்.''

''எங்கே? அடுத்த தெருவாண்டை இருக்கே. அதுலேயா கொண்டா.'' வாங்கிப்போய் தானே கொடுப்பதாகச் சொல்லி எடுத்துப் போகிறாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் துணிகளைக் கொண்டு போய் கொடுத்துவிட்டு சீட்டு வாங்கி வருகிறாள்.

''யம்மா நீ போகாதே. சாயந்திரம் இங்கே வேலையா வருவேன். கொண்டு வந்து கொடுத்துட்டுப் போறேன்.'' பழனியம்மாள் இஸ்திரி துணிக்கு ரூபாய் வாங்கிக் கொள்ளாமல் போய்விட, தவித்துப் போகிறாள் அனுபமா.

அன்று ஒரு மூன்று மணி சுமாருக்கு இஸ்திரித் துணியைக் கேட்கப் போக, ''இல்லேம்மா... பழனி வந்து வாங்கிட்டுப் போயிடுச்சே'' என்கிறான் கடைக்காரன். திக்கென்றது

அனுபமாவிற்கு. கணவனின் மூன்று ஷர்ட், இரண்டு பேன்ட், நாலு வேஷ்டிகள், தன்னுடைய இரண்டு அபூர்வா சில்க் புடவை வேறு.

ஒரு நாள் வேலை செய்து விட்டு எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு போய் விட்டதா? ஐயோ கடவுளே வீட்டிற்கு வரும் வரை இந்த நினைவுதான். தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

ஒரு நான்கு மணி இருக்கும் பழனியம்மாள் துணிகளைக் கொண்டு வந்து தருகிறாள்.

''அம்மா... எல்லாம் சரியாயிருக்கா பாரு.'' பழனி யம்மாளின் கையில் துணிகளைப் பார்த்ததும்தான் போன உயிர் வந்தது.

''ஏம்மா எங்கிட்டே ரூபா கூட வாங்கிக்கலை. பாவம் நீ ஏன் கொடுத்தே?''

''அட நீ ஒண்ணும்மா. அவர் என் ஒண்ணுவிட்ட அண்ணாச்சிதான். நான் திரும்பச் சொல்ல காசு வாங்கி யாறேன்னு சொல்லிட்டு வந்தேன்.''

அனுபமாவிற்கு மனசாட்சி இடித்தது. 'சீ பாவம் எத்தனை நல்ல வேலைக்காரி. அவளைப் போய் தவறாக நினைத் தோமே.'

''பழனி வா... கொஞ்சம் டீ குடிச்சிட்டு போ.''

''இருக்கட்டும்மா'' என்று கிளம்பியவளுக்கு டீ போட்டு வற்புறுத்திக் குடிக்க வைத்து அனுப்புகிறாள்.

''ரொம்ப டேஸ்ட்'' என்று சொல்லியவாறே கிளம்புகிறாள் பழனியம்மாள்.



அடுத்த ஒரு மாதமும் பழனிதான் செய்கிறாள். வீட்டு வேலைகளை ஆசையோடு செய்கிறாள். எல்லாவற்றையும் சுத்தமாக செய்கிறாள். எந்த வேலையுமே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறாள். ஆனால் அதுகூட ஆபத் தாக முடியும் என்று யார் கண்டது.

நாகராஜன் சாப்பிட உட்கார்ந்தால் அனுபமா தண்ணீர் வைக்க மறந்து விட்டால் ஓடி வந்து ஜக்கிலிருந்து தண்ணீர் கொட்டி வைப்பாள் பழனியம்மாள். சில நேரங்களில் நாகராஜன் குளிக்கும் அறைக்குச் சென்று துண்டோ சட்டையையோ மறந்து விட்டால், அனுபமாவின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாலே போதும்.

''யம்மா சார் துண்டு கேக்கறாரு. கொடு நான் கொடுத் துட்டு வரேன்'' என்பாள். முதலில் எதுவுமே விகல்பமாகத் தெரியவில்லை. ஆனால் நாளாக நாளாகப் பழனியம்மாள் நடந்து கொள்வது எரிச்சலைத் தந்தது.

ஒரு முறை நாகராஜன் ஏதோ நீல நிற ஷர்ட்டை போட்டு விட்டு சற்று உடலை பிடிப்பது போலத் தோன்ற, ''ஏய் அனு அந்த ரெட் ஷர்ட்டை கொண்டா'' அவன் கத்த, அந்த அறையில் பெருக்கிக் கொண்டிருந்த பழனி விடுவிடு வென்று கொடியில் தொங்கிக் கொண்டிருந்த சிகப்பு நிற ஷர்ட்டை எடுத்து அவனிடம் நாணிக் கோணிக்கொண்டு நீட்ட, பாதி வெற்றுடம்போடு இருந்த நாகராஜ் வெட்கப் படுகிறான். தர்ம சங்கடப்படுகிறான்.

அவன் ஷூவை துடைத்து வைத்து, பளபளவென்று லேசாக பாலிஷ் செய்து, ''ஏய் என்ன இது வேலைக்காரியா? அல்லது பொண்டாட்டியா சே..?'' நாகராஜ் கத்த,

''ஓ.. அந்த ஆசை வேற இருக்கா?'' அனு எரிச்சலுடன் கூற

''சே... நீ வேற என் வேலைக்கெல்லாம் அவளை அனுப்பாதே. நீயே வந்து செய். எனக்கே கஷ்டமா இருக்கு. அன்னிக்கு குளிச்சுகிட்டு இருக்கேன். துண்டை மறந்துட்டேன். கேட்டா இவ கொண்டு வந்து கொடுக்கறா.'' கணவன் தலையில் அடித்துக் கொள்ள, ஒருவித அதிர்ச்சியில் ஆழ்ந்தாள் அனுபமா.

''அது வலிய செய்யுதேன்னு எனக்குகூட எரிச்சல்தான். ஆனா நீங்க சொல்ற மாதிரி இருக்கும்னு தோணலே.''

''மண்ணாங்கட்டி. அன்னிக்கு தண்ணி கேட்டேன். நீ உள்ளே இருந்தே. பொண்டாட்டி கொடுக்கற மாதிரி பக்கத்திலே வந்து நின்னு தண்ணியை ஊத்திகிட்டு முந்தானை, முந்தானையை சரி பண்ணிட்டு நிக்குது.''

அவன் சொல்லச் சொல்ல திகைத்தவள், ''அப்படியா?'' என்கிறாள்.

''இத பாரும்மா. அது சாதாரணமாகக் கூட வந்து நிக்கட்டும். ஆனா எனக்கு அசிங்கமா இருக்கு. தயவு செய்து அதை கிட்டே விடாதே'' நாகராஜ் திட்டவட்டமாகக் கூறுகிறான்.

அடுத்த ஒரு வாரத்தில் பழனியம்மாள் நின்றாலே சற்று சந்தேகம் வந்தது. அவள் சந்தேகப்படும்படியே பழனியம்மாளும் நடந்து கொண்டாள். நாகராஜன் வீட்டில் இருந்து விட்டால் போதும் ஓடி ஓடி வேலை செய்வாள் பழனியம்மாள். இருக்க இருக்க அது இன்னும் அதிகமாய் போனது. அன்று காபி என்று நாகராஜ் குரல் கொடுக்க, ''இதோ வரேங்க, கலந்துகிட்டு இருக்கேன்'' என்று குரல் கொடுக்கிறாள் அனுபமா.



சமையல் அறையின் வாசலிலேயே வந்து நிற்கிறாள் பழனியம்மாள்.

''அம்மா.. காபி...''

''இரும்மா. அய்யாவுக்கு கொடுத்துட்டு வந்துடறேன்.''

''அய்யாவுக்குதாம்மா. நீங்க அடுப்பை கவனியுங்க. எதோ பொங்குது பாருங்க. நான் போய் கொடுத்துட்டு வரேன்.''

''நீ போ... நான் கொண்டுட்டு வரேன். அவுங்க திட்டப் போறாங்க.''

''அய்யா ஒண்ணும் திட்டமாட்டார்'' என்றாள் பழனியம்மாள்.

இப்படியேதான் கொஞ்ச நாட்கள் ஓடிற்று. அனுபமாவிற்கு வீட்டு விலக்கு ஆயிற்று. அனுபமா அந்த மூன்று நாட்கள் சற்று ஒதுங்கி இருந்தாள். அவர்கள் வீட்டில் ஒதுங்கி இருக்க வேண்டும்.

அவள் ஒதுங்க ஆரம்பித்தபோதுதான் அது நடந்தது. பழனியம்மாள் மாய்ந்து, மாய்ந்து எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள். அடுப்பில் காபியைக்கூட சுட வைத்துக் கொடுத்தாள். நாகராஜுக்கு மட்டுமல்ல. அனுபமாவிற்கும் விழுந்து விழுந்து எல்லா வேலைகளையும் செய்து கொடுக்கிறாள்.

அனுபமா அதனால் ஒன்றும் பேசவில்லை. தனக்கு மல்லவா செய்கிறாள். ஆனால் மூன்று நாட்கள் முடிந்தும் நாகராஜுக்கு செய்ய வேண்டிய வேலைகளை பழனியம்மாளே செய்கிறாள். ''குடும்மா அய்யாவுக்கு காபி, டிபன் எடுத்துட்டு போறேன். துண்டு எங்கம்மா அய்யா

குளிக்கறாரு. அய்யா சட்டையைக்கூட இஸ்திரி போட்டு வச்சுட்டேம்மா'' இருக்க, இருக்க அது அதிகமாக ஒரு நாள் தாள முடியாமல் வெடிக்கிறாள் அனுபமா.

''ஏய் உன் வேலை எதுவோ அது செய். என் புருஷனுக்கு நான் துண்டை கொடுத்திடறேன் நகரு.'' கத்துகிறாள் அனுபமா.

பழனி அவளையே வெறித்துப் பார்க்கிறாள்.




''சே!... நீ எல்லாம் என்ன பொம்பளை?'' பழனியம்மாளின் வாயில் இந்த வார்த்தைகளைக் கேட்டவள் அதிர்ந்து போகிறாள். அனுபமாவின் முகம் கோபத்தில் சிவந்தது.

''ஏய் என்ன மரியாதை இல்லாம?''

''என்னம்மா மரியாதை வேண்டியிருக்கு? பாவம் எஜமானியம்மா ஆச்சேன்னு எல்லா வேலையும் இழுத்துப் போட்டுகிட்டு செய்தா இப்படித்தான் பேசுவீங்களா? உங்களுக்கு செய்த மாதிரிதானே அய்யாவுக்கும் செய்தேன். இதைத் தப்பா பேசுவீங்களா?''

''இத பாரு எது செய்யணுமோ அதைத்தான் செய்யணும். எம் புருஷனுக்கு குளிக்க நீ ஏன் துண்டை கொண்டு போய் கொடுக்கறே? பொண்டாட்டி செய்யற வேலை எல்லாம் நீ ஏன் செய்யறே? வந்தமா பெருக்கினமா, துடைச்சமா,



பாத்திரம் கழுவினமான்னு இல்லாம, என் வீட்டுக்காரர் வந்தவுடனே குலுக்கி மினுக்கிக்கிட்டு இப்படியா நடந்துப்பாங்க? இப்படிக் கூடவா நடந்துப்பாங்க? வேலைக்காரங்களும் வேண்டாம். யாரும் வேண்டாம்.''

''யாரு... உன் வீட்டிலே வேலை செய்வாங்க. இத்தோட நாலு வேலை செய்யறவங்களை மாத்திடலே. அபாண்டமா தப்பு தப்பா பேசறே. என் வீட்டுக்காரரை நாளைக்கு கூட்டிகிட்டு வரேன். அவரோட பேசிக்க'' விருட்டென்று திட்டிக் கொண்டே இறங்கிப் போகிறாள்.

அனுபமா சோர்ந்து போய் அமர்ந்து விட்டாள். கணவனின் அலுவலகத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொல்லுகிறாள்.

''சரி ஒழியட்டும். நான் பேசிக்கறேன். அந்த பொம்பளை வேண்டவே வேண்டாம். குளிக்கும்போது வேறு எட்டிப் பாத்துத் தொலைக்குது சனியன்.''

''எப்ப?''மெதுவாக அனுபமா கேட்க,

''எல்லாம் நேத்துதான். ஏற்கனவே குளிச்சு முடிச்சுட்டேன். கை பக்கம் எல்லாம் சோப்பு போகலே. கழுத்துப் பக்கமும் இருந்தது. சரி அப்படியே கழுவிகிட்டு வரலான்னு அப்படியே குழாயைத் திறந்து கையை, கழுத்து எல்லாத்தையும் கழுவிகிட்டு வெளியே வரேன். இந்தப் பொம்பளை குளியலறை வாசலில் நின்னுகிட்டு என்னை பாத்துகிட்டு நிக்குது? அந்த சனியன் வீட்டு வேலைக்கு வேண்டவே வேண்டாம்.''

''அதாங்க.. புருஷனை அழைச்சுகிட்டு வரேன்னு மிரட்டிட்டு போயிருக்கா. இங்கே வந்து ஏதாவது கலாட்டா பண்ணா?''

"நான் சீக்கிரமே வந்துடறேன். கவலைப்படாதே. யார் வந்தாலும் கதவைத் திறக்காதே." கணவன் சொல்லச் சொல்ல கதவைத் தாள் போட்டுக் கொண்டு சற்று பயத்துடன் அமர்ந்து இருந்தாள் அனுபமா. 'சே! தனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? ஒரு வேலைக்காரியாவது ஒழுங்கா கிடைக்காதா?' மனம் ஏங்கியது.

அன்று கணவன் நான்கு மணிக்கே வந்துவிட, சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் அனுபமா. சுமார் ஐந்து மணிக்கு ஒரு ஐந்து பேரோடு வந்தாள் பழனியம்மாள். சற்று முரட்டு மீசையோடு ஒருவன், ஒரு வயதான பெண்மணி, பழனியம்மாள் வயதுக்கு ஒரு பெண், ஒரு சிறிய பையன் என்று மொத்தம் ஐந்து பேர் வந்திருந்தனர். அனுபமாவிற்கு உடலே சற்று நடுங்கியது. நாகராஜ் சற்று எரிச்சலோடும் கோபத்தோடும் கதவைத் திறந்து பார்க்கிறான். பழனியம் மாள் அழுது சிவந்த கண்களோடு நிற்கிறாள். சற்று கோபத்தோடு முரட்டுத்தனமாக அவள் கணவன் நிற்க, அந்தப் பெண்களும் எரிச்சலோடும், கோபத்தோடும் நிற்க,

"ஏம்மே... பொழைப்புக்கு வந்தா தப்பு தப்பாவா பேசுவே." அடிக்கும் விதமாக அவன் நிற்க, அனுபமா பயந்து போக, நாகராஜ் எரிச்சலோடு பேசுகிறான்.

"இத பாரும்மா.. என்ன வேலை இது? ஆளை கூப்பிட்டுகிட்டு வந்து மிரட்டறியா? நீ ஒழுங்கா இருந்தா நாங்க ஏன் இப்படி சொல்லப் போறோம்?" நாகராஜ் சற்று கர்ஜனை செய்ய, வந்த முரடன் "என்ன சார் நீ கூட இப்படி பேசறே? பொண்டாட்டியை அடக்கி வைக்காததால்தான் இப்படியெல்லாம் நடக்குது" சற்று உயர்ந்த குரலில் பேச,

"யார் அடக்கி வைக்கணும்? ஏய்யா வேலைக்கு அனுப்பினா வேலையை மட்டும் உம் பொண்டாட்டி செய்



யாதா? முதல்ல அதை அடக்கி வை. நாங்க நல்லவங்களா இருக்கறதொட்டு பேசாம நிறுத்தரோம் தெரிஞ்சுக்க" நாகராஜ் உறும, முரடன் அங்கேயே பழனியம்மாளை போட்டு மிதி மிதி என்று மிதிக்கிறான்.

"யோவ் நிறுத்தியா?" எத்தனை சொல்லியும் அடிப்பதை நிறுத்தவில்லை. பழனியம்மாள் குய்யோ, முறையோ என்று கத்த, கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் சேர்ந்து விட்டது.

அதன் பிறகு அனுபமாவின் பேர் கொஞ்சம் ரிப்பேர் ஆகிவிட்டது போல் தான் தோன்றியது. மாதர் சங்கத்திலும் சரி, வெளியிலும் சரி 'பழனி பாவம் நல்லா வேலை செய்யறவ. அவளைப் போய் அபாண்டமா பழி சொல்லி துரத்தினது பாவம்' என்று காதுபடவே பேசினார்கள். அவள் இல்லாதபோது, 'இத்தோடு எத்தனை வேலைக்காரி அந்த அம்மா மாத்திடுச்சு. அநியாயம். நமக்கு எல்லாம் கூடத்தான் வேலைக்காரி இருக்காங்க. நாம அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு இல்லே" பின்னால் அதிமாகவே பேசினார்கள்.

அனுபமாவிற்குத்தான் வெட்கம் பிடுங்கித் தின்றது. 'சே! இந்த வேலைக்காரிங்களை வச்சுக்கறதும் போதும் அசிங்கப் படறதும் போதும்.' நினைத்துக் கொள்கிறாள்.

தெரிந்தவர்கள்கூட 'வேலைக்காரி இல்லையா?' என்று கேட்டு விட்டு நமுட்டு சிரிப்பு சிரிப்பதாகத் தோன்றியது அனுபமாவிற்கு.

"எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கவில்லை" அனுபமா மெல்ல தன் நிலையைக் கவலையோடு சொல்ல,

"அதுக்கு" என்று ஆரம்பிக்கிறான் கணவன்.

"நமக்கு குவார்ட்டர்ஸ் வேணாம். பேசாம ஊருக்குள்ளே ஒரு வீட்டைப் பாத்துப் போயிடலாம்."

''ஏதாவது உளறாதே. ஊருக்குள்ளே எல்லாம் வாடகை அதிகம். வாயை மூடு.''

அனுபமா கவலையில் ஆழ்ந்தாள். வருத்தத்தில் தோய்கிறாள். 'இனிமேல் வேலைக்காரிகளையே வைத்துக் கொள்ளக்கூடாது' என்ற முடிவிற்கு வந்து விட்டாள்.

இன்னும் கொஞ்ச நாள் போனது. பின் வீட்டு பாமா வருகிறாள். ''எங்க ஊர்லேர்ந்து ஒரு அம்மா வந்திருக் காங்க. ரொம்ப இல்லாதப்பட்ட குடும்பம். கொஞ்சம் வயசானதுதான். ஆனா எல்லா வேலையும் செய்யும். கொண்டு வந்து விடட்டுமா?'' பாமா கேட்க,

'இவுங்க வீட்டுக்கு ஒரு வேலைக்காரியும் நிக்க மாட்டா.' பாமாவும் சேர்ந்து முணுமுணுத்தது ஞாபகத்திற்கு வர, லேசான கோபத்தோடு பேசுகிறாள் அனுபமா.

''வேண்டாம் மிஸஸ் பாமா. என் வீட்டிலே என்ன நடக்குதுன்னு யாருக்கும் தெரியாது. வேலைக்காரி நின் னுட்டான்னா எம் மேலேதான் பிராப்ளம்னு கூசாம பேசுவாங்க. அதுனாலே வேண்டாம். வீட்டு வேலை ஒண்ணும் கஷ்டமில்லை உடம்புக்கு எக்ஸைஸ்தான்.''

''சொல்றவங்க சொல்லட்டும் மிஸஸ் அனு. நமக்குப் பிடிச்சா வச்சுக்கப் போறோம். பிடிக்கலைன்னா அனுப்பிச் சுடலாம். மத்தவங்க பேச்சை நாம ஏன் கேக்கணும்?'' ஏறக்குறைய ஒரு மணி நேரம் வாத விவாதம் நடந்து கடைசியில் அனு ஒத்துக் கொள்கிறாள். அப்படி வந்து சேர்ந்தவள்தான் குன்னம்மா.

வயது ஐம்பதுக்கு மேல் இருக்கலாம். ரொம்ப பரபர வென்று எதையும் செய்ததில்லை. அதே சமயம் ரொம்ப



நிதானமும் இல்லை. அந்த வயதுக்குரிய நிதானம், செயல் திறன் எல்லாம் இருந்தது. தூக்கிப் போடும் குணம் இல்லாமல் இருந்தது. பாத்திரம் மிகப் பளபளவென்று தேய்க்கா விட்டாலும் சற்று சுத்தமாகத்தான் தேய்த்தாள். வீட்டை மாய்ந்து மாய்ந்து பெருக்கா விடினும் ஓரளவு பரவாயில்லை. என்ன கொடுத்தாலும் எத்தனை கொடுத் தாலும் குறைவானாலும் கூட வாயைத் திறக்காது.

மிகவும் கிழிந்த புடவை, சுருங்கிய புடவையோடு வந்து ஒட்டிய வயிறும், ஒல்லிக்குச்சி உடம்புமாக வந்து வேலை செய்யும்போது பரிதாபமாக இருந்தது. இரண்டு மாதங்கள் போனது. சரியான நேரத்திற்கு வந்து வேலை செய்து விட்டு கொடுப்பதை சாப்பிட்டு விட்டுப் போகும் அந்தக் குன்னம் மாவை அனுபமாவிற்கு மிகவும் பிடித்தது.

''பாவம் ஏழை. வாயில்லா பூச்சி'' என்று நினைத்தவள் தன்னிடம் சற்று பழையதாகிப் போன புடவையை எடுத்து குன்னம்மாளுக்குத் தர, புடவையை வாங்கியவள் சட்டென்று அனுபமாவின் கால்களில் விழுந்தாள். அனுபமா பதறிப் போகிறாள்.

''என்னம்மா எழுந்திரு. உன் வயசு என்ன? என் கால்ல விழறே?''

''இல்லை தாயி. இந்த ஜன்மத்துலே ஒரு ரவ கந்தை கூட யாரும் வாங்கித் தந்தது இல்லே. இந்தப் புடவையே ஒட்டுப் போட்டு ஒட்டுப் போட்டு கட்டிக்கறேன்.'' கண்களில் கண்ணீர் துளிக்க கிழவி சொன்னது பாவமாக இருந்தது. மாற்றிக் கட்டிக் கொள்ள இன்னொரு புடவையையும் தருகிறாள் அனுபமா. குன்னம்மாள் அகமகிழ்ந்து போகிறாள்.

ஆறு மாதங்கள் ஓடியே போனது. பின் வீட்டு பாமாவும் சந்தோஷத்தை தெரியப்படுத்துகிறாள். ''எனக்குத் தெரி

யுங்க. குன்னம்மா உங்க வீட்டிலே வேலை செஞ்சுகிட்டு நிம்மதியா இருக்கப் போறான்னு எனக்குத் தெரியும்'' அனுபமாவிற்கும் மகிழ்ச்சியாக இருந்தது. 'வேலைக்காரி வைத்துக் கொள்ளத் துப்பில்லை' எந்த வேலைக்காரியும் அனுபமாவின் வீட்டில் இருக்க மாட்டார்கள் என்ற கெட்ட பெயரே மறைந்து போனது. பின்னும் ஒரு மாதம் ஓடிப் போனது. அன்று நாத்தனாரின் கணவருக்கு இருதய நோய் என்று ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாகவும் செய்தி வர, அடுத்த நாள் வேலைக்காரியைச் சீக்கிரம் வரும்படி சொல்லி அனுப்பி, காத்திருக்கிறாள். ஒன்பது மணிக்குக் கிளம்ப வேண்டுமென்றால் எட்டோ முக்கால் வரைக்கும் குன்னம் மாவைக் காணவில்லை. தினமும் ஏழு மணிக்கு வருபவள் இன்று எட்டு அம்பதுக்கு வருகிறாள்.

''ஏம்மா இன்னிக்கு ஊருக்குப் போறேன். சீக்கிரம் வான்னு சொன்னேன் இல்லே. தினம் ஏழு மணிக்கு வருவே இன்னிக்கு என்ன எட்டு அம்பதுக்கு வரே. நாளைக்கு வேலைக்கு வேண்டாம். இன்னிக்கு சீக்கிரம் வந்திடுன்னு சொல்லி அனுப்பினேன் இல்லே.'' சற்று எரிச்சலுடன் அனுபமா குரல் எழுப்ப,

''ஏம்மா அம்மாந் தூரத்திலேந்து வந்திருக்கேன். ஒரு காபி குடிக்கறியான்னு கேட்டியா? நான் பாவம் இல்லே. நீ எல்லாம் என்ன மனுஷி.'' கேட்டுவிட்டுப் பிழியப் பிழிய அழுகிறாள் குன்னம்மா. அனுபமாவிற்கும் எரிச்சல் வந்தது. இன்று வெளியே போகிறோம் என்று அத்தனை தூரம் சொல்லியும் வேண்டுமென்றே லேட்டாக வந்து விட்டு டிராமா ஆடுகிறது. வந்தவுடன் இத்தனை நாட்கள் காபி தரவில்லையா என்ன? 'என்னம்மா லேட்' என்பதற்கு எப்படி



டிராமா ஆடுகிறது?' எரிச்சலோடு ''சரி கிளம்பு. நீ இன்னிக்கு வேலை செய்ய வேண்டாம். நான் கிளம்பறேன்; நான் வரவே ஒரு வாரம் ஆகும்'' என்கிறாள்.

''இரண்டு நாள்லே வந்துருவேன்னு சொன்னே.''

''இல்லேம்மா நான் வர ஒரு வாரம் ஆகும். நிலைமை மோசமா இருக்காம். எங்களை அங்கேயே இருக்கச் சொன்னாங்க'' அனுபமா கூசாமல் பொய் சொல்கிறாள். ஏனோ அந்த வேலை செய்பவள் மேல் ஆத்திரமும் கோபமும் வருகிறது. 'வக்கத்துப் போய் இருப்பவளுக்கு தான் எத்தனை உதவி செய்தோம்? பாவம் என்று புடவை குடுத்து, காபி சாப்பாடு, எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து தந்து கடைசியில் தன்னை எப்படி எதிர்த்துக் கேட்கிறது. வாயில்லா பூச்சி என்று நினைத்தேனே.' சட்டென்று லேசாக அழுகை வர, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

''சரி நீ போம்மா. நான் கதவைப் பூட்டணும்'' என்கிறாள்.

''ஏம்மா இம்மாந்தூரம் வந்திருக்கேன். காபி கூட கொடுக்கலை. போன்னு சொல்றே'' சட்டென்று மீண்டும் குலுங்கிக் குலுங்கி அழ, காபியைக் கலந்து தருகிறாள் அனுபமா.

''துட்டு ஏதாவது கொடு'' குன்னம்மா கேட்க,

''எதுக்கு?'' என்கிறாள் அனுபமா.

''நீ ஒரு வாரம் ஆகும்ங்கற சாப்பாடு, காபிக்கு எல்லாம் நான் என்ன செய்வேன்?''

அனுபமாவின் ஆத்திரம் அளவில்லாமல் போனது. 'இத்தனை நாட்கள் யார் சாப்பாடு போட்டார்கள்? இப்போது ரைட் ராயலாகக் கேட்கிறது. எல்லாம் தன் நேரம்!' எரிச்சலும்

ஆத்திரமும் அடைகிறாள். 'இந்த மாதம் தொடங்கி இப்போது தான் ஐந்து நாட்கள் ஆகின்றன. ஐந்து நாட்களுக்கு என்ன தருவது?' சரி என்று அதன் சம்பள பாக்கி ஐம்பதைத் தருகிறாள். "இத பாரு உன்னோட சம்பளம். அஞ்சு நாள் வேலை செய்தே இல்லே. அது. மத்தது எல்லாம் வந்து பாத்துக்கலாம்." 'சரி' என்று தலையாட்டியவாறே வெளியே போனவள், அங்கே நாகராஜ் தனியாக அமர்ந்திருப்பதைப் பார்த்து 'சாமி' என்று தலையைச் சொறிகிறாள்.

"என்ன?" நாகராஜ் கேட்க, "அம்மா ஊருக்குப் போறாங்களாம். அதுனால வேலைக்கு வேண்டாம்னுட்டு போயிட்டே இருக்காங்க."

"அதுக்கு?"

"வெத்தலை பாக்கு போடணும். எப்படி ஒழிக்கப் பாத்தாலும் இந்தப் பளக்கம் விடமாட்டேங்குது சாமி."

"சரி இந்தா" ஒரு ஐந்து ரூபாயைத் தர சந்தோஷத்தோடு வாங்கிப் போனாள் முதியவள். கணவன் அனுபமாவிடம் விஷயத்தைச் சொல்லி எகிறி விழுகிறாள் அனுபமா.

"ஏங்க.. உங்களுக்கு அறிவில்லே. வேலைக்காரி கேட்டா கொடுத்துடுவாங்களா என்ன? என்கிட்டே வேற ஐம்பது ரூபாய் வாங்கிட்டுப் போயிருக்கா."

"எனக்கு எப்படித் தெரியும்?" நாகராஜ் கேட்க, பின்னும் ஆத்திரம் அடைகிறாள் அனுபமா.

"ஆமாங்க எதையும் வாய்விட்டுக் கேட்டா தானே தெரியும். எதையுமே பேசறதில்லே. எப்படித் தெரியும்?"

ஒரு வழியாக சண்டை போட்டு எரிச்சல், ஆத்திரம், மனத்தாங்கலோடு கிளம்பிப் போகிறாள்.



'எத்தனை ஏமாற்று இது? இதை இனிமேல் வேலைக்கு வைத்துக் கொள்ளவே கூடாது' முடிவு செய்து கொள்கிறாள்.

ஒரு வாரம் கழித்து வந்தபோது வீட்டு வாசலில் வந்து அமர்ந்து கொண்டிருந்தாள் குன்னம்மா. பத்து மணிக்கு வந்த போதே ஆரம்பித்து விட்டாள்.

"என்னம்மா எம்மா நேரம் நான் குந்திகினு இருக்கறது. வயசானவ நமக்காகக் காத்துட்டுக் கிடப்பாளேன்னு உனக்கு தெரிய வேணாம். ஆமா நான்தான் கேக்கறேன். வூட்டை வுட்டுட்டுப் போய் ஒரு வாரம் ஆய்ப்போச்சு. காலைல வரமாட்டே லேட்டா பண்ணுவே."

மாமியார் அதட்டுவது போல் வேலைக்காரி அதட்ட எரிச்சலூட்டுகிறாள் அனுபமா. எல்லாம் தன் வீட்டில் சாப்பிட்ட கொழுப்பு பேசுகிறது.

"இந்த பாரும்மா, நான்தான் வந்தப்புறம் பாத்துக்கலாம்னு சொன்னேன் இல்லே. உன்னை யாரு இப்ப வரச் சொன்னாங்க?"

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தான் தாமதம் ஒவென்று கத்தி, ஆர்ப்பாட்டம் செய்து, உரத்த குரலில் கூவி சண்டையிடுகிறாள் குன்னம்மாள்.

"ஏம்மா உன்னை நல்லவன்னு நினைச்சு வேலைக்கு வச்சதுலே இத்தனை கஷ்டப்படுத்தறே? முதல்ல பூனையாட்டம் இருந்தே?"

"ஏம்மா என்னென்னவோ திட்டறே. வயத்துப்பாட்டுக்கு இல்லேன்னு பொழைப்புக்கு வந்தா திட்டுவியா?" ஒவென்று கதறி அழுது வருத்தப்பட்டு... வீட்டு வாயிலில் அமர்ந்து விம்மி விம்மி அழுது கொண்டிருக்க ஒவ்வொரு பார்வையாளராக வீட்டில் சிறு கூட்டம் கூட, அனுபமா விக்கித்துப் போனாள்.




பார்த்துக் கொண்டிருந்த நாகராஜிற்கு கடுப்பு ஏற, எரிச்சலுடன் கேட்கிறான்.

''ஏய் வெளியே போ'' அவன் சொல்ல பின்னும் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு அழுது, சுற்றி இருப்பவர்கள் பேசி பேசி கடைசியில் ஒரு இருபது ரூபாய் கொடுத்து அனுப்பினான் நாகராஜன்! 'சே! இனிமேல் வேலைக்காரங்களே வேண்டாம். பின் வீட்டு பாமா சொன்னான்னு வச்சுகிட்டேன். போதும்.'' எரிச்சலோடு பேசுகிறாள், அனுபமா.

ஆத்திரம், எரிச்சல் கோபத்தோடு அமர்ந்திருந்தான் நாகராஜ். ''எல்லாம் உன்னாலதான். ஒரு வேலைக்காரியைக் கூட வச்சுகிட்டு குப்பை கொட்ட முடியலே.''

ஆத்திரம், கோபம், அழுகை எல்லாம் சேர பேசாமல் இருந்தாள் அனுபமா.

வீட்டில் உள்நாட்டு போர். அனுபமா ஒரு வாரம் முழுவதும் கணவனிடம் பேசாமல் இருக்கிறாள். நாகராஜ் எல்லாவற்றையும் மறந்து மனைவியிடம் பேச வந்தாலும், அனுபமா முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள். மனைவி யிடம் சமாதானமாகவே போக விரும்புகிறான் நாகராஜ். சிரித்துப் பேசி அவளுக்குப் பிடித்த பொருள்கள் வாங்கி வந்து, மனைவியை சந்தோஷப்படுத்த முயற்சிக்கிறான்.



ஒரு வழியாக அனுபமாவும் நாகராஜனும் பேச ஆரம்பித்தனர். அன்று ஞாயிற்றுக்கிழமை. நாகராஜனின் மற்றொரு பியூன் செந்தில் வருகிறான்.

''என்னப்பா?''

''சார் எங்கக்காவை அவ புருஷன் குடிச்சிட்டு அடிச்சு துரத்திட்டான். ரொம்ப கஷ்டப்படுத்திட்டான். உங்க வீட்டுலே வேலைக்கு வச்சுக்கங்க. வீட்டு வேலை நல்லா செய்யும் சார். ஒரு ஏழைக்கு உதவின மாதிரி இருக்கும் சார்.''

''இல்லைப்பா... நாங்களே செய்துக்கறோம். வரதுங்க எல்லாம் ஒண்ணு கூட சரியாயில்லை. நம்பளையே அசிங்கப்படுத்திட்டுப் போவுதுங்க.''

''இல்லீங்க சாமி. ஏதாவது ஆச்சுன்னா என்னைக் கேளுங்க.''

அவனை அனுபமாவிடம் அழைத்து வந்து, அனுபமா ஒத்துக் கொள்ள மறுத்து கடைசியில் அனுபமாவை ஒத்துக் கொள்ள வைத்து, அடுத்த இரண்டு நாட்களிலிருந்து வேலைக்கு வந்தாள் ராஜி. ராஜி அந்த ஒல்லி உடம்பையும் குச்சி குச்சி கைகளையும், கால்களையும் வைத்துக் கொண்டு விசுக் விசுக்கென்று நடந்து வருகிறாள். பாத்திரங்களை தடக் தடக்கென்று ஒரு நிமிடத்தில் கழுவிவிட, ''என்னம்மா இங்கு எல்லாம் பத்து, பசை அப்படியே இருக்கே'' என்று அனுபமா எடுத்துப்போட, ''நீ இப்படி தீய வச்சிருக்கே. எப்படி களுவறது?'' என்றவள் ஒரு கல்லை எடுத்து கரகரவென்று தேய்த்து, பாத்திரம் முழுவதும் கோடுகளாக ஆனது.

ஒருமுறை துணியில் அழுக்கே போகவில்லை என்று கேட்டபோது துணியை அடி அடி என்று அடித்து தோய்த்து கிழித்து விட்டாள்.

''என்னம்மா இது?'' என்று கேட்டதற்கு,

''நீதானே சத்தம் கேட்கலைன்னு சொன்னே?'' என்கிறாள்.

''யம்மா ரவ சோப்பு கொடேன், ரவ தேங்கா எண்ணெய் கொடேன், ரவ நல்லெண்ணெய், சீயக்காய் கொடேன்'' என்று தினமும் ஏதேனும் பொருள்களைக் கேட்டுக் கேட்டு வாங்கிக் கொண்டு போனாள்.

''த.. பாரும்மா.. தினமும் தர முடியாது..'' என்று எரிச்சல் பட்டால். முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அந்தக் கோபத்தை பாத்திரங்களின் மேலும் துணிகள் மேலும் வீட்டுத் துடைப்பத்தின் மேலும் காட்டுகிறாள். கடைசியில் அனுபமா பொறுக்க முடியாமல் கணவனிடம் சொல்கிறாள்.

''ஏங்க நிச்சயமா அந்த பொம்பளை வேண்டாம். என்னால வச்சுக்க முடியாது. சாமானை கேட்டுக் கேட்டு உயிரை எடுக்குது. தினமுமா தருவாங்க. ஒரு நாள் இல்லைன்னவுடனே சாமானை உடைக்கறது. துணியைக் கிழிக்கறது. முகத்தைத் தூக்கி வச்சுக்கறது. ஏங்க, தயவு செய்து இது வேணாம்.'' வந்த ஒரு வாரத்துலேயே நிறுத்தப் பட்டாள் ராஜி.

''இந்த சனியன் அது குணத்தையே மாத்திக்காது. ஏதோ பெரிய இடத்துக்குப் போனா நல்ல புத்தி வரும்னு நினைச்சேன். இப்படி பண்ணிட்டா'' என்ற செந்தில் ''ஊரிலேந்து என் தங்கச்சி பொண்ணு வனஜா இருக்குதுங்க. சின்ன வயசு. ரொம்ப சூப்பரா எல்லா வேலையும் செய்யும்'' என்கிறான்.

''இல்லேப்பா வீட்டிலே அம்மா வேலைக்கு ஆளே வேணாங்கறாங்க.''



''இல்லேங்க. அக்கா மோசம் ஒத்துக்கறேன். ஆனா இந்தப் பொண்ணு அப்பேற்பட்ட பொண்ணு. இப்ப நீங்க நிறுத்தினீங்க. நான் ஏதேனும் சொன்னேனா? ஒரு வாரம் வச்சுகிட்டு பாருங்க. சரிப்படலேன்னா நிறுத்திடலாம்.''

அடுத்து வந்தாள் வனஜா. நன்றாக பாத்திரம் கழுவினாள். வீட்டை நன்கு பெருக்கி சுத்தம் செய்தாள். துணியை நன்றாக பாந்தமாக துவைத்துப் போட்டாள். வீட்டு வேலை, வெளி வேலை என்று சுறுசுறுவென்று செய்தாள். பழனியம்மாள் மாதிரி தன் கணவன் பின்னே போகாமல் மிக மிக நாகரீகமாக தனக்கு உரிய வேலைகளை மிக மிக லாவகமாகச் செய்கிறாள். அன்று அனுபமா குளிக்கப் போகும்போது பாத்ரூமில் இருக்கும் சோப்பு டப்பாவில் குளியல் சோப்பைக் காணவில்லை. முதல் நாள்தான் சந்தன சோப் வாங்கி போட்டிருக்கிறாள். இன்று காணாமல் போனது. இன்னும் இரண்டு நாட்கள் சென்றது. டிரஸ்ஸிங் அறையில் இருந்த பெரிய பான்ட்ஸ் பௌடர் டப்பாவைக் காணவில்லை. அனுபமா தேடித் தேடிப் பார்க்கிறாள்.

இரவு குளிக்கும் அறையில் குளித்து விட்டு வந்து வேர்க்குருவிற்காக பிரிக்லிஹீட் சந்தன மணத்துடன் இருக்கும் பவுடரைத் தூவிக் கொள்வான் கணவன். அதை காணாமல் நாகராஜன் தேடுகிறான்.

''ஏய் அனு பவுடர் எங்கே?''

''நான் எடுக்கலையே?''

''பிரிக்லிஹீட் இங்கதானே இருக்கும். எங்கே போச்சு?''

''நீங்க வேற என் பான்ட்ஸ் பவுடரை வேறு காணோம். புதுசா நேத்துதானே வாங்கிட்டு வந்தேன்.

''நான் போன வாரம் வாங்கினேன்.

''என் சோப்பை வேற காணோங்க. நேத்து மஞ்சள் கிழங்கு தேய்ச்சுக்க புதுசா எடுத்து வச்சேன். அதையும் காணோம்.''

''இது என்ன புது வழக்கமா இருக்கு? இத்தனை நாள் நம்ப வீட்டிலே போட்டது போட்டபடி இருக்கும்'' இருவருமே யோசனை வயப்பட்டனர். யாரைச் சொல்வது? வேலைக்காரியாகத்தான் இருக்கும் என்ற சந்தேகம் வந்தது. ஆனாலும் கண்ணால் பார்க்காமல் ஒருவரை குற்றம் சொல்வது தவறு என்று தோன்ற, இருவரும் மௌனமாக இருந்தனர்.

அடுத்த நாள் காய்கறி கடைக்குப் போய் விட்டு வந்த வனஜா பில்லையும் நான்கு காய்கறிகளையும் நீட்டுகிறாள்.

''என்ன இது பகல் கொள்ளையா இருக்கு'' நாலு காய்கறி வாங்கிட்டு வந்திருக்கே. அதுவும் கால், கால் கிலோ தான் அதுக்கா ஐம்பது ரூபாய் காலி. அநியாயம்.''

''இன்னா பண்ணச் சொல்றே? விலைவாசி அப்படி. பில்லு கிரெக்டா உனக்குக் கொடுத்து இருக்கேன். இல்லே'' மௌனமாக தலை ஆட்டியவள் ஏதோ யோசனையுடன் உள்ளே போகிறாள். இதற்குள் டிரஸ்ஸிங் டேபிள் அடியில் பெருக்குகிறேன் என்று வெகு நேரம் நின்றவள் ஏதோ செய்தபடி இருக்க,

''என்னம்மா'' குரல் கொடுத்தபடி அனுபமா வர,

''ஒண்ணும் இல்லே இது கீழே விழுந்து கிடந்துச்சு. இத்தை சரியா மூடலே நீ. அதான் எடுத்து வச்சுகிட்டு இருக்கேன்'' தேங்காய் எண்ணெய் பாட்டிலை எடுத்து வைக்க, கீழே ஒரு சொட்டு எண்ணெய் கூட விழாமல், எல்லாமே அவளின் தலையிலும் கையிலும் தேய்க்கப்பட்டு இருந்தது.



பாட்டிலில் உள்ள தேங்காய் எண்ணெயில் பாதி காலி. பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு திக்கென்றது. முகம் சிவந்து போய் கோப வசப்பட,

''இத பாரும்மா. என்ன வேலை இது? எல்லாத்திலேயும் கையை வச்சு இப்படியா செய்வே? எந்த சாமான்கிட்டேயும் போற வேலை வச்சுக்காதே'' அனுபமா ஓவென்று கத்த,

''ஐய... யார் உன் சாமான்கிட்டே போனாங்க. ஏதோ கீழே குப்பைன்னு பெருக்கினேன். இதுக்குப் போய் இப்படி கூவறே?'' என்று கையை உதறிக் காட்டியபோது புடவை இடுக்கிலிருந்து கண் மை, லிப்ஸ்டிக், நெயில் பாலிஷ் எல்லாம் கீழே விழுந்தது. அதிர்ந்து போகிறாள் அனுபமா.

''அடிப்பாவி எல்லாத்தையும் திருடிகிட்டுப் போறயா? சந்தேகப் பட்டது சரியாப் போச்சு.''

''ஏய் என்ன.. திருடு கிருடுங்கறே? ஏதோ கீழ கிடந்த தேன்னு எடுத்து வச்சா இப்படி எல்லாமா பண்ணுவீங்க. சே! நீ எல்லாம் என்ன பொம்பளை?'' அவள், கத்த அனுபமாவிற்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''போதும் கிளம்பு; எங்க வீட்டுலே திருடை எல்லாம் வச்சுக்க முடியாது.''

இதைக் கேட்டதும் குய்யோ முறையோ என்று கத்தி கூப்பாடு போட்டது. அனுபமா அத்தோடு பேசவே இல்லை.

இதென்ன அநியாயம். கண் எதிரில் திருடினால் தட்டிக் கேட்க மாட்டார்களா? பச்சை அநியாயம்.

கணவன் வந்தபோது விஷயத்தைச் சொல்லி வருத்தப் பட, 'ஓ அந்த சனியன் தான் எல்லாத்தையும் திருடுதா? ஒழிஞ்சுதுன்னு சந்தோஷப்படுவியா. ஏன் வருத்தப்படறே?'' கணவன் கேட்க,

''வருத்தப்படாம என்ன செய்ய முடியும்? இது வாசல்ல நின்னு சுத்தி ஊரே வேடிக்கை பார்த்தது.''

''யார் பார்த்தா என்ன? நம்ம நேர்மையா இருந்தா எவன் என்ன சொன்னாலும் கேர் பண்ணக் கூடாது.''

''இல்லைங்க. வேலைக்காரங்களும், இந்த வீட்டுக்கும் ஏதாவது பிரச்சனை. அப்பப்ப வீட்டு வேலைக்காரங்க மாறிகிட்டே இருக்கறதுனாலே என்னைப் பத்தியும் என்னென்னவோ, பேசறாங்க. அதுக்குதான் வேலைக் காரர்களே வேண்டாம்னு நினைச்சேன்'' வருத்தத்தோடு சொல்ல,

''போகட்டும் விடு. யார் என்ன வேணா சொல்லட்டும்? எல்லாத்தையும் மறந்துடு. நம்ம நல்லவங்களா, கெட்டவங்களான்னு நம்ம மனசாட்சிக்குத் தெரியும்.''

பின்னும் ஒரு வாரம் சென்றது. லேடீஸ் கிளப் மீட்டிங் குக்கு கூட செல்லவில்லை. அங்கே போனால் ஜாடை மாடையாக சைகை செய்து கொண்டு பேசும் பெண்களைப் பார்த்தால் கஷ்டமாக இருந்தது. அதனால் மீட்டிங்குக்குப் போகாமல், சற்று வெளியே கூட போகாமல் தவிர்த்து விட்டாள் அனுபமா. 'இனிமேல் ஜன்மத்துக்கும் வேலைக் காரியே வைத்துக் கொள்ளக்கூடாது.' நினைத்துக் கொள் கிறாள் அனுபமா. 'நாம் நினைப்பது எல்லாமா நடக்கிறது. நாம் ஒன்று நினைக்க, தெய்வம் வேறொன்றை அல்லவா நடத்துகிறது?'

அன்று நாகராஜ ஒரு முப்பத்து ஐந்து வயதுக்கு மேல் இருக்கும் ஒரு குண்டு பெண்ணோடு வருகிறான். தலையில் எலிவால் போல் இருக்கும் மெல்லிய நீட்ட முடியை கட்டி



இருக்கிறாள். வயிறும் வாயுமாக உருவம் பெரியதாக பெரிய குரலோடு வருகிறாள்.

''என்னங்க? யார் இது?''

''எங்க ஆபீஸ் வாட்ச்மேன் மாடசாமியோட சம்சாரம். வீட்டு வேலைக்கு கூட்டி வந்தேன்.''

''எதுக்குங்க எனக்கு வீட்டு வேலைக்கு ஆளே வேண்டாம்னு ஏற்கனவே சொல்லிட்டேன். மறுபடியும், மறுபடியும் ரிஸ்க் எடுக்க விரும்பலை.''

''நானும் சொல்லியாச்சு. மாடசாமி கால்ல விழுந்து கெஞ்சினான். வருமானம் பத்தலையாம். ஊரைச் சுத்தி கடனாம்.''

''யாரு உங்க ப்ராடு பியூனா?''

''இல்லை.. இல்லை.. இவன் ரொம்ப நல்லவன்மா. ரொம்ப நேர்மையானவன்.''

அனுபமா பதில் பேசாமல் வந்த வேலைக்காரியைப் பார்க்கிறாள். சற்று பானை வயிறும் தடியான கைகளும் உப்பின கன்னங்களுமாக நிற்பதைப் பார்த்தவளுக்கு ஏனோ பிடிக்கவில்லை.

''இல்லீங்க எனக்கு வேலைக்கு ஆள் வேண்டாம்.''

''ப்ளீஸ் வச்சுக்கம்மா, எனக்காக. பியூன் ரொம்ப நல்லவன்.''

அனுபமா வேண்டா வெறுப்பாக தலை அசைக்கிறாள். அன்று முதல் வேலைக்கு வர ஆரம்பித்தாள் சரசு. கொஞ்சம் வயதானவள் என்பதால் விந்தி விந்தி நடந்து கொண்டிருந் தாள். பாத்திரங்களை சற்று பொறுமையாகக் கழுவி

வைக்கிறாள். வீட்டை சற்று நிதானமாகத்தான் பெருக்கு கிறாள். நிறைய தண்ணீர் விட்டுத் துடைத்துப் ஃபேனை போடுகிறாள். வேலை ஓஹோவென்று இல்லாவிட்டாலும் குற்றம் சொல்லும் பாவனையில் கிடையாதுதான். மொத்தத்தில் பரவாயில்லை ரகம்.

ஒரு வாரம் சென்றிருக்கும் அன்று குளிப்பதற்காக குளிக்கும் அறைக்குள் சென்றவள், அங்கே குளிக்கும் அறை யோடு ஒட்டிக் கிடக்கும் கழிப்பறை மிக மிக அசுத்தமாக இருப்பதைக் கண்டு அதிர்ந்து போனாள்.




''யார் வேலை இது. பாத்ரூம் போயிட்டு தண்ணிகூட கொட்டாம வந்திருக்காங்க'' எரிச்சலோடு கணவரிடம் போய் கேட்க,

''என்ன இப்படி பேசறே. டாய்லெட்டை இதுவரைக்கும் அசிங்கப்படுத்தி இருக்கேனா? ஒரு வேளை நீ யூஸ் பண்ணிட்டு மறந்து போயிருக்கலாம்.''

''என்னங்க இப்படிப் பேசறீங்க? நான் என்னிக்காவது டாய்லெட்டை க்ளீனா வச்சுக்காம இருந்திருக்கேனா.''

''பின்னே யார் வேலை இது?''

''ஒருவேளை அந்த புது வேலைக்காரி...'' அனுபமா மெல்ல இழுக்க,

''ஏய் யாரையும் தப்பாப் பேசாதே. பாவம் வயத்துப் பாட்டுக்கு வருது.''



''ஆமா வயத்தையும் அங்கேயே சுத்தம் பண்ணிட்டு வரது தானே.''

''என்னம்மா நீ'' நாகராஜ் சற்று கோபிக்க,

''இத பாருங்க உங்க ஆளுங்கறதுனாலே எல்லாத்தையும் ஒத்துக்க முடியாது. சொல்லி வையுங்க.''

''சரி... அவளையே தண்ணி கொட்டச் சொல்லு.''

ஆனால் சரசு தண்ணீர் கொட்ட மறுத்தாள்.

''அதெல்லாம் முடியாதும்மா. நீ வேணா கழுவிக்க. நான் கக்கூஸ் கழுவறவ இல்லே.''

எரிச்சலும் ஆத்திரமுமாக கழிப்பறையை சுத்தம் செய்கிறாள் அனுபமா.

ஒரு இரண்டு நாட்கள் போனது. இவர்கள் படுக்கை அறையை ஒட்டிய கழிப்பறை நாறியது. அங்கும் யாரோ தண்ணீரைக் கொட்டாமல் போயிருக்கிறார்கள். அன்றும் அனுபமா தண்ணீரைக் கொட்டி சுத்தம் செய்கிறாள். இதைக் கண்டு பிடிக்காமல் விடக் கூடாது. நினைத்துக் கொண்டவள், அடுத்த நாள் துணி துவைப்பதற்காக பாத்ரூமில் நுழைந்து சரசு தாழ்ப்பாள் போட்டுக் கொள்ள கதவைத் தட்டுகிறாள் அனுபமா.

''ஏம்மா...'' கதவைத் திற. எதுக்கு கதவை மூடறே?''

திடுக்கிட்டவளாய் கதவைத் திறக்கிறாள். மறுபடியும் கழிப்பறையில் அசிங்கம்.

''ஏய் இது என்ன வேலை?'' அனுபமா மிரட்ட,

''எதும்மா தெரியலையே'' என்கிறாள் வேலைக்காரி.

''ஏம்மா ஏதாவது யூஸ் பண்ணினா சுத்தப் படுத்த மாட் டியா? கொஞ்சம் தண்ணி கொட்டினா என்ன குறைஞ்சிடுவே?''

அவள் மௌனமாக இருக்க, ''இத்தனை பெரிய பொம்பளையா இருக்கே, இப்படியா செய்வே?'' என்றவள், 'கிளம்பு' என்று கத்தியபடி மூன்று நாட்கள் செய்த சம்பளத்தைத் தருகிறாள். இறுகிய முகத்தோடு வெளியே போகிறாள் சரசு.

அடுத்த நாள் அலுவலகம் முழுவதும் இவளுக்கு வேலைக்காரியே நிக்காது என்ற பெயருடன் ஒரே பேச்சாம். கணவன் தயங்கித் தயங்கி சொன்னபோது வெடிக்கிறாள்.

''ஏங்க உங்ககிட்டே நூறு தடவை சொன்னேன். நீங்க தான் கேக்கலை. இப்ப இது உதவியா உபத்திரவமா சொல்லுங்க.''

''சாரிம்மா என்னவோ ரொம்ப கெஞ்சினான்னுதான் வைச்சிக்கணும்னு கஷ்டப்படுத்திட்டேன். சாரிம்மா.''

அனுபமா மனம் மறுகிக் கொண்டிருந்தது. என்னதான் புருஷன் சமாதானம் சொன்னாலும் மனசு வெந்து கொண்டிருந்தது.

அன்றையிலிருந்து அனுபமா வீட்டு வேலைகள் முழுவதும் செய்யலானாள். வீட்டில் இருந்த ஒட்டடைகள், குப்பைகள் இவற்றை கூட்டி, பாத்திரம் கழுவி, துணி துவைத்து பரந்து பரந்து வேலை செய்கிறாள். கடை கண்ணிக்கு போகிறாள். ஏதேனும் ஒரு வேலைக்காரி எதிர்ப்படும் போதெல்லாம் கூடுமான வரை அந்தப் பக்கம் முகம் காட்டாமலேயே போகத் தொடங்குகிறாள்.

பல நாட்கள் இப்படி போய் இப்போது எல்லாமே சகஜமாகச் செய்யத் தொடங்கும்போதுதான் ஒரு நாள் பழனியம்மாள் எதிர்ப்படுகிறாள். இவளைப் பார்த்ததும்



அவளின் முகம் மாறி பக்கத்தில் இருப்பவளிடம் பேசத் தொடங்குகிறாள்.

''யக்கா கொஞ்சம் தள்ளி வா. அந்தப் பொம்பளை கண்ணுலே பட்டுடப் போறே? அப்புறம் அவ புருஷனுக் காக நீ இங்கே நிக்கறேன்னு சொல்லிடும்.''

''என்ன பழனி உளர்றே?''

''நீ வேறக்கா. நானா உளர்றேன். உண்மையைச் சொல் றேன். அதும் வீட்டிலே வேலைக்கு சேர்ந்தேன். எத்தினி உழைச்சிருப்பேன் தெரியுமா. பாவம். வீட்டிலே இருக்கற பொம்பளையாச்சேன்னு எல்லாத்தையும் இழுத்துப் போட்டுகிட்டு செய்தேன். கடைசியிலே அவ புருஷனை வைச்சிருக்கேன்னு சொல்லிட்டா.''

''அடிப்பாவி'' என்கிறாள் கூட வந்தவள்.

''அப்புறம்'' அவள் கேட்க,

''இந்த மானங்கெட்ட வேலை வேணாம்னு உதறிட்டு வந்தேன். அப்புறம் அவங்க ஜனங்க எங்க ஜனங்க எல்லோரும் வந்து கெஞ்சினாங்க. நான் ஒத்துக்கவே இல்லை.''

'அடிப்பாவி முழுப் பூசணிக்காயை சோத்தில் மறைக் கிறாள்.' எரிச்சலுடன் பழனியை உறுத்துப் பார்த்துவிட்டு வீட்டிற்குப் போகிறாள் அனுபமா.

மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. இந்த மனமே விசித்திரமானதுதான். அடுத்தவரைப் பற்றி கேலி பேசவோ புரளி பேசவோ ஆரம்பித்தால் கூட சேர்ந்து கொண்டு ஆனந்தமாக திட்ட ஆரம்பிக்கும். அதே நம்மைப் பற்றி யாரேனும் பேசி விட்டார்கள் என்றால் தாள முடியாமல் ருத்ர

தாண்டவம் ஆடத் தொடங்கி விடுவோம். நான் மிக மிகச் சரியானவன் என்னைப் பற்றி எப்படி சொல்லலாம் என்ற ஆத்திரம், கோபம் எல்லாம் வந்து விடும். இங்கே தவறு யார் மேலோ தெரியாது. இருந்தாலும் பழனி அனுபமாவையும், அனுபமா பழனியையும் தவறானவர்கள் என்று சொல்லுகிறார்கள். மனம் வேக வேக உள்ளே போன அனுபமா தவித்துப் போகிறாள். நாம் எப்போதுமே அடுத்தவர்களுக்காகத்தான் வாழவே செய்கிறோம். நமக்காக என்று வாழவே முயற்சி செய்வதில்லை. அடுத்தவர் என்ன நினைத்துக் கொள்வார்கள்? அடுத்தவர்கள் என்ன பேசுவார்கள்? அவர்கள் ஏதேனும் தவறாக நினைத்து விடுவார்களோ இப்படித்தானே பலரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இங்கே அனுபமாவிற்கும் இதே நிலைமைதான். எத்தனை பேர் எதிரில் இப்படி கத்தி, எல்லோரும் தன்னைப் பார்த்து தான் சே... கடவுள் தனக்கு ஏன் இத்தனை கொடுமைகளைச் செய்கிறார். நினைத்து, நினைத்து வேதனைப் படுகிறாள்.

ஒரு வாரம் வரை வெளியே போகாமல் இருக்கப் பழகினாள்.

''வா வெளியே போவோம்'' வார இறுதியில் பெண்டாட்டியை வரச் சொல்லி வற்புறுத்துகிறான் கணவன்.

''வேண்டாங்க மனசு சரியில்லை.''

''பைத்தியம் வா. வெளியே போகலாம். வீட்டுக்குள்ளேயே புழுங்கிகிட்டு இருந்தா டென்ஷன் வியாதிதான் வரும்.''

கணவனின் ஆதரவான வார்த்தைகள் மனதை சந்தோஷப் படுத்த, சட்டென்று அவன் தோளில் தலை வைத்துப் படுக்கிறாள்.



''என்னாச்சும்மா?'' தலையைத் தடவுகிறான். ''த... பாரு எல்லாத்தையும் ஈஸியா எடுத்துக்கக் கத்துக்கணும். இந்த லோ லெவல்ல பழகும்போது ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். ஒரு புத்தகத்துலே படிச்சிருக்கேன்னு கபீர் சொல்லி இருக்கார்.

ரொம்ப கீழான புத்தி இருக்கறவங்க நாய்க்கு சமானமாம். நாயோட பிரண்ட்ஷிப் வச்சுகிட்டா நக்கும். அதுவும் கெடுதல், விரோதம் வச்சுகிட்டா கடிக்கும். அதுவும் கெடுதல். அப்படித்தாம்மா. பணம்தான் பிரதானம்னு வாழற ஜனங்ககிட்டே வேற எதை எதிர்பார்க்க முடியும். லாபம் கிடைச்சுதுன்னா மேலே விழுந்து நக்கும். நம்மால ஏதாவது நஷ்டம்னா கடிக்கத்தான் வரும். எல்லாத்துக்கும் தயாரா இருக்கணும். இதுக்கெல்லாம் பயந்தா முடியுமா? தெரியாம சாக்கடையிலே கல்லு பட்டாலும் நாம ஜாக்கிரதையா ஒதுங்கித்தான் போகணும். அதுனால எதையும் பெரிசு படுத்தாதே. வா வெளியே போயிட்டு வருவோம்.''

கணவனோடு வெளியே கிளம்பி கடைத் தெருவைச் சுற்றி விட்டுத் திரும்பும்போது, எதிர்ப்பட்டாள் வனஜா. அவளைப் பார்த்ததுமே அனுமுகத்தைத் திருப்பிக் கொண்டாள். போதும் ஏற்கனவே பழனியால் அவமானப்பட்டது போதும். இதுவேறு ஏதாவது சொல்லப் போகிறது? ஆனால் நடந்ததே வேறு.

''யம்மா... எங்கேம்மா வந்தே? கடைக்கா?'' என்று சிரித்தபடி எதிரில் வருகிறாள். கூடவே வருகிறாள். அனுவிற்கு ஆச்சரியமாக இருந்தது. 'தனக்கு சங்கடம் வரும் என்று நினைத்தபோது சங்கடம் இல்லாமல் ஆனந்தம் அல்லவா வந்திருக்கிறது? ஆச்சரியம்தான்.'

''யம்மா கண்ணாடி வளையல்கள் எல்லாம் பாக்கறியா? பிடிச்சிருக்கா?'' அவள் காண்பிக்க, காண்பிக்க தனக்குப் பிடித்த டிசைன்களை எடுத்தவள், நூறு ரூபாய் நோட்டைத் தர,

''நீ தாம்மா நான் போய் சில்லரை மாத்திட்டு வரேன்.''

பதிலுக்கு எதிர்பார்க்காமல் நூறு ரூபாயை எடுத்துக் கொண்டு விடுவிடுவென்று போனவள் போனவள்தான்.

சிறிது நேரம் காத்திருந்து காத்திருந்து பின் தான் ரூபாய் எடுத்துக் கொண்டு சென்றது தெரிய பதட்டப்படுகிறாள். பின் எரிச்சலுருகிறாள்.

பின் வேறு கடையில் ஏதோ வாங்கி சில்லரை மாற்றி வீட்டிற்குச் செல்ல அனுபமாவின் மூடே மாறிவிட்டது. ''சரி விடு...''

''என்னங்க நூறு ரூபா அநியாயமா ஏமாந்துட்டேன்.''

''கவலைப்படாதே. எங்க ஆபீஸ் பியூன்கிட்டே சொல்லி வாங்கிடலாம். வா.. போவோம்.''

மனவேதனைகளை மறக்க வெளியே சென்று, இருக்கும் வேதனைகளை அள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறாள் அனுபமா. மனம் சோர்ந்து போய் எண்ணங்களில் கவலை தோய்ந்து, நிலைமை சரியாகவே பத்து நாட்களுக்கு மேல் ஆனது.

நாகராஜ் எத்தனையோ தேற்ற முயன்றும் அவள் தேறுவாள் போலத் தெரியவில்லை. அன்று வெளியூருக்குப் போகும் போது அவளையும் கூட்டிச் செல்ல ஏற்பாடாயிற்று.

''இல்லைங்க நான் வரலை.''

''உன்னை இங்கே தனியா விட்டுட்டு நான் போகலை. நீ என் கூடத்தான் வந்தாகணும்.''



நாகராஜ் வயதான அதாவது ஐம்பது வயதுக்கு மேற்பட்ட பெண்களில் நிறைய பேரில் இந்த மனச் சோர்வை பார்த்திருக்கிறான். கணவன், பிள்ளைகள் என்று தன் வாழ்க்கையை வாழ்ந்துவிட்டு பிள்ளைகள் பெரியவர்கள் ஆகி வெளியே சென்றதும் இன்று கணவன் வேலையில் ஈடுபட்டால் தன்னந்தனியாக வீட்டில் இருப்பவளுக்கு மனச் சோர்வு, தனிமை, இயலாமை, வேதனையில் புழுங்கி, புழுங்கி செத்து, செத்து சாதாரணமாகவே இப்படி என்றால், வேலைக்காரியால் அவமானம் ஏற்பட்டவளுக்கு இன்னும் மனக்கசப்பு இருக்காதா? என்ன?

வெளியூருக்குப் போகிறோம் என்று சொல்லி மனைவியின் பிறந்த ஊருக்கே அழைத்துச் சென்றான்.

''என்னங்க இது உங்களுக்கு என்னவோ வேலைன்னீங்க? கடைசியிலே எங்க ஊருக்கு வந்திருக்கீங்க?''

''உங்க ஊருக்குப் பக்கத்திலேதான் எனக்கு இன்ஸ்பெக்ஷன். அதுனால இங்க இருந்தே போகலாமே.''

ஒரு வாரம் போனதே தெரியவில்லை. அனுபமா மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருக்கிறாள். எந்த சோகமான நினைவுகளும் மனதில் இல்லை. புறப்படும் நேரம் வரத்தான் வந்தது.

''என்னக்கா இது? அத்தான் இப்பதான் விலாவாரியா விஷயத்தைச் சொன்னாரு. ஏங்கா செல் இருக்கில்லே. ஒரு செல் அடிச்சிருந்தா ஊருலேந்தே உனக்கு வேலைக்காரியை அரேன்ஜ் பண்ண மாட்டேனா? இப்படி தப்பா வருத்தப்பட்டு அத்தானை தவிக்க வைக்கலாமா?'' செல்லமாகக் கடிந்து கொள்கிறாள் தங்கை ஜெயா.

"இது யார் பார்த்தியா?" என்று ஐம்பது வயது முதியவளை கொண்டு வந்து சேர்க்கிறாள்.

"ஐ தாயியா? எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன் கண்ணு. நீ எப்படி இருக்கே?"

அனுவின் பிறந்த வீட்டில் பல வருடங்கள் வேலை செய்தவள்.

"உம் புருஷன் எப்படி இருக்கான்? உனக்கு மூணு பிள்ளைங்க இல்லே..." அவள் கேட்க,

"ஆமாம்மா. பெரிசு எட்டாவது படிக்குது. அடுத்தது ஆறாவது. கடைக்குட்டி மூணாவது. கடைசிதாம்மா ஆம்பளைப் பொறப்பு." சிரித்தவள் அனுபமாவின் குடும்பத்தைப் பற்றி எல்லாம் விலாவாரியாக விவாதிக்கிறாள்.

"உங்க பொண்ணு இன்னும் வெளியூர்லதான் இருக்கா. வருமா?" என்றெல்லாம் கேட்கிறாள்.

கணவன் திடீரென்று போய் விட்டதால்தான் வேலை தேடி அலையும் நிர்ப்பந்தம் என்று சொல்லிவிட்டு தானே வருவதாகச் சொன்னபோது அனுபமா குதூகலமடைந்தாள்.

மனம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தது.




சிறு வயதிலிருந்து அம்மாவின் வீட்டில் இருந்தவள், அனுபமா திருமணம் ஆகி அம்மாவே வேறு ஊர் மாற்றி சென்றபோது எத்தனையோ வருடங்களாக வேலை



செய்தவள். இவர்கள் செல்லும்போது பிழியப் பிழிய அழுதவுடன் சற்று தளர்ந்தும் போனாள். பின் அவள் அந்த ஊரிலேயே இருக்கும் தங்கையிடம் வேலை செய்வதாக எப்போதாவது தொடர்பு கொண்டால் தங்கை கூறுவாள்.

"இல்லைம்மா. நீ அங்கயே இருக்கணும். நான் இருக்கற இடம் கிராமத்துலேந்து ரொம்ப தூரம் இருக்கு."

"தெரியும்மா. வயத்துப் பாட்டுக்கு வேற என்ன செய்ய முடியும்?"

ஊரிலேர்ந்து அம்மா வந்திருக்குது. அது குழந்தைகளை பாத்துக்கும். நான் உன் கூட வரேன்."

இன்னும் இரண்டு நாட்கள் கழித்து ஊர் வந்து சேர்ந்த அனுபமா வேலைக்காரியையும் கையோடு கூட்டி வந்தாள்.

'இவளாவது நிற்பாளா?' ஊரில் உள்ளவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

ஆயிற்று வேலைக்காரியும் வந்து ஒரு மாதம் ஓடி விட்டது. வீடு ஜகஜோதியாக மின்னிற்று. பார்த்துப் பார்த்து மேசை துடைப்பதிலிருந்து நாற்காலியை சுத்தம் செய்வதிலிருந்து புத்தகங்களை அடுக்கி வீட்டைப் பாந்தமாக பெருக்கி, ஒரு துணியைப் போட்டு நிதானமாகத் துடைத்து, பாத்திரங்களைப் பளபளவென்று கழுவித் துணியை அழுக்குப் போக மிக மிக சுத்தமாகத் தோய்த்து அது மட்டுமல்லாமல் கடை, கண்ணி எல்லாம் விசாரித்து தேவையானவற்றிற்கெல்லாம் சென்று, காய்கறி வாங்கி சாமான்கள் வாங்கி, துணிகளை இஸ்திரிக்கு கொடுத்து, எடுத்து வந்து இருக்கும் தொட்டிகளுக்கு தண்ணீர் பாய்ச்சி, தோட்டத்தை வேறு பராமரிக்கத் தொடங்கினாள்.

அனுபமாவிற்கு மட்டுமல்ல நாகராஜுவிற்கும் அவளை மிகவும் பிடித்து விட்டது. அனுபமா அவளுக்கும் சேர்த்து சாப்பாட்டை வடித்துப் போட்டாள். ''யம்மா ஏம்மா சாப்பாட்டை வேஸ்ட் பண்றே? கொஞ்சமா கொடு போதும். என்னால அதிகமா சாப்பிட முடியாது.''

ஓய்வு நேரத்தில் வராண்டாவில் படுத்துக் கொண்டாள். யாருக்கும் எந்தத் தொந்தரவும் செய்யாமல் வீட்டை மிக மிக நன்றாகப் பராமரித்தாள். அனுபமா முன்னூற்று ஐம்பதாக சம்பளத்தை ஏற்றித்தர, ஐம்பதைத் தான் வைத்துக் கொண்டு முந்நூறு ரூபாயை வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்.

அந்தக் காலனியில் இதுவரை அனுபமாவிற்கு இருந்த கெட்ட பேர் மறைந்தே போனது. 'அனு ரொம்ப பர்பெக்ட். எப்படி வேலை செய்யறா பாரு வேலைக்காரி. வீடே பளபளக்குது. என்றாவது ரொம்ப ஓய்வாக இருக்கும் நேரம், துணி தோய்க்கச் சொல்லியோ, பாத்திரம் கழுவச் சொல் லியோ, இல்லை வீட்டை சுத்தமாக்கித் தரச் சொல்லியோ, அக்கம் பக்கத்தினர் கூப்பிட, அனுவின் ஒப்புதலோடு அதையும் செய்து ரூபாய்கள் வாங்கிக் கொண்டாள் தாயி. தப்பித் தவறிக்கூட அதிகமாகப் பேச மாட்டாள். எப்போதும் உதடுகளில் நிற்கும் அந்த ஆழ்ந்த புன்னகை. அந்தப் பகுதி யில் இருப்பவர்களுக்கும் தாயியை ரொம்பப் பிடித்து விட்டது.

''இத்தனை பர்பெக்டா இருக்கறதுனாலதான் உங்களுக்கு எந்த வேலைக்காரியும் சரிப்படலை.'' சொல்லி சிரிக்கிறாள் பாமா. லேடீஸ் கிளப்பில் கூட இவளுக்கு சற்று தனி மரியாதைதான்.

''வீட்டை எப்படி வச்சிருக்காங்க பாருங்க. எல்லாத்தி லேயும் அவுங்ககிட்டே பர்பெக்ஷன்.''



ஆயிற்று தாயி வந்து ஒரு வருடம் சென்று விட்டது. மகள்களை பார்த்து வருகிறேன் என்று ஒரு வாரம் விடுப்பு எடுத்துப் போனாள் தாயி. அவளுக்குப் புதுப் புடவை, பிள்ளைகளுக்கு நோட்டு, புத்தகங்கள், சாப்பிட இனிப்புகள் என்று வாங்கி அனுப்பி இருந்தாள் அனுபமா. கணவனுடன் தானும் போய் இரவில் ஏற்றி விட்டு வந்திருந்தாள்.

ஆனால் நாம் ஒன்று நினைக்க தெய்வம் வேறு அல்லவா நினைக்கிறது. 'வருகிறேன்' என்று சொன்னவள் வரவே இல்லை. அவளின் அம்மா இறந்து விட்டதாகவும், இனிமேல் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள தான் அங்கே இருந்தே ஆக வேண்டும் என்றும் தான் வர முடியாமைக்கு மன்னிப்பு கேட்டு, தன்னை நன்றாக கவனித்துக் கொண்டதற்கு நன்றி என்றும் அனுபமாவின் தங்கையின் வீட்டிலிருந்து போன் செய்தாள் தாயி.

''தாயி ரொம்ப நல்ல வேலைக்காரி. அதைக் கூட வச்சுக்கத் தெரியலை பாரு.''

''இவகிட்டே எவ வேலை செய்வா?'' மறுபடியும் ஜாடை மாடையான பேச்சுக்கள் எழுந்து கொண்டுதான் இருக்கின்றன.

தாயியைப் போல் ஒரு நல்ல வேலைக்காரி மீண்டும் கிடைப்பாளா? நம்பிக்கையுடன் மறுபடியும் தேடிக் கொண்டிருக்கிறாள் அனுபமா.

# ரீது

1



குருவிற்கு அந்த நாலு கால் பிராணி என்றாலே மரண பயம்தான். 'நாய் என்று அந்த வார்த்தையை வழி மொழிந்தாலே மனம் ஒரு எக்கு எக்கி தவிக்கும்.'

''டேய் குரு. நீயா நிறைய கற்பனை பண்ணிக்கறே? நாய் ரொம்ப ரொம்ப நன்றியுள்ள பிராணிடா. நீ படிச்சதில்லையா?'' அவனுடைய உயிர் நண்பன் தனபால் தலையில் அடித்து தட்டாத குறையாகச் சொல்கிறான்.

நாயை வளர்த்துப்பாருடா அதன் அருமை தெரியும்'' நாயின் அருமை குருவிற்கா தெரியாது?

ஏனோ சின்ன வயதிலிருந்தே நாயென்றாலே குருவிற்கு பயம்தான். அம்மா சிறுவயதில் கதை சொல்லும்போது தன் கற்பனை சக்தியை வீசி விசிறி நாய் கதைகள் கூட சொல்லி இருக்கிறாள்.

''அஞ்சு அறிவு. அஞ்சு அறிவுங்கறோம். அதுக்கு அஞ்சறிவா? இல்லை நமக்கா? ஏதாவது தப்பு பண்ணிட்



டோம்னா நாய்க்கு கட்டாயம் தெரிஞ்சிடும் நம்மால நல்லவன் யார், கெட்டவன் யார்னு சொல்ல முடியுதா?''

அம்மா சொல்ல சொல்ல சின்ன வயது குரு ஆர்வமாகக் கேட்பான். ''நாய்க்கு மட்டும் நாம திருடினோம்னு எப்படி தெரியும்மா?''

''அதுக்கு மோப்ப சக்தி இருக்கே. அதுவே எல்லாத்தையும் கண்டுபிடிச்சிடும். ஒரு சின்ன தப்பு. திருட்டு பண்ணியிருந்தாலும் அது விடவே விடாது.''

நாயைக் கடவுளுக்கு சரி சமானமாக அம்மா சொல்ல சொல்ல, குருவிற்கு திக் திக் கென்று இருக்கும். 'வகுப்பில் பக்கத்தில் அமரும் பையனின் பலப்பம் நல்ல சிகப்பு கலராக இருக்கிறது என்றுதான் யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டோமே அதுவும் நாய்க்குத் தெரிந் திருக்குமோ? இன்னுமொரு நாள் இனிப்பு வகைகள் விற்கும் கடைக்கு சென்றபோது கடைக்காரனுக்குத் தெரியாமல் கொஞ்சுண்டு பால்கோவாவை எடுத்து வாயில் போட்டோமே. அதுவும் நாய்க்கு தெரிந்திருக்குமோ? தீபாவளியன்று தனக்கும் தங்கைக்கும் அம்மா பட்டாசுகளைப் பிரித்து கொடுத்தபோது தங்கையை ஏமாற்றி, பயமுறுத்தி பாதி பட்டாசு கட்டுகளை வாங்கியதும் நாய்க்குத் தெரிந்திருக்குமோ?' இப்படி நினைத்து, நினைத்து நாயை எங்கே பார்த்தாலும் உதறல்தான்.

வீட்டு நாயோ, தெருநாயோ அதைப் பார்த்ததுமே மனம் நடுங்க ஆரம்பித்துவிடும். தான் செய்த சின்ன, சின்ன திருட்டுகளை நாய் கண்டு பிடித்து விடுமோ? இந்த நினைப்பில் சற்று பயத்துடன்தான் நாயையே பார்ப்பான். நாயை ஒரு முறை பார்த்ததும் அது ஒரு சிறு குரைப்பு

குரைத்தால் போதும் கதி கலங்கிவிடும். முகம் வெளிறிப் போய்விடும். திருடனை நாய் பிடிக்குமோ என்னவோ. ஆனால் பயந்தவன் என்றால் மட்டும் அதற்கு மிக மிக நன்றாக பிடிக்கும். இவன் சற்று ஓரக் கண்ணால் பார்த்து முகம் வியர்த்து நிற்கும்போது சாதாரணமாக குலைக்க ஆரம்பிக்கும். நாய் இன்னும் மிக மிக சந்தோஷத்தோடு வேக வேகமாக குரைக்க ஆரம்பிக்கும். ''நாய் இருக்கும் வீட்டைப் பார்த்தாலே போதும் நாலுகால் பாய்ச்சலில் நகர ஆரம்பிப்பான்.''

வீட்டு நாய் மட்டுமல்ல, தெரு நாய்களுக்கும் குருவைக் கண்டால் இளக்காரம்தான். என்றாவது லேட்டாகி விட்டால் நாய்கள் இருந்தாலே தயங்கித் தயங்கிதான் உள்ளே வருவான். அவை சற்று வேகமாக குரைக்க ஆரம்பித்தாலே ஓட்டம்தான். 'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதியாரின் பாடல்களை நாய்கள் நன்றாக தெரிந்து வைத்திருக்குமோ என்னவோ குருவந்தாலே ஓட்டப் பந்தயம்தான். எல்லா நாய்களும் பெரியதாக குரைத்துக் கொண்டே மிக மிக சந்தோஷத்தோடு அவன் பின்னே ஓடிக் கொண்டு இருக்கும். டூவீலரில் போனால், காலைக் கடிப்பது போல் வேக வேகமாக ஓடிவரும் தெரு நாய்கள்.

கூடுமான வரை நாய்க்கு பயந்தே ஆறு மணிக்குள் வீட்டிற்கு வந்து விடுவான் குரு.

இன்று கம்பெனியின் மேனேஜிங் டைரக்டர் விடுமுறையில் இருந்தார். ஒரு முக்கியமான காகிதத்தில் அவர் கையொப்பம் தேவை என்பதால் அதை எடுத்துக் கொண்டு அவர் வீட்டுக்கு செல்ல வாசலிலேயே வரவேற்றது ஆளுயர அல்சேஷன்.



குருவைப் பார்த்து என்ன நினைத்ததோ என்னவோ சற்று உற்றுப் பார்த்தது. தலையை வேறு சாய்த்துப் பார்க்க குருவுக்கு வியர்த்துவிட்டது. கை, கால்கள் தந்தி அடிக்க அதை லேசாக ஓரக்கண்ணால் பார்க்க, ''ஆசாமி மாட்டினான்'' என்று நினைத்ததோ என்னவோ 'லொள் லொள்' என்று பெரியதாக மூன்று முறை குரைத்தது. குருவிற்கு பயத்தில் ஓடக் கூட கால்கள் எழாமல் கண்களில் நீரோடு பயத்தோடு நிற்க, அசையாமல் நிற்பவனை எரிச்சலோடு பார்த்தது அல்சேஷன் 'பிறகு ஒரு நீண்ட கொட்டாவியை விட்டது. மனிதன் ஓடவுமில்லை நகரவுமில்லை' அது சற்று அலுப்புடன் குருவைப் பார்த்தது. கிரிக்கெட் விளையாட்டில் எத்தனை பந்து போட்டாலும் அடிக்கவும், அடிக்காது. அவுட்டும் ஆகாத பேட்ஸ் மேனை குரோதத்தோடு பார்க்கும் பவுலர் போல் குருவைப் பார்க்காமல் அலுத்து போன பார்வையாளர்கள் போல் குருவைப் பார்த்தது. இன்னும் நான்கு முறை குருவைப் பார்த்து கத்திவிட்டு குரு நகராததால் சற்று எரிச்சலோடு அமர்ந்தது.

குருவுக்கு கை கால்களே எழும்பவில்லை. நாய் படுத்துக் கொண்டவுடன் போன உயிர் திரும்பி வந்தது போல் தோன்ற ''சார்'' மெதுவாகக் குரல் கொடுக்கிறான். முன்னங்கால்களின் மேல் முகத்தை வைத்து படுத்த நிலையில் இருந்த அல்சேஷன் சற்று எரிச்சலோடு கண்களை மட்டும் திருப்பி பார்த்தது.

''சே! கேவலமான மானிடன் நீ'' என்பது போல் இருந்தது அதன் பார்வை.

நாய் தன்னை லேசாக பார்த்துவிட்டு அலட்சியமாக படுத்திருக்க,

''சார்'' என்று சத்தமாக குரல் கொடுத்தான் குரு.

அவ்வளவு தான் பகைவனைக் கண்ட - இந்திரஜித் போல் எழுந்தது அல்சேஷன். மேலே பாய்வது போல் நான்கு கால்களையும் தூக்கி குரை, குரை என்று குரைத்து ஆர்ப்பாட்டம் செய்ய, அல்சேஷன் ஆதிசேஷன் போலத் தோன்ற குரு வேகமாக ஓடுகிறான். கேட்டில் முட்டிக் கொண்டு கீழே விழுந்தான்.

இதற்குள் ''ஹு ஈஸ் தேர்?'' என்றவாறே வெளியே வந்தார் மேனேஜிங் டைரக்டர் சந்திரன்.

''கென்னி கீப் கொய்ட்'' என்று அவ்ர் அடக்க, ''ஊ.. ஊ'' என்ற சின்ன குழந்தை கத்துவது போல் கத்தி அடங்கியது அல்சேஷன்.

''இந்த பிச்சைக்காரனை ஏன் விடறீங்க?'' அல்சேஷன் கேட்பது போல் தோன்றியது குருவிற்கு.

''என்ன குரு என்ன விஷயம்? வாட் ஹேப்பண்ட்?'' என்றவாறே சற்று பதறிய சந்திரன் குருவை தூக்கி விடு கிறார். பயம் அவமானம் தோன்ற ''சார் ஒரு ஸிக்நேசர் வாங்கணும். அதுக்குதான் வந்தேன். இன்னிக்கு கொரி யர்லே அனுப்பியாகணும்.'' சொல்வதற்குள் பின்னும் வியர்த்தது.

''சாரி.. முதல்ல உள்ளே வா.. காபி, ஜூஸ் ஏதான சாப்பிடு.''

''வேண்டாம் சார்.''

''வாப்பா.''

அவர் குருவின் தோளில் கைபோட்டபடி உள்ளே அழைத்து செல்ல, நடுங்கியபடி செல்கிறான் குரு.



குருவிடமிருந்து பேப்பரை வாங்கி அதில் கையெழுத்திட்டு சூடான காபியைக் கொடுத்து ''டூயு வான்டு வாஷ்?'' முகத்தைக் கழுவிக் கொள்ள சொல்ல, ''நோ, தேங்க்யூ சார் கிளம்பறேன்.'' என்றவாறே படபடப்பு சற்று அடங்கி கிளம்புகிறான் குரு.

''சாரி.. குரு..'' என்றவர் நாயை அவிழ்த்து விடுகிறார்.

''கம்.. கென்னி. ஸோ சாரி.'' அவர் சொல்ல எருமைக் கன்னுக்குட்டி அளவில் இருந்த அந்த நாய் குருவின் அருகில் வந்து அவனுக்கு முன்னால் படுத்துக் கொண்டது. தலையை தரையில் வைத்தவாறே ம்..ம்... என்று முனகியது.

''ஸாரி கேக்குது பாருங்க'' சந்திரன் பெருமையாகக் கூற, குருவிற்கு சர்வாங்கமும் நடுங்கியது.

''கென்னி அங்கிளுக்கு ஷேக் ஹேண்ட் கொடு,'' என்று சொல்லியவாறே மந்தகாசமாக சந்திரன் புன்னகைக்க,

''வேண்டாம் சார்'' சொல்லக் கூட வாய் எழும்பாமல் குரு பயத்தோடு நிற்க, அல்சேஷன் குருவின் முன் இரண்டு காலால் அமர்ந்தவாறே ஒரு காலை குருவிடம் நீட்ட குருவிற்கு மயக்கமே வந்தது.

''ஷேக் ஹேண்ட் பண்ணுங்க, கென்னி இனிமே உங்க பிரண்ட். அவன் ரொம்ப பிடிவாதக்காரன், விடமாட்டான். ஷேக் ஹேண்ட் பண்ணுங்க, நீங்க அவனோட பிரண்ட். இனிமே அவன் ஒண்ணும் பண்ண மாட்டான்'' சந்திரன் சொல்ல,

''சார் வேண்டாம் சார்.'' குரு பாவமாகக் கெஞ்சு கிறான்.

''ஒண்ணும் ஆகாது குரு. அவன் பிரண்ட் ஆகணும்னு நினைச்சிட்டா கை பிடிச்சி ஷேகண்ட் பண்ணாதான் விடுவான். ''நான் தான் பக்கத்திலே இருக்கேன் இல்லே, செய்யுங்க.''

குரு ஆயிரம் கடவுள்களை வேண்டியவாறே நடுங்கிய வாறே கையைத் தொட்டு குலுக்கி விட்டுவிட, நெஞ்சு மட்டும் வேகவேகமாக அடித்து கொண்டது. இரத்த அழுத்தம் ஏறியது போல் தோன்றியது.

''நான் வரேன் சார்'' ஈன ஸ்வரத்தில் சொல்லிவிட்டு குரு அலுவலகத்திற்கு கிளம்பிப் போனான்.

அலுவலகத்தை அடைந்து கையெழுத்து வாங்கிய பேப்பரை கொரியரில் அனுப்பிவிட்டு கிளம்பும் வரை படபடப்பும் பயமும் குறையவில்லை. சற்று ஆசுவாசப் படுத்திக் கொண்டு அமர்ந்த போது வீட்டிலிருந்து போன் வந்தது.

''சார் அம்மாதான் போன் பண்றாங்க.'' பியூன் பயபக்தி யாக போனைத் தர,

''ஹலோ'' ஈன ஸ்வரத்தில் கேட்கிறான் குரு.

மறுமுனையில் வெடிக்கிறது போன். ''ஏங்க நான் கூப்பிட்ட உடன் ஈன ஸ்வரம் வந்துடுமா? மத்தியானம் சோறு தின்னலையா என்ன?'' அவன் மனைவி கீதா தான் எரிச்சலோடு கேட்கிறாள்.

''இல்லைம்மா.. நீயா? சாரிம்மா. என்ன விஷயம்?'' சற்று வேகமாகக் கேட்க முற்படுகிறான்.



''ஆமா ஒண்ணும் நடிக்கவேணாம். மத்தியானம் லீவு போட்டு வரேன்னு சொன்னீங்களே. மணி என்னாச்சு? நாலு மணி வரைக்கும் வீட்டு ஞாபகமே வரலையா?'' கீதா பட்டாசாக வெடிக்க,

''ஆமா என்ன விசேஷம்?'' மறந்தவனாக குரு கேட்க,

''ஓஹோ அதுவே மறந்துட்டீங்களா? உங்க பொண்ணு மினிக்கு பர்த்டே என்பது கூடத் தெரியாதா? உங்களுக்காக காத்துகிட்டு இருக்கோம். நீங்க எல்லாம் ஒரு அப்பா, சே.'' டொங் என்று போனை அடித்து வைக்க, குருவிற்கு காது கொய்ங்.. என்றது.

நாலுகால் பிராணியைப் பார்த்தால் உடனே அங்கிருந்து ஓடியாவது விடலாம். ஆனால் இந்த ரெண்டு கால் பிராணியிடம் மாட்டினால் அதோ கதி தான். நாயைப் பார்த்த பயத்தை விட மனைவியை எப்படி பார்க்கப் போகிறோம் என்ற உணர்வு தோன்ற பின்னும் பயம் வாட்டியது.

அலுவலகத்தில் பர்மிஷன் போட்டுவிட்டு கிளம்பி விடுகிறான் குரு. வீட்டை அடைந்ததுமே வாயிலிலேயே குழந்தைகள், மனைவி உம்மென்று நின்று கொண்டிருப்பது தெரிந்தது. ஆர்டர் கொடுத்த கேக்கையும், சாக்லெட்டு களையும் வாங்கிய பின் தான் வீட்டிற்கு செல்கிறான் குரு.''

''ஐ.. அப்பா'' மகள் மினியும் பெரியவன் ரிஷியும் குதிக்க, கடுகடுத்தாள் மனைவி.

''ஆமா பொல்லாத அப்பா...'' நொடித்தவாறே உள்ளே போகிறாள் கீதா.

''என்னடா உன் பிரண்ட்ஸ் யாரையும் கூப்பிடலையா?'' குரு கேட்க,

''என்னப்பா நீங்க தான் நாலு மணி வரைக்கும் வரலை இல்லே. அதுனால பர்த்டே பார்ட்டி கேன்ஸல்ன்னு எல்லோர்கிட்டேயும் அம்மா சொல்லிட்டாங்க.''

''சரி வாங்க நம்ப கேக்கை வெட்டுவோம்.''.

''போங்கப்பா வெறும் கேக்கு தானா எனக்கு? நீங்க எனக்கு ஒண்ணும் பிரசன்ட் பண்ணலியே.'' மினி கெஞ்ச,

''என்ன வேணும் சொல்லு?''

''வாங்கித் தருவீங்களா? ப்ராமிஸ்.''

''பிராமிஸ். சொல்லு. என்ன வேணும்?''

''நாய்...'' கொஞ்சுகிறாள் மினி.

2



''ஏண்டி நாயே.. கேலி செய்யறியா?'' குரு உச்சஸ் தாயியில் கத்துகிறான். மினி பயந்து போய் அப்பாவையே பார்க்கிறாள். பெரியதாக அழ ஆரம்பிக்கிறாள்.

''அம்மா அப்பா நாய் மாதிரி கத்தராறு,'' ரிஷி கத்த,

''என்னது என்னையே நாயின்னா சொல்லறே?'' ஆத்திரத்துடன் ஒரு ஸ்கேலை எடுத்துக் கொண்டு பின்னாலேயே அடிக்க துரத்துகிறான்.



''என்னாச்சு உங்களுக்கு? ஏன் இப்படி நாய் மாதிரி ஓடி வறீங்க?'' சற்று உயர்ந்த ஸ்தாயியில் கீதா கத்த,

''நீ தாண்டி நாய்... வள் வள்ளுன்னு விழறே?'' எரிச்சலுடன் கத்துகிறான் குரு.

''என்ன சொன்னீங்க? என்னையா நாய்னு சொன்னீங்க?'' கண்களை உருட்டி கணவனையே முறைக்க,

ஆத்திரத்துடனும் எரிச்சலுடனும் வெளியே வருகிறான் குரு. இன்று காலையில் இருந்து எதுவுமே சரியாக நடக்கவில்லை. யார் முகத்தில் விழித்திருப்போம்? யோசித்துப் பார்க்கிறான். காலையில் கீதா தான் அவனை எழுப்பினாள். 'அந்த நாய் முகத்துலே முழிச்சதுலேந்தே இன்னிக்கு முழுவதுமே நாய்பட்ட பாடுதான்.' நினைத்துக் கொள்கிறான்.

நினைத்தவனாய் குரு வேகம் குறைந்து நடக்க ஆரம்பித்தான். இரண்டடி நடந்திருக்க மாட்டான்.

''எந்த நாய் உங்களை உள்ளே வர வேண்டாம்னு சொல்லிச்சு. காண்பிங்க. ஒரு கை பார்ப்போம்.'' பக்கத்து வீட்டுக்காரி கணவனிடம் உச்ச ஸ்தாயியில் கொஞ்சிக் கொண்டு இருந்தாள்.

''ஏண்டா நாயே போக மாட்டேன்னா. மாட்டேன்னு சொல்ல வேண்டியது தானே.''

இது பக்கத்து வீட்டு மெக்கானிக் அவனின் தம்பியிடம் பேசிக் கொண்டு இருந்தான்.

இன்னும் சில அடிகள் நடந்திருப்பான். மூன்றாவது வீட்டில் ஒரு கிழவர் கத்திக் கொண்டிருந்தார்.

''சொத்து வேணும்னா பிரிச்சு கொடுத்துடறேன். அப்புறம் எந்த நாயையும் கிட்டே சேக்க மாட்டேன். எந்த நாயும் வீட்டுக்குள்ளே வரக் கூடாது.''

குருவிற்கு அலுத்தேவிட்டது. 'சே! எந்த வார்த்தையே கேட்கக் கூடாது என்று வீட்டை விட்டு வந்தோமோ. அதே வார்த்தையை அல்லவா திருப்பி திருப்பி கேட்டுக் கொண்டு இருக்கிறோம்.' நினைத்தபடி மெதுவாக நகர்ந்த போது ஒரு சிறுவன் குருவின் மேல் முட்டி மோதி விழுகிறான்.

''ஸாரி ஸார்'' என்றவன் ''நாயே ஏண்டா என்னைத் தள்ளி விட்டே'' என்று இன்னொரு சிறுவனைப் பார்த்து கத்துகிறான்.

இன்னும் பத்தடிகள் நடந்திருப்பான். ''கேட்டுக்கடி நாயே உங்கப்பன் வீட்டுக்கு போனா திரும்ப நீ இங்கே வரக்கூடாது.'' இன்னொரு வீட்டில் கணவன் மனைவி சண்டை போலும். குருவிற்கு ஒன்று மட்டும் நிச்சயமாகப் புரிந்தது. தமிழ் அகராதியிலேயே முதன்மையாய் இடம் பெறும் வார்த்தை இந்த வார்த்தை தான் போலும். வீட்டை விட்டு வந்த இந்த அரைமணியில் எத்தனை பேர் ''நாய் நாய்'' என்று இந்த வார்த்தையை உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். தமிழ் அகராதியில் எந்த வார்த்தையை எடுத்தாலும் எடுக்கலாம். இந்த வார்த்தையை எடுக்கவே முடியாது என்று குருவிற்குத் தோன்றியது.

காலையிலும் சரியாக சாப்பிடாதது பின் மேனேஜிங் டைரக்டர் வீட்டிற்கு சென்று நாயோடு அல்லாடிவிட்டு வந்தது. இப்போது வீட்டுக்கு வந்து சண்டை போட்டது. எல்லாமே சேர்ந்து தலை சுற்றலை ஏற்படுத்த, மெதுவாக



அருகில் இருந்த கடைக்குச் சென்று ஒரு பாக்கெட் குளுகோஸ் பிஸ்கட்டுகளை வாங்கி வந்து, அருகில் இருந்த பார்க்கில் போய் அமர்ந்து கொண்டான். பிஸ்கட் பாக்கெட்டை பிரித்து இரண்டை எடுத்து வாயில் போட்டு கடிக்க, பக்கத்தில் லொள், லொள் என்று ஒரு நாய் குரைக்க விதிர்த்துப் போகிறான். கறுப்பும், வெள்ளையும் கலந்த ஒல்லிநாய், லொள், லொள் என்று குரைத்துக் கொண்டிருந்தது. நாக்கை வெளியே நீட்டி எச்சில் ஒழுகிக் கொண்டிருந்தது. பிஸ்கட்டையும் அவனுடைய கையையும் பார்த்து வாயில் எச்சில் ஒழுக வேகமாக குரைக்கத் தொடங்கியது. சற்று பாய்ந்து பிஸ்கட்டை கடிப்பது போல் வர, 'சூ' என்று துரத்த வாயெடுத்தவன் சற்று நடுங்கிய படியெழுந்திருக்க, நாய் மறுபடியும் குலைக்க சட்டென்று பிஸ்கட் பாக்கெட்டுடன் ஓட நாயும் பின்னாலேயே துரத்த, பிஸ்கட் பாக்கெட்டை அதன் பக்கம் விட்டெறிந்து விட்டு பின்னும் வேகமாக ஓடுகிறான் குரு.

எரிச்சலும், ஆத்திரமும் வந்தது. 'இந்த சனியன் என்னை விடாதா?'' மனம் ஏங்கியது. பிஸ்கட்டைப் பார்த்ததும், நாய் அவனை விட்டுவிட்டு பிஸ்கட்டை கவ்விக் கொண்டு போனது. ''அப்பாடா'' பெருமூச்சு விட்டான் குரு. கிட்டதட்ட வீட்டின் அருகே வந்தாயிற்று. ஏனோ வீட்டிற்குப் போக மனமில்லை. வீட்டின் அருகில் இருக்கும் பார்க்கில் அமருகிறான். புல்வெளியில் மரத்தின் கீழே, சற்று புதராக வளர்ந்த செடிகளின் நடுவே அமர்ந்திருக்கிறான். மனம் முழுவதும் ஆற்றாமை. தான் எத்தனை கஷ்டப்பட்டு அலுவலகத்தில் இருந்து வந்தோம். தன் மனைவிக்கு இதெல்லாம் ஏன் தெரியவில்லை.

ஒரு முறை அதைப்பற்றி நண்பனிடம் சொன்னபோது,

''அடபோடா நீ வேற. முந்தாநாள் மானேஜர் கிட்டே ''லோள்'' பட்டம் வாங்கிட்டு வீட்டுக்குப் போறேன். பொண்டாட்டி அல்சேஷனா.. நிக்கறா! முதல்ல எல்லாம் வாழ்க்கையே வெறுத்து போகும். என்னடா புருஷன் வெளியிலே போயிட்டு ஆயிரம் கஷ்டங்களுக்கு நடுவிலே சம்பாரிச்சிட்டுவரான். அவனை நல்லபடியா வச்சுக் கணும்னு பொண்டாட்டிக்கு தோணாதான்னு தோணும். நானும் எத்தனையோ முயற்சி பண்ணி பார்த்தேன்.''

''மாறிட்டாங்களா?'' குரு ஆவலாக கேட்க,

''சே!.. அது எப்படி அத்தனை சீக்கிரம் மாறும்?''

''அப்புறம் என்ன தான் செய்தே?''

''ஒண்ணுமே செய்யலை. இது தலைவிதின்னு பொறுத்துக்க ஆரம்பிச்சிட்டேன்.''

''ஐயையோ. அப்புறம்?''

''என்னடா அப்புறம்? இப்பவெல்லாம் எங்க வீட்டு அம்மாவோட திட்டுக்களை ரசிக்க ஆரம்பிச்சிட்டேன். உண்மையைச் சொல்லப் போனா அவ ஒரு நாள் திட்டலேன்னா எனக்கு சோறே இறங்காது.''

குரு அவனைப் பாவமாக பார்த்து பெருமூச்சு விட்டான். 'எல்லாமே இயற்கை நியதிதான். அவன் சொல்வது போல் இதற்கு வருத்தப்படுவது முட்டாள் தனம். முடிந்தால் அவன் பேச்சை ரசிக்க முற்படலாம். சட்டென்று நாய், நாய் என்று இருவரும் மாறி மாறி திட்டிக் கொண்டது ஞாபகத்திற்கு வர, சிரிப்பு வந்தது. மன இறுக்கம் சற்று தளர்ந்த பின் கிளம்ப யத்தனித்த போது,



''என்னடா இங்கேயா இருக்கே? உங்க வீட்டுக்கு தான் போயிட்டு இருக்கேன்'' என்ற அவன் நண்பன் சங்கர் கையில் வைத்திருந்த அழகான மஞ்சள் நிற நாய்க் குட்டியைக் காண்பிக்கிறான். சற்று பட்டையான மூக்கு, கோலி குண்டு கண்கள் இளம் பழுப்பு நிறத்தில் பம் பம் மென்று இருந்தது. ''நாய்க் குட்டி எப்படி இருக்கு பாத்தியா? வச்சிக்க.'' நண்பன் நீட்ட கையைச் சுருக்கிக் கொண்டான் குரு.

''என்னடா இதைப் பார்த்துக் கூட கையை இழுத்துக்கறே? எத்தனை அழகா இருக்கு இந்த நாய்க்குட்டி? இது ஜிம்மி. எப்படி இருக்கு? பிடி. கொஞ்சநாள் இது கூட பழகிப் பாரு. அப்புறம் நாயைப் பத்தி தான் பேசிகிட்டே இருப்பே.''

''நானுமா?'' என்கிறான் குரு.

''என்னது? இதைபிடி.'' அவன் சொல்ல, சொல்ல...

''யப்பா எனக்கு வேண்டாம் ஆளைவிடு.''

''ஏண்டா?''

என்னவென்று சொல்வது? சிறு வயதில் அம்மாவுடன் பாட்டி ஊருக்குப் போனது நேற்றுதான் நடந்தது போல் இருந்தது. பாட்டி வீட்டில் ஒரு நாட்டு நாயும், அதன் ஒரு குட்டியும் மட்டும் இருந்தது. மற்ற குட்டி எல்லாவற்றையும் யார் யாரோ தூக்கிப் போய்விட்டார்களாம். வெள்ளையில் அங்கங்கே மாக் கலர் திட்டு திட்டாக, பார்ப்பதற்கே ரொம்ப அழகாக இருந்தது. அந்த நாய்க்குட்டி. அந்த மூன்று மாத நாய்க் குட்டியைப் பார்த்ததும் ரொம்ப ரொம்ப ஆசைப் பட்டான் குரு.

ஒருவாறு பாட்டியுடன் பேசி, பேசி தைரியத்தை வர வழைத்துக் கொண்டான் குரு. மெதுவாக நாய்க்குட்டியை

தடவிக் கொடுக்கிறான். அவ்வளவுதான் பயம் போய், ஒருவாரம் முழுவதும் நாயைத் தூக்கி வைத்துக் கொள்ள ஆரம்பித்தபோது தான் ஆரம்பித்தது. நாய்க்கு பல் துறுதுறுவென்று இருந்ததோ என்னவோ எல்லோரையும் வெடுக் வெடுக்கென்று கடிக்க ஆரம்பித்தது. ஒரு முறை பிஸ்கட் கொடுத்தபோது குருவின் கையையும் சேர்த்து கடித்துவிட அன்றையிலிருந்து நாயை விட்டு வெகு தூரமே ஓடிப்போய் விட்டான் குரு.

''அது குழந்தைடா. அதுக்குப் பல்லு ஊறும். அதனால தான் கடிக்கும்.'' பாட்டி சொன்னதில் பயமெடுத்தது.

இந்த குட்டியை பார்த்ததுமே சற்று பயத்தோடு தான் பார்த்தான் குரு.

''என்னடா பயப்படறே சின்ன குட்டி தாண்டா.''

சொல்லும்போதே நண்பனின் கையை வெடுக்கென்று கடிக்க,

''ஸ்.. ஏய் போக்கிரி'' என்று நாயின் வாயில் விரலால் சுண்டி அடிக்க,

வீல்... வீல்.. என்று கத்தியது. குரு அரண்டு போகிறான்.

''என்னடா?''

''ஒண்ணும் இல்லேடா. லேசாக கடிக்குது. பல்லு அதுக்கு ஊறும். சின்ன குழந்தைகள் எல்லாம் கடிக்கும் இல்லே. அது மாதிரி தான்.'' என்றவன் கையைத் துடைத்துக் கொண் டான்.

''அ..ப்பா.. ஆளைவிடு..'' என்றவாறு குரு ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு கிளம்பி விடுகிறான். ''கோபம்



எல்லாம் வடிந்து போய் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்ற உணர்வு வந்துவிட எழுந்து நடக்கிறான்.

''டேய்.. நில்லுடா. உன் பிள்ளைகள் உயிரெடுக் கிறாங்கன்னு கேட்டியே. இந்த நாய்க் குட்டியை எடுத்துக்க. ஒரு ஆயிரம் ரூபாய் ரெடி பண்ணிடு.''

''நாய் பேய் எதுவும் எனக்கு வேண்டாம். ஆமா அது என்ன தெரு நாய்க்கு இத்தனை ரூபாய் கேக்கறே? ஓசி யிலே தானே சுருட்டிகிட்டு வந்தே.'' குரு சற்று கடுப்புடன் கேட்க,

''ஏய் உளராதே. நல்ல நாட்டு நாய்டா. அது எல்லாம் கூட ரொம்ப காஸ்டிலி.''

''நீ ரீல் எல்லாம் சுத்தாதே. எனக்கு கட்டாயம் உன் நாய் வேண்டாம்.''

குரு சொல்லும்போது குட்டி ஒரு தலையை சாய்த்து நாவல் பழ கண்களால் குருவையே பார்த்தது.

''டேய் இது கிராஸ்டாக். வெளிநாட்டு நாய்க்கும் நம்ம நாய்க்கும் பொறந்தது. உனக்காகத்தான் சொல்லி வாங்கிட்டு வந்தேன். என்னடா இப்படி பண்றே?''

''யாரைக் கேட்டு வாங்கினே. நாயே.'' தன்னையும் அறியாமல் வார்த்தைகள் வந்துவிட, ஒரு நிமிடம் குருவை வெறித்த சங்கர்,

''சே.. நீ நன்றி கெட்ட நாய். உன்னிடம் பிரண்ட்ஷிப் வச்சுக்கறதே தப்பு.'' சொல்லிவிட்டு அவன் சென்று விட, எரிச்சலோடு மெதுவாக வீட்டை நோக்கி செல்கிறான் குரு. 'பாவம் பெண் அவளை அடித்து இருக்க வேண்டாம்.

ஆசையாக ஏதோ கேட்டாள் லேசாக மறுத்து சமாதானப் படுத்தி இருக்கலாம். தவறு செய்துவிட்டேன். குழந்தையை அடித்து இருக்க வேண்டாம் பாவம். குழந்தைகளும், மனைவியும் அத்தனை ஆவலாக அவன் வரவை எதிர்பார்த்து காத்து நின்றனரே. தான் நேரம் கழித்து போவது மட்டுமல்லாமல் அவர்களையும் திட்டி அடித்து... சே!..' தன்னையே நொந்து கொண்ட குரு.

மெதுவாக வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டிய போது வந்து கதவைத் திறக்கிறாள் மனைவி.

''ஐ.. அப்பா... இங்கே பாரு.. நாய்.'' என்று பெண் கூறக் கூற அதிர்ந்து போகிறான் குரு.

நண்பனிடம் பார்த்த அதே நாய் தான்.

3



''ஏய்.. இது.. எப்படி?'' குரு கேட்பதற்குள், பெண் முந்திக் கொண்டாள்.

''போப்பா... சங்கர் அங்கிள் தான் கொண்டாந்து கொடுத்தாங்க. நீங்க தான் சொல்லி அனுப்பிச்சீங் களாம். அதுக்காகத்தான் தேடிப்பிடிச்சு வாங்கிட்டு வந் தாராம்.''

''ஏய் மினி..'' ஆரம்பித்தவன், சட்டென்று கோபத்தைக் குறைத்து,



''மினி கண்ணா. அப்பா பேச்சைக் கேளு. இந்த நாய் நமக்கு வேண்டாம். வேற நல்ல நாய் வாங்கிப்போம்.'' ஆசையாகக் கூற,

''ம்.. மாட்டேன். அப்பா மினிக்கு வேணும்னா வேற நாய் வாங்கித் தாங்க. எனக்கு இந்த நாய் தான் வேணும். பெரியவன் ரிஷி கத்த.

''ஏங்க ஒரு நல்ல நாளும் அதுவுமா குழந்தைகளை அழ வைப்பீங்களா? ஊரு உலகத்துலே அப்பாங்கறவங்க இப்படியா இருக்காங்க? கோபிச்சுகிட்டு திமிரா போனாலும் நாயை வாங்கி அனுப்பிச்சிங்களே கடவுள் உங்களுக்கு கொஞ்சம் நல்ல புத்தியை கொடுத்தாரேன்னு நினைச்சுகிட்டு இருந்தேன். மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறிடுச்சா?'' மனைவி எரிச்சலுடன் கத்த,

''த.. பாரும்மா நான் சொல்றதைக் கேளு, நான் நாய் வாங்கித்தரேன் ஆனா இது வேண்டாம்.''

''ஏன்.. நீங்க ஓகே. செய்த நாய் தானே இங்க வந்திருக்கு. இப்ப வேண்டாம்னா என்ன அர்த்தம்? நீங்க சொன்னதா தான் உங்க பிரண்ட் வந்து இதை கொடுத்தார்.''

''நான் இந்த நாயை ஓ.கே செய்தேனா'' அதன் முகத் துக்கு சற்று தள்ளி கையை காண்பிக்கிறான். ''அது மூஞ்சியைப் பாரு. அசல் கன்டிரிடாக்.'' குரு சொல்ல சொல்ல குருவின் முகத்தையே தன் நாவல் பழக் கண்களால் துறு துறுவென்று பார்த்தது வெடுக்கென்று குருவின் கையைக் கடித்தது.

''ஆ...'' கையை உதறுகிறான். ''சனியன், சனியன் இது முதல்ல சங்கர் அங்கிள் வீட்டிலே கொடுத்துட்டுவா'' கடித்த

இடத்தில் இரத்தம் வந்து விட, ''பாவி.. சொன்னேன் இல்லே. இப்ப பாரு வயத்தை சுத்தி இன்ஜக்ஷன் போட்டுக்கணும்.''

''எத்தனைன்னு தெரியலையே?''

''பதினாறு'' என்று பொறுப்பாக பதில் சொல்கிறான் ரிஷி.

''சும்மா இருடா. நீ வேற.'' பையனை அடக்கிய மனைவி, ''த... பாருங்க. மூனு மாச குட்டி கடிச்சா ஒண்ணும் இல்லே. ஆன்டிபயாடிக் போட்டுக்கணும்னு அவசியம் இல்லை. ஆறு மாசத்துக்கு மேலே போனாதான் அதெல்லாம். ஒண்ணும் இல்லாததுக்கெல்லாம் பயப்படறீங்க. ஆர்ப்பாட்டம் பண்றீங்க?''

கையில் வந்த ரத்தத்திற்கு ஈரத்துணியால் கட்டு போட்டுக் கொண்டான் குரு. எல்லோர் மேலும் எரிச்சல் எரிச்சலாக வந்தது. 'கணவனுக்கு அடிபட்டால் பெண்டாட்டி துடிக்க வேண்டாமா? எத்தனைஅலட்சியமாகப் பேசுகிறாள்? எல்லாம் தன் நேரம்.'

பெண்ணும், பிள்ளையும் நாய்க் குட்டியை மடியிலேயே வைத்திருந்தனர்.

''போய் டாக்டரைப் பார்த்துட்டு வரேன். நான் வரும்போது இந்த நாய்க்குட்டி வீட்டிலே இருக்கக் கூடாது. இருந்தது. அத்தோட அப்பா வீட்டுக்கு வரமாட்டேன்.'' பிள்ளைகளிடம் மிரட்டிவிட்டு சென்று விடுகிறான் குரு. எரிச்சலும், ஆவேசமும் வந்தது. ஆத்திரம் வந்தது. 'நாயைக் கொண்டு வராதே என்றால் வேண்டுமென்றே நாயை இங்கே கொண்டு வந்து விட்டானே வெறி நாய், சொறி நாய்.' நண்பனை எண்ணி நாய் எதிரியைப் பார்த்து பல்லைக் கடிப்பது போல் பல்லைக் கடித்தான் குரு.



வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் கிளினிக்கில் நுழைகிறான் என்றுமே ஈ ஓட்டிக் கொண்டிருக்கும் அந்த இடத்தில் திருவிழாக் கோலம். எள்போட்டால் எள் விழாது அப்பேற்பட்ட கூட்டம். என்னாயிற்று இத்தனை ஜனம்?

ஒரு வேளை சுனாமியால் சீசனே மாறுகிறது என்கிறார்களே. அப்படி மாறியதில் வைரஸ் பீவர் வந்துவிட்டதா என்ன? இல்லை என்றால் இருந்தாற்போல் இருந்து பகைவன் தாக்குவதைப் போல் தாக்கும் மெட்ராஸ் ஐ ஆ. இல்லை பறவைக்காய்ச்சல் என்கிறார்களே அது மனிதனுக்கு வந்துவிட்டதா? எதுவென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான் குரு. என்னவாக இருக்கும்?

ஒருவரிடம் மெதுவாக பேச்சு கொடுக்கிறான். அவர் சற்று கிலியோடு அமர்ந்திருப்பது தெரிந்தது.

''என்னங்க பண்ணுது உடம்புக்கு என்னாச்சு?'' மனிதர் ஏற்கனவே ஒற்றை நாடி. கிள்ளி எடுத்தாலும் எலும்பை மட்டும் தான் எடுக்கலாம். மூக்கு வேறு முழு நீளத்திற்கு தனியாக நின்றது.

''என் உடம்புக்கு என்ன கேடு? என்ன கேடுன்னேன்? பி.பி. கிடையாது. சுகர் கிடையாது. உப்பு கிடையாது. பர்பெக்ட்.'' ஆள்காட்டி விரலையும் கட்டை விரலையும் சேர்த்து இப்படி இப்படி என்று காட்ட,

''பின்னே டாக்டர் வீட்டுக்கு எதுக்கு வந்தீங்க?'' குரு ஆச்சரியமாய்க் கேட்கிறான்.

வந்த மனிதருக்கு மூக்கு மேல் கோபம் வந்துவிட்டது. ''ம்... பொழுது போகலே. அதான் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருக்கலாம்னு வந்தேன்.'' அவர் சொல்ல, இதற்கு

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் குரு மௌனம் சாதிக்க,

"நீங்க வேற சார் வயித்தெரிச்சலைக் கிளப்பறீங்க. பாத்தீங்களா?" சுண்டு விரலை முகத்துக்கு நேரே கண்ணை குத்துவது போல் நீட்டுகிறார். கை சற்று விடைத்து சிவந்து இருந்தது.

"ஓணான் கடிச்சிருச்சு. சார் ஓணான். ஓணான் கடிச்சுட்டு போனா ஒரு மணி நேரத்துலே சாவுன்னுவாங்களே. வந்தே முக்கால் அவர் ஆயிடுச்சு." அவர் அலுத்துக் கொள்ள, பயத்தின் ரேகை முகத்தில் படர்ந்திருப்பதையும் பார்த்தான். குரு. அடுத்த பதினைந்து நிமிடமும் ஓணான் கடித்த ஆளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒருவர் கோழி முட்டை சாப்பிட்டதிலிருந்து ஒரே வயிற்று வலி என்று புலம்பியது காதில் விழுந்தது. இன்னொருவர் பூனை கடித்துவிட்டதாக சொல்ல, திக் பிரமை அடைந்து உட்காருகிறான் குரு.

என்ன இது? இது என்ன கடிவாரமா என்ன? ஆளாளுக்கு ஏதோ சொல்கிறார்கள். இன்னொருவர் எலி கடித்ததாக சொல்ல, சரிதான் இத்தனை கடிக்கும் மருந்து போட்டால் தனக்கு மிச்சம் இருக்குமா என்ன? யோசிக்கிறான். சுற்றும் முற்றும் பார்த்தவாறே அமர்ந்திருந்தவனுக்கு திடீர் என்று ஓணான் கடித்தவர் ஓணான் போல காட்சி அளிப்பது தெரிந்தது. என்னது? கம்பிளீட்டாக ஓணான் போல மாறிட்டாரே. இல்லேல்லே அவர் உருவமே ஓணான் போலத்தான் இருக்கு.

மனதை சமாதானப்படுத்திக் கொண்டு நேரம் என்ன என்பதற்காக கையைத் திருப்பிப் பார்க்கிறான். வாட்சை



வீட்டிலே விட்டுவிட்டு வந்தது தெரிந்தது. "சே" என்று நொந்து கொண்டவன் மெதுவாக பக்கத்து வீட் மனிதரிடம் நேரம் என்ன என்று கேட்கிறான். திடீரென்று தொண்டை கட்டிக் கொண்டு வார்த்தைகள் வராமல் "சார் டைம் என்ன?" குரல் ஒருவித கரடுமுரடாக கார்ட்டூனில் வரும் நாயைப் போல ஒலிக்க, உடல் தூக்கி வாரிப்போட்டது.

"ஐயையோ நாயாகவே மாறுகிறேனா என்ன?"

ஒரு நிமிடம் மனம் அதிர்ந்து போனது. சனியன் நாய் நாய்னு உயிரை விடும் குழந்தைகளை நாய், சனியன் என்று திட்டுகிறான். அவர்களோடு ஒத்துப் போய் அவர்களுக்காக பரிந்து பேசிய மனைவியை செந்நாய், வெறிநாய், சொறிநாய் என்று ஆத்திரம் தீரத் திட்டித் தீர்க்கிறான்.

ஒரு வழியாக எல்லோரும் சென்று டாக்டரைப் பார்த்தபோது, டாக்டர் பயப்பட வேண்டாமென்று சொன்ன போது, "கட்டிப்போட்டு அப்சர்வ் பண்ண வேண்டாமா" என்று நர்ஸ் கேட்க,

"சே... சே.. சின்ன குட்டின்னா ஒண்ணும் இல்லே. ஒரு டெடனஸ் போட்டுக்கங்க. ஆறு மாசத்துக்கு மேலானா ஆன்டி ரேபிஸ் போட்டுதான் ஆகணும். அதனால பயப் படாதீங்க. கடிபட்ட இடத்தை சுத்தம் செய்து மருந்தை வைத்து, கட்டுப்போட்டு டெடனஸ் இன்ஜக்ஷன் போட்டு விட்டு, வெளியே வந்தபோது மணி ஏறக்குறைய பத்தை தொட்டது.

எரிச்சலோடும், ஆத்திரத்தோடும் வீட்டிற்கு வருகிறான். காலிங் பெல் அடித்தபோது, யாருமே கொஞ்சம் நேரத்திற்கு வந்து கதவைத் திறக்கவில்லை. வெகு நேரம் அடித்த பின்

மனைவி பாதி தூங்கிய மூஞ்சியும் கண்ணுமாக வந்து கதவைத் திறக்கிறாள். கணவனைப் பார்த்ததும் முகத்தை கடுகடுத்தவாறே உள்ளே போகிறாள். பையனும் பெண்ணும் அறையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். நல்ல வேளை நாய் இருக்கிறதா என்று அருகில் போய் பார்த்து உறுதி செய்து கொண்டான். ''நாய் இல்லை'' 'பரவாயில்லை தன் வார்த்தைக்கும் மதிப்பு இருக்கிறது.'

அடுத்த நாள் எழுந்ததிலிருந்து பிள்ளைகளும் சரி, மனைவியும் சரி முகம் கொடுத்துப் பேசவில்லை. எதிரி நாட்டு ஒற்றனைப் பார்ப்பதைப் போல் பிள்ளைகள் அவனைப் பார்த்தனர். ''மனைவியோ தீண்டத்தகாத ஜந்துவைப் பார்ப்பதைப் போல பார்த்து முகத்தை திருப்பிக் கொண்டு போகிறாள்.

காலை காபி, டிபன், டிபன் காரியரில் சாப்பாடு எல்லாமே சாப்பாட்டு மேசையில் வந்து அமர்ந்தது. அருகே இருந்து சண்டை போட்டுக் கொண்டாவது பரிமாறும் மனைவி, இன்று முகத்தைக் கூட காட்டவில்லை. ஒரு நிமிடம் ஆத்திரம் எழுந்தாலும், அடுத்த நிமிடம் மனதை கல்லாக்கி கொண்டு சாப்பிட்டு விட்டு எழுந்தான்.

அடுத்த மூன்று நாட்களும் இதே கதை தான். மனைவி கீதா கணவன் முன் வரவே அறவே தவிர்த்துவிட, பிள்ளைகள் அப்பாவின் முன் தலை காட்டவே இல்லை. முதலில் குருவிற்கும் வீம்பு இருந்தாலும் நாட்கள் செல்ல செல்ல பிள்ளைகள் பேசாதா என்ற ஏக்கமே வந்துவிட்டது. மனைவி முன் வரமாட்டாளா? பழைய படி எரிந்தாவது விழ மாட்டாளா என்ற ஏக்கமே தோன்ற ஆரம்பித்தது. முதலில்



அலட்சியப் படுத்தினாலும், அடுத்த சில நாட்களில் பெரிதான ஏக்கம்தான்.

சற்று முன்பே வந்து குழந்தைகளிடம் பேச முயற்சிக் கிறான். பிள்ளைகள் பின்னும் ஒதுங்கிப் போயின. மனைவியிடம் வலியப் போய் பேசுகிறான். மனைவியும் முகத்தை திருப்பிக் கொண்டு போகிறாள்.

''கீதா என்னம்மா இது. சண்டைன்னா ஒரு நாள் இரண்டு நாள் இருக்கும். இப்படியா? ப்ளீஸ் சமாதானம்.''

''என்ன சமாதானம் வேண்டி கிடக்குது. பிள்ளைங்க ஆசையா கேட்டா உங்களால வாங்கித் தரமுடியாதா. ஒவ்வொரு வீட்டிலேயும் பாருங்க எப்படி எல்லாம் இருக்காங்க? ஆனா நீங்க? குழந்தைங்க என்ன மோட்டார் சைக்கிள் கேட்டாங்களா, செல் கேட்டாங்களா? இல்லே ஏதான காஸ்டிலி ஐட்டம் கேட்டாங்களா? எல்லார் வீட்டிலே யும் எத்தனையோ பெட்ஸ் வளர்க்கறாங்க. அதுங்க நாயைத்தானே கேட்டது. அது வாங்கித் தரவா இத்தனை யோசனை? நீங்க எல்லாம் ஒரு மனுஷன்? உங்களுக்கு ஏன் குழந்தையும் பொண்டாட்டியும்?''

''என்னம்மா எனக்குதான் நாய்னா பயம் தெரியாதா? புரியாத மாதிரி பேசறியேம்மா.''

''ஏங்க.. பயம்.. பயம்னா எப்படி அந்த பயம் போகும்? அதை வளத்துட்டா பயம் போயிடுது. என்ன பயம் உங்களுக்கு? அது உங்களை என்ன செய்திடும்? நான் தான் இருக்கேன் இல்லே.''

'நீ இல்லாமே எங்கே? நீ இருப்பே ஆனா நான் இருப்பேனான்னு தெரியாது.' முணுமுணுக்கிறான் குரு.

''என்னது?'' கீதா கேட்க,

''ஒண்ணுமில்லேம்மா.'' என்று முனகுகிறான்.

''த.. பாருங்க. அந்த நாய் வேண்டாம். கன்டிரின்னு சொன்னீங்க. ஓ.கே. நாமளும் நல்ல நாய்க் குட்டியா வாங்கலாம்னுதான் அதை கொடுத்துட்டேன். இத பாருங்க நாங்க உங்ககிட்டே சகஜமா நடந்துக்கணும்னா நீங்க நல்ல நாய்க்குட்டியா வாங்கிட்டு வாங்க.''

அவள் பேசப் பேச அவன் தயங்கித் தயங்கி நிற்க, ''ஏன் தயங்கறீங்க? ஓ.கே நீங்க வாங்க வேண்டாம். வீட்டை விட்டு போவேன் அப்படி இப்படின்னு மிரட்டாம இருங்க. எங்க லேடீஸ் கிளப் செகரட்டரி கிட்டேர்ந்து நான் நாய் வாங்கிட்டு வரேன்.''

மறுபடியும் குரு மலங்க விழித்தவாறு பேசாமல் இருக்க, ''ஓ.கே. அப்ப நானே வாங்கிட்டு வந்துடறேன். ஒரு மூவாயிரம் ரூபாயை எடுங்க.''

''என்னது மூவாயிரம் ரூபாயா?''

''ஆமா வெளிநாட்டு குட்டி எல்லாம் அப்படி சீப்பா கிடைக்குமா என்ன? மூவாயிரத்துக்கே ஒத்துப்பாங் களான்னு தெரியாது.''

''என்ன நாய்க்குப் போய் இத்தனை விலை சொல்றே? ஒரு நூறு, இருநூறு ரூபாய்ல குட்டி கிடைக்காதா?''

''நீங்க சொல்ற விலையிலே கழுதைகுட்டி கூட வாங்க முடியாது.'' கீதா ஆவேசமாகக் கத்துகிறாள்.

''சில வெரைடீஸ் இருக்கு. குட்டியே இருபது, முப்ப தாயிரம் ரூபா.''



'உன்னை குடுத்தா கூட எவனும் அந்த விலை குடுக்க மாட்டான் போலருக்கு.' என்று மனதிற்குள் முனகுகிறான் குரு.

''சரிம்மா நானே ஒரு வெளிநாட்டு நாயா வாங்கித் தரேன் நீ வாங்காதே.'' என்றவன் அலுவலகம் புறப்பட்டு போகிறான்.

அலுவலகத்தில் இவன் வீட்டிற்கு வந்து இவனைக் கடித்த நாயை மடியில் வைத்தபடி ஏலம் போடுகிறான் நண்பன்.

''எத்தனை மாத குட்டிப்பா?'' யாரோ ஒருவர் கேட்க,

''ஆறு மாதம் ஆகி ஐந்து நாள்'' என்று நண்பன் சொல்ல கதி கலங்கிப் போகிறான் குரு.

## 4



'அடப்பாவி வச்சானே வேலை. ஒரு வேளை வேண்டு மென்றே சொல்கிறானோ' நெஞ்சத்தில் சந்தேகம் அரிக்க, வேறுவிதமாக அவனிடமிருந்து பதில் வாங்க முயற்சிக் கிறான்.

''எந்த குட்டியும் மூணு மாசத்துக்கு மேலே போனா வளர்க்கறது கஷ்டம்.'' குரு நண்பனிடம் பேசுவது போல் சற்று சத்தமாகக் கூற, நண்பன் உச்ச ஸ்தாயியில் கத்து கிறான்.

''இத பாருங்க. இது ஆறுமாசம் ஆகி அஞ்சு நாள் குட்டி. கரெக்டா சொல்லணும்னா அஞ்சரை நாள் ஆயிடுச்சு. இதை நான் எப்படி டிரெய்ன் பண்ணியிருக்கேன் தெரியுமா? ரொம்ப சின்ன குட்டியை வாங்கினா நீங்க தான் டிரெய்ன் பண்ணிக்கணும்.

''ஹாய் பப்பி.. ஷேகண்ட் கொடு.'' அவன் சொன்னதுமே தன் வெள்ளை பஞ்சு காலை கை போல நீட்ட, எல்லோரும் பார்த்து அகமகிழ்ந்தனர். ஒரு கர்ச்சீப்பை ஒளித்து வைத்து விட்டு பப்பி கேட்ச் இட் என்கிறான். நாய்க் குட்டி முகர்ந்து, முகர்ந்து பார்த்து கர்ச்சீப்பை தேடிக் கண்டுபிடித்துவிட மறுபடியும் எல்லோரும் சந்தோஷப்பட்டு பேச, ''இத பாருப்பா ஐநூறு ரூபா விலை. சரின்னு சொன்ன உடனே எடுத்துக்க. ரூபா அப்புறம் தரலாம்.'' குருவை ஓரக் கண்ணால் பார்த்தவாறே சொல்கிறான். ''சில ஜென்மங் களுக்கு எத்தனை சொன்னாலும் உரைக்காது. அதிர்ஷ்டம் இருந்தா தான் இந்த குட்டி வீட்டுலே நிக்கும். எது இருந்தாலும் அதை கண்டுபிடிச்சு கொடுத்திடும்.'' சங்கர் பெருமை பீற்றிக் கொள்ள,

''சங்கர் ஸோலார் எனர்ஜியிலே ஓடற காரையும் கண்டுபிடிக்குமா அது.'' அலுவலக நண்பன் ரவி நக்க லடிக்க,

''சே! என்னப்பா நீ. சூப்பர் கம்யூட்டரை அது கண்டு பிடிச்சு கொடுத்தா போதும். இண்டியா எங்கேயோ போயிடும்.'' இன்னொரு அலுவலக நண்பன் மனோகர் சொல்ல, எல்லோரும் கொல்லென்று சிரித்தே விட்டனர்.

குருவும் சேர்ந்து சிரிப்பதைப் பார்த்த சங்கருக்கு பற்றிக் கொண்டு வந்தது.



''எதுக்குடா சிரிக்கறே? நீயெல்லாம் ஒரு பிரண்டா? வீட்டுலே ஒரே பிரச்சனைன்னு அமக்களப்படுத்திட்டான். ஐயோ பாவமேன்னு ஐநூறு ரூபாயைக் கொடுத்து இந்த நாய்க்குட்டியை வாங்கிட்டு வந்து அவன் வீட்டுலே கொடுத்தேன். வேண்டாம்னு திருப்பி கொடுக்கச் சொல் லிட்டான். இதை காசு கொடுத்து வாங்கிட்டேன். திருப்பி கொடுத்தா ஒத்துப்பாங்களா? அது தான் இங்க விக்கலாம்னு வந்தா இளக்காரமாவா சிரிக்கறே?'' சங்கர் சொல்ல எல் லோரும் குருவை ஒரு மாதிரி பார்க்கின்றனர். ''என்னப்பா குரு. சங்கர் உன் பிரண்டு தானே, எப்பவுமே உன் பக்கம் தான் பேசுவான். அவன் கிட்டயா இப்படி நடந்துகிட்டே?'' ஏழை சொல் அம்பலம் ஏறாதது போல் குருவின் சொற்கள் எதுவும் எடுபடவே இல்லை.

''உனக்காக இத்தனை ரூபா செலவழிச்சிருக்கான். நியாயமில்லை குரு.''

''டேய் இந்த நாய்க்கா ஐநூறு.'' கையை நாயின் முகத்துக்கு நேரே காண்பித்தவன், முன் அனுபவம் காரண மாக கையைச் சுருக்கிக் கொண்டான்.

''எப்படி சொல்றான் பார்த்தியாடா?'' சங்கர் சற்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கூற,

''டேய் பாத்தாலே கன்டிரிடாக்னு தெரியலை,'' எரிச்சலோடு கத்துகிறான் குரு. ''இவனாடா பிரண்ட், தெரு நாயை தூக்கிக் கொண்டு வந்து ஐநூறு ரூபா கேக்கறான்.''

''டேய் இது கிராஸ். நாய் எல்லாம் என்ன விலை தெரியுமா? மனோஜ்ஜை கேளு. அவன் வீட்டுலே எல்லாம் கிரேட் டேன் இருக்கு. குட்டி என்ன விலைன்னு அவனைக் கேளேன்.''

''மினிமம் பைவ் தெளஸண்ட்'' மனோஜ் கூற வாயடைத்துப் போனான் குரு. மனைவி சொன்னது நிஜமா?

''வேற குட்டி எல்லாம்.'' மெதுவாக கேட்கிறான் குரு.

''டாபர் மேன் மூவாயிரம். அல்சேஷன் இரண்டாயிரம். பொமரேனியனே ஆயிரம் ரூபா கிட்டதட்ட வந்துடுது. ஒரு ரஷ்யன் நாய்க்குட்டி முப்பதாயிரத்துக்கு மேலே.''

''அடப்பாவி நாய்க்கா இத்தனை விலை?''

''என்ன நாயின்னு கேவலமா சொல்லிட்டே. இவன் எடுத்துட்டு வந்திருக்கான் பாரு இந்த குட்டியே கிராஸ். இதுவே ஐநூறு ரூபா தாராளமாய் இருக்கும்.''

எல்லோரும் எத்தனையோ அழுத்தி சொல்லியும் குருவின் மனம் கேட்டபாடில்லை. சங்கர் ஏமாற்றுகிறான் என்று தோன்றியது. யாரிடம் சொல்ல முடியும்? அவரவர்கள் வேலையைப் பார்க்க போனபின், சாப்பிடும் நேரத்தில் மறுபடியும் சங்கர் அருகில் வருகிறான்.

''என்னடா குரு நீ கூட இப்படி இருக்கே? உனக்கு உதவணும்னு நினைச்ச என்னை இப்படி திராட்டுலே விட்டுட்டியே.'' சற்று அழுதமாதிரி கூறுகிறான்.

''எது தெரு நாயை எடுத்து வந்து சும்மா கொடுத்திருந்தியானா உன்னை ஒண்ணும் சொல்லியிருக்க மாட்டேன். கூசாம ஐநூறு ரூபாயைக் கேக்கறியேடா பாவி.''

குட்டியை ஆவேசமாக எடுத்து வருகிறான். ''இதுவாடா தெரு நாய். இது கிராஸ். எந்த தெரு நாய்க்கு உடம்பெல்லாம் புசுபுசுன்னு மயிர் இருக்கும் சொல்லு. உடல் முழுவதும்



லேசான மயிர் இருக்கத்தான் இருந்தது. காது பாத்தியா. மடிச்சு சூப்பரா கீழே விழுது. தெரு நாய்க்கு இப்படியா இருக்கும்? நல்லா பாரு'' அவன் ஆவேசமாக கத்தியபடி கேட்கிறான்.

இதற்குள் மறுபடியும் கூட்டம் கூடியது.

''என் நிலமையைத் தெரிஞ்சுக்காம ஏண்டா உயிரை வாங்கறே?''

''என்னப்பா'' சுற்றியிருந்தவர் உசுப்பி விட சட்டென்று அழுது விடுகிறான்.

''இவனுக்கு உதவி பண்ணப் போய் எங்க மச்சினி வீட்டுலே காசு கொடுத்து தூக்கிட்டு வந்தேண்டா. வீட்டுலே பசங்க ''நாய் நாய்னு'' உயிரை எடுக்கறதா இவன்தான் புலம்பினான். இப்ப இவன் வேண்டாம்னு திருப்பிட்டானா! வீட்டுலே எம்பொண்டாட்டி நாயோட வராதேன்னு ஒரே சண்டை. ஐநூறு ரூபா வாங்கிட்டு வந்தா வீட்டுக்குவான்னு. என்னையும், நாயையும் வெளியே தள்ளி கதவையே சாத்தியாச்சு. வீட்டுலே குருக்ஷேத்திரயுத்தம் நடந்துகிட்டு இருக்கு. இவன் எப்படி பேசறான் பாரு.''

எல்லோரும் சங்கருக்கு ஆதரவாகப் பேச, ''நான் இந்த கன்டிரிக்கு ஐநூறு ரூபா தரமாட்டேன். போனா போகுது முந்நூறு ரூபா வேணா தரேன்.''

சங்கரின் முகம் இறுகியது.

''சரிடா, நண்பனுக்காக இருநூறு ரூபா விட்டுக் கொடுக்கறேன் எடுத்துக்க,''

அவன் சொன்ன போது அவன் மடியில் இருந்த குட்டி மறுபடியும் தாவிப் போய் குருவின் சுண்டுவிரலைக் கடித்தது.

''ஸ்... ஆ..'' என்று கத்தியவன், ''பாவி சின்ன குட்டின்னு கடாவை கொண்டு வந்து வச்சுட்டு அது கடிக்குது. ஆறு மாசம் வேறு ஆயிடுச்சுன்னு சொன்னியேடா. இப்ப தொப்புளை சுத்தி நான் தாண்டா இன்ஜக்ஷன் போட்டுக் கணும்.''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாதுடா. இது சின்ன குட்டிடா. இதபாரு நான் அது வாய்க்குள்ளே கைவிடறேன் பாரு.''

''நான் பாக்கலே. ஆளைவிடு.''

அன்று மாலை குரு இறங்கிப் போன பின், 'இதை இவன் வீட்டுலே சேக்காம விட மாட்டேன்' கூறிக் கொள்கிறான் சங்கர். குரு வீட்டிற்கு வந்தபோது பழையபடி கண்ணாமூச்சி ஆட்டம்தான். மனைவியும் சரி, பிள்ளைகளும் சரி, எதிரில் வரவே இல்லை. அது வேறு குருவின் கோபத்தைக் கிளப்ப, மெதுவாக எழுந்து வீம்புடன் வெளியே கிளம்பிப்போனான். இலக்கு இல்லாமல் சுற்றுகிறான். கடற்கரை மணலில் சிறிது நேரம் உட்காருகிறான். 'கேவலம் ஒரு நாய்க்காகத் தன் வாழ்க்கை எப்படி ஆகிவிட்டது பார்' எரிச்சலடைகிறான்.

இங்கே கணவன் சென்றான் கீதா வாயிலில் வந்து எட்டிப் பார்க்கிறாள். 'ஊர் சுத்தப் போயாச்சா?' என்று தனக்குள் முணு முணுத்துக் கொள்கிறாள். 'இனிமேல் டிபன், சமையல் எதையும் செய்து கூட வைக்கக் கூடாது. அடுத்த ஸ்டிரைக்கை ஆரம்பிக்க வேண்டியது தான்!' கறுவிக் கொள்கிறாள்.



நினைத்துக் கொண்டிருக்கும் போதே சங்கர் ஒரு ஆளுயுர நாயுடன் வருகிறான். சற்று நீண்ட முகம். உருட்டைக் கண்கள். வாய் முழுவதும் பறகள். நீண்டதாக தொங்கும் காதுகள், வாலை வெட்டி இருந்தார்கள் போல. மரக்கலரில் பளபளவென்று ஜொலித்தது. நாக்கு மட்டும் வெளியே தொங்கிக் கொண்டு 'ஹஹஹ' என்று இரைத்துக் கொண்டிருந்தது.

''என்னங்க நீங்க நாய்க்குட்டியை கொண்டு வாங் கன்னா. இத்தனை பெரிய நாயை கொண்டு வந்துட்டீங்க.'' கீதா சற்று பயத்துடன் தூர ஓடிப் போய் எட்டிப் பார்க்கிறாள். பிள்ளைகள் இருவரும் நாயைப் பார்த்தவுடனே நாலுகால் பாய்ச்சலில் உள்ளே ஓடிவிட்டனர். ஏனோ அவர்கள் இருவரையும் பார்த்தவுடனே என்ன வெறுப்போ 'லொள் லொள்' என்று குரைத்து தீர்த்துவிட்டது அந்த பெரிய நாய். வாயிலில் அதைக் கட்டுகிறான் சங்கர். ''ஷட் அப் டெய்ஸி'' அவன் சொன்னதுமே உ....ம் உ..ம் என்று மெல்லியதாக கத்தியபடி பேசாமல் அமர்ந்தது.

''அண்ணி'' என்றபடி உள்ளே வந்தான் சங்கர்.

''என்னங்க நீங்க இத்தனை பெரிய நாயை அழைச்சு கிட்டு வந்திருக்கீங்க.''

''இது பாரின் நாய்ங்க.. டாபர்மேன். ஒரு ஆளை உள்ளே விடாதே. ரொம்ப எக்ஸலண்ட் வாட்ச் டாக்.''

''சரிங்க. அதுக்கு குட்டியா இல்லே அனுப்பணும். இத்தனை பெரிய நாயை கொண்டு வந்திருக்கீங்களே. அது பார்க்கற பார்வையே பயமா இருக்கு. இதை வச்சுகிட்டு என்ன செய்யறது? எங்கியானா கடிச்சு வச்சதுன்னா?

"ஐயோ அண்ணி அப்படி கொண்டு வந்து விடுவேனா? குரு நாயின்னா ரொம்ப பயப்படறான். இது மச்சினன் வீட்டு நாய். பழகிட்டான்னா நாய் பயம் போயிடும்."

"பழகறதா? என்ன சார் நீங்க? எங்க வீட்டுக்காரர் கிட்டே ஏதாவது முன் பகையா?"

"சே!.. சே! அது ரொம்ப சாதும்மா. ஒண்ணும் செய்யாதும்மா. எம் மச்சினன் ரெண்டு நாளைக்கு ஊருக்கு போறான். அது எங்கவீட்டுலே இருக்கும். சரி பழகட்டுமேன்னு கொண்டு வந்து விடறேன். ஒரு இரண்டு நாள் இருந்தா பயம் போயிடும். அப்புறம் நாய்க்குட்டியை வாங்கிடலாம். தைரியமா இருங்க. நான் வரேன்" சங்கர் கிளம்ப,

"ஐயோ நில்லுங்க. இதுக்கு சாப்பாடெல்லாம் போடணும். எங்களுக்கு இதெல்லாம் பழக்கமே இல்லை வேண்டாங்க நீங்க எடுத்துட்டு போயிடுங்க."

"ஒண்ணும் ஆகாது பயப்படாதீங்க. சாப்பாடு எல்லாம் வேளைக்கு எங்க ஆள் கொண்டு வந்து போடுவான்." கீதா மறுக்க மறுக்க, சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

அவன் போன பிறகு கத்த ஆரம்பித்த டாபர்மேன் விடாமல் கத்தியது. அதுவும் கீதா எட்டிப் பார்த்தால் இன்னும் வேகமாக கத்தியது. கீதா பயந்து போய் உள்ளே இருந்தாள். அன்று லேடிஸ் கிளப் மீட்டிங்கிற்கு கூட போகவில்லை. போக முடியவில்லை. பிள்ளைகள் இருவரும் விளையாடுவதற்கு கூட பின்பக்க வழியாகத் தான் சென்றனர். மறந்து போய் கூட முன்பக்கம் வர வில்லை.




"அம்மா அது நாய் இல்லே பேய். எங்களைப் பாத்தாலே பிடுங்கற மாதிரி வருது" பிள்ளைகள் இருவரும் பயந்தபடி சொல்ல, கணவன் எப்படி வாயில் வழியாக வந்து உள்ளே வரப் போகிறான். கவலையில் ஆழ்கிறாள் கீதா.

அன்று குரு வேலைகளை முடித்துவிட்டு, இரவு ஏழுமணிக்குத்தான் வருகிறான். குருவைப் பார்த்ததுமே மாலையிலிருந்து கட்டுப்பட்ட கோபமோ என்னவோ எரிச்சலும், ஆத்திரமும் வந்தது அந்த நாய்க்கு. தொண்டை கிழிய குரைக்க ஆரம்பித்தது. தன் வீட்டு வாசலில் கட்டப்பட்டிருந்த நாயைக் கவனிக்காமல் வந்தவன் நாய் கத்தியதும் நாலுகால் பாய்ச்சலில் ஓட ஆரம்பித்தான்.

அதுவரை பொழுது போகாமல் வெறுப்போடு கத்திய நாய் இன்னும் குதித்து குதித்து முன்னால் காலை தூக்கி தூக்கி கத்த கட்டியிருந்த செயின் கழண்டு விட, வேகமாக எரிச்சலோடும் ஆத்திரத்தோடும், குருவைத் துரத்த, நாய் சங்கிலி கழண்டு போனது என்று தெரிந்ததும் பயந்து போய் கதவை இறுக சாத்தி தாழ்ப்பாள் போட்டாள் கீதா. பிள்ளை கள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தன. குரு வேகமாக ஓடி விட்டான். பின்பக்க சுவரை தாண்டி குதித்து வீட்டை ஒட்டிய சாக்கடையில் விழுந்தான்.

## 5



கீதா வெளியே வருவதற்கு யோசிக்கிறாள். "கிளீன் போல்ட்" கத்துகிறான் ரிஷி.

''அம்மா.. அப்பா சாக்கடையிலே விழுந்துட்டாரு...'' அவன் கத்த,

''ஐயோ'' என்றவாறு கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடுகிறாள். சுற்றி சுற்றி வந்த அந்த டாபர்மேன் கீதாவைப் பார்த்துவிட்டு மசால் வடையைப் பார்த்த எலியாக பாய்ந்தது. கணவனை காப்பாற்ற வேண்டும் என்று வந்தவள் எதிர் திசையில் ஓடுகிறாள். இந்த ஓட்டத்தை ஒலிம்பிக்கில் ஓடி இருந்தால் நமக்கு தான் தங்கப்பதக்கம் கிடைத்திருக்கும். வேகவேகமாக ஓடுகிறாள். டாபர்மேன் ஒரு குஷியோடு துரத்துகிறது. எத்தனை தடவை சுத்தி சுத்தி வந்தாலும் இன்னும் வேகமாக அவளை பின்னாலிருந்து குரைத்தபடி துரத்த, என்ன செய்கிறோம் என்று தெரியாமலேயே மரம் ஏறி, உச்சிக் கிளைக்கு போய் விடுகிறாள்.

அந்த மரத்துக்கு கீழே நின்று மிகமிக ஆனந்தமாக குரைக்கிறது. கீதா இறங்கி வராததால் மரத்தின் அடியில் நின்றவாறே மேலே அண்ணாந்து பார்த்து பார்த்து குரைக்கிறது. சிறிது நேரம் குரைத்துவிட்டு அலுத்து விட்டதோ என்னவோ, மரத்தின் அடியில் படுத்துவிட்டது. சிறிது நேரம் வேடிக்கை பார்த்த குழந்தைகள்,

''டேய் அம்மாவையே ஒரு டாபர்மேன் தொரத்திடிச்சு. அம்மா மரத்து மேலே இருக்காங்க.''

''ஏய் வாடி இந்த ஜன்னலைத் திறந்து அம்மாவோட பேசலாம்.''

மரத்தின் அருகில் இருந்த ஜன்னலைத் திறந்து அம்மாவிடம் பேச முற்பட, கீழே படுத்து கண்ணை மூடிக்



கொண்டிருந்த டாபர்மேன் வள்ளென்று மேலே பாய்ந்தது. நல்ல வேளை ஜன்னல் இருந்தது.

''ஐயோ'' என்று கத்தியபடியே ஜன்னலை விட்டு உள்ளே ஓடினார்கள் பிள்ளைகள்.

குரு சாக்கடையில், கீதா மரத்தின் மேல், பிள்ளைகள் வீட்டினுள் மெதுவாக உள்ளே சென்று, கதவு எல்லாம் போடப்பட்டு இருக்கிறதா என்று பார்த்து கதவைப் பூட்டி விட்டார்கள்.

''ஏய் பத்திரம் டீ அந்தப் பிசாசு உள்ளே வந்துடப்போவுது.'' ரிஷி கத்த அடிமேல் அடி வைத்து மினி கதவிடம் சென்று பூட்டுகிறாள். இருவரும் சற்று பயத்துடனும் நடுக்கத்துடனும்தான் கதவிடம் போகிறார்கள்.

''டேய் கதவு எல்லாம் பூட்டியாச்சு. டேய் தனியாக இருக்க பயமா இருக்குடா, பசிக்குதடா'' ரிஷியிடம் மினி அழ,

''எனக்கும் தாண்டி பசிக்குது. என்ன செய்ய?'' சிறிது நேரம் பேசியவர்கள் அழவே ஆரம்பித்து விட்டனர்.

''டேய் நாய் தூங்கிடுச்சா பாரு அம்மாவைக் கூப்பிடலாம்.''

''ஷ்... சத்தம் போடாதே. அந்த டாபர் பிசாசு முழிச்சுக்கப் போகுது.''

''அப்பா என்னடா ஆச்சு?''

''அப்பா சாக்கடையிலே முழுகிட்டாரு'' ரிஷி கூற,

''அப்பா நீந்த மாட்டாரா?'' மினி ஆவலாகக் கேட்கிறாள்.

''அப்பா அசைஞ்சாலே நாய் கடிச்சிடும்'' ரிஷி கூற,

''அப்பா பாவம்டா.'' என்கிறாள் மினி.

அடுத்த நாள் காலை குருவின் வீட்டிற்கு சங்கர் வந்தபோது, ''ஏங்க உங்க நாயை முதல்ல கூப்பிட்டு கிட்டு போயிடுங்க.'' எங்கோ தூரத்திலிருந்து யாரோ கத்துவது போல் இருக்க, சுற்றும் முற்றும் சுற்றி பார்க்கிறான் சங்கர்.

''ஏங்க உங்களைத் தானே..'' ஈன ஸ்வரத்தில் யாரோ கத்துவது போல் தோன்ற டாபர்மேன் கத்த ஆரம்பித்தது.

''ஹேய் டெய்ஸி'' அவன் கூப்பிடவும் மொட்டைவாலை வேகவேகமாக ஆட்டியபடி குதித்து ஓடியது. சங்கரின் மேல் விழுந்து பிராண்டியது.

''டேய்.. டேய்.. என்றவாறே அதன் வாயைப் பிடித்து கொஞ்சியவன்.

''சாரிடா, நைட் வரமுடியலே,'' என்றவாறே பிரட்டை எடுத்து போடுகிறான். போடுவதற்குள் லபக்கென்று பிரட்டை ஒன்றன்பின் ஒன்றாக விழுங்கியது. விழுங்கிய பிரட் தொண்டைக்குள் மாட்டிக் கொண்டதால் மறுபடியும் தொண்டையிலிருந்து வாந்தி போல் எடுத்து மீண்டும் சாப்பிட்டது.

''எதுக்குடா. இப்படி அடைச்சுகிட்டு சாப்பிடறே?'' என்று கொஞ்சியவன்.

''இந்தா இன்னும் சாப்பிடு.'' அவன் போடப் போட முழு பிரட்டையும் சாப்பிட்டு முடித்தது.



''ஓ.கே.. வா'' என்றவாறு சங்கிலியில் கட்டிப் போடுகிறான்.

டெய்ஸியை சங்கிலியில் கட்டிப் போடுகிறான். ''அண்ணி எங்க இருக்கீங்க?'' அவன் குரல் கொடுத்ததும் எட்டிப் பார்த்துவிட்டு, டெய்ஸி கட்டப்பட்டு இருக்கிறதா என்று பார்த்து விட்டு மரத்திலிருந்து இறங்கி வருகிறாள்.

''என்ன அண்ணி பயம் போயிடுச்சா?''

கேட்டவனைப் பார்த்து எகிறி விழுகிறாள் கீதா. ''ஏங்க நீங்க செய்யறது உங்களுக்கே நல்லாயிருக்கா? இந்த கடா நாயி வேண்டாம்னு சொன்னேன் இல்லே. கேக்காம எங்க வீட்டுலே கொண்டு வந்து விட்டிருக்கீங்க. ராத்திரி புல்லா நான் எங்கே இருந்தேன் தெரியுமா?'' மரத்தின் உச்சியைக் காட்டுகிறாள், சொல்லும் போதே அழுகை வந்தது.

''அந்த மரத்துலேயா ஏறினீங்க? அத்தனை உசரத்துக்கு எப்படிப் போனீங்க அண்ணி?'' வியப்பது போல் அவன் கேட்க,

''என்ன கிண்டல் பண்றீங்களா? செய்யறதையும் செய்துட்டு..'' சொல்லும்போதே அழுகிறாள், ''அவர் பாவம் சாக்கடையிலே கிடக்கிறார்.''

''என்னது குரு சாக்கடையிலா ''சட்டென்று ஓடுகிறான், சங்கர் சாக்கடையை நெருங்கும் போது சிரித்துக் கொள்கிறான்.

கீதாவும் பின்னால் ஓடிப்போய், கணவன் எங்கிருக்கிறான் என்று பார்க்கிறாள். சாக்கடையின் ஒரு ஓரத்தில் ஒடுங்கிப் போய் அமர்ந்திருந்தான் குரு.

''டேய் என்னடா இது.'' சங்கர் கேட்க, பெரிதாக அழுகிறான் குரு.

''என்னடா ஆச்சு?'' கேட்டவாறு அவனை அழைத்துக் கொண்டு வர, கீதா குருவைப் பார்த்து அழுகிறாள். கீதா, குருவைப் பார்த்து டாபர்மேன் மறுபடியும் பாய்ந்து பாய்ந்து குரைக்க,

''ஏங்க சங்கர் உங்க நாயை அழைச்சிட்டு போயிடுங்க.'' கத்துகிறாள். அவள் கத்தியவுடன் ''இதோ கூட்டிகிட்டு போயிடறேன்.''

''ஏய் டெய்ஸி கீப் கொய்ட்'' என்றவாறே அதட்டியவுடன் நாய் பணிந்து வாயை மூடிக் கொண்டது. கீதா மன உளைச்சலுடன் தவித்துக் கொண்டிருந்தாள். முகம் இறுகி வார்த்தைகள் வராமல், குரு தளர்ந்து போய் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். வாயிலில் இருக்கும் குழாயில் தலையிலிருந்து முழுகியவன் ஈரம் சொட்ட சொட்ட மெதுவாக உள்ளே நகர்ந்தான். கீதாவும் தளர்ந்து போய் தான் போகிறாள். பிள்ளைகள் இருவரும் உள்ளே வந்த அம்மாவை கட்டிக் கொண்டன.

''மம்மி எப்படி இருக்கீங்க?'' பிள்ளையும், பெண்ணும். கீதா குழந்தைகளை அணைத்துக் கொண்டு லேசான நிம்மதி பெருமூச்சு விடுகிறாள்.

''மம்மி பசிக்குது'' பெண் அழ, ''இருடா கண்ணு. கொஞ்சம் இரு ரெடி பண்ணிடலாம். அம்மாவும் தான் ராத்திரி புல்லா மரத்துலேயே உக்காந்துட்டு இருந்தேன் இல்லே.'' சொல்லிவிட்டு விடு விடுவென்று பல் விளக்கி



விட்டு பாலைக் காய்ச்சி குழந்தைகளுக்கு போர்ன்விடா கலந்து தருகிறாள். காபி டிகாஷனைப் போட்டு கணவனுக்கு கலந்து எடுத்து வருகையில், குரு பல் விளக்கி குளித்து விட்டு உடைமாற்றி தரையில் சுருண்டு படுத்துக் கொண்டு இருக்கிறான். ஒரு நிமிடம் அவனைப் பார்த்ததுமே எரிச்சல் வந்தது. அடுத்த நிமிடம் அவனைப் பார்த்ததும் பாவமாகத் தோன்ற ''இந்தாங்க காபி.'' காபியைத் தர, வெள்ள காலத்தில் பூகம்பத்தில் ஹெலிகாப்டரில் இருந்து பொட்டலத்தைப் போட்டால் டக்கென்று பிடிப்பவனைப் போல் எழுந்து உட்கார்ந்து காபி டம்ளரை வாங்கி காபியைப் பருகுகிறான்.

கீதாவும் காபியை கலந்து குடிக்க, ''அண்ணி எனக்கு காபி இல்லையா?'' சிரித்தபடி வந்து நிற்கிறான் சங்கரன். கூடவே அந்த டாபர்மேனும் நாக்கில் எச்சை சொட்ட, சொட்ட வந்து நிற்கிறது.

''எங்க டெய்ஸிக்கும் காபின்னா உயிர்'' சங்கர் கள்ளத்தனமாக சிரிக்க,

''கெட் அவுட்'' கத்துகிறாள் கீதா. அவள் கத்தலைக் கேட்டு, எரிச்சலுற்று வள், வள் என்று கத்தியது டெய்ஸி. பயந்து போய்விருட்டென்று உள்ளே போக முயல கை, கால்கள் நடுங்கியவாறே குரு நிற்கிறான். சமையல் அறையின் வாயிலில் நின்று, ''மிஸ்டர் சங்கர் மரியாதையா நாயை அழைச்சுட்டு போகலே போலீஸைக் கால் பண்ணுவேன் பத்திரம்.'' என்று அவள் கூறுவே, ''ஐயோ என்ன அண்ணி?'' என்றவாறே கிளம்பிப் போகிறான் சங்கர்.

அன்று குரு அலுவலகம் போகவில்லை. பிரமை பிடித்தது போல் அமர்ந்து இருந்தான்.

''ஸாரிங்க அவன் வார்த்தையைக் கேட்டு உங்களை தப்பா நினைச்சு சண்டை போட்டுட்டோம், சாரி.''

''அப்பா பாவம்பா... எப்படிப்பா நேத்து முழுவதும் சாக்கடையிலே இருந்தீங்க.'' பையன் ரிஷி கேட்க,

''ஸாரிப்பா... எங்களுக்கு நாயே வேண்டாம்.'' என்கிறாள் மினி.

குரு சற்று மலர்ந்தவனாகப் பிள்ளைகளை அணைத்துக் கொள்ள,

''டேய் சாக்கடை நாத்தம்டா.'' என்று அண்ணனின் காதில் கிசுகிசுக்கிறாள் மினி.

''ஆமா நைசா கழண்டுக்கோ,'' ரிஷி முணுமுணுக்க, பிள்ளைகள் இருவரும் அப்பா நாங்க குளிக்கப் போகணும்பா. ஸ்கூலுக்கு லேட்டாகிவிடும்.'' என்றவாறே விலகிச் சென்றனர்.

ஒரு மூன்று நாட்கள் சென்றதும் வீடு சகஜ நிலைமைக்கு வந்தது. குரு அலுவலகத்திற்கும், பிள்ளைகள் பள்ளிக்கும் சென்று மிக மிக பிஸியாகி விட்டார்கள். குரு சங்கரைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக் கொள்கிறான். ஒரு இரண்டு நாட்கள் அவனோடு வந்த நாய்க்குட்டி பிறகு காணவில்லை. ஒரு நாள் தெருவில் மற்ற நாயோடு நாயாக மேய்ந்து கொண்டு இருப்பதைப் பார்த்தான்.

'பாவி... நான் நினைச்சது கரெக்ட். தெரு நாய்க்கு ஆயிரமும் ஐநூறும் கேட்டானே. வேண்டுமென்றே நாயைக்



கொண்டு வந்து அலறவைத்தான். ஒரு நாள் முழுவதும் நானும், மனைவியும், குழந்தைகளும் 'நினைக்கும்போதே அழுகை வந்தது. ஆத்திரம் வந்தது. கோபம் வந்தது. அந்த நாயையே விட்டு சங்கரை கண்ட துண்டமாக கடிக்க விட வேண்டும் என்ற வெறி வந்தது. 'பன்னாடை நாய்' என்று சங்கரைத் திட்டுகிறான் குரு.

ஐந்தாவதிலிருந்து ஆறாவது நல்ல பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று எண்ணி ஊரின் நடுவில் குரு இருக்கும் அலுவலகத்தின் அருகில் உள்ள பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்க முயற்சித்து குழந்தைகளுக்கு அட்மிஷனும் கிடைத்துவிட்டது.

''நாம பேசாம ஏதாவது பிளாட்டுக்கு போயிடுவோம். உங்க ஆபீஸ் பக்கத்திலே இருந்தா. குழந்தைகளுக்கும் ஸ்கூலுக்கு கிட்டே.'' கீதா சொன்னபோது, ''சொந்த வீட்டைவிட்டுட்டு அங்க போனா இதை என்ன செய்யறது?''

''அட என்னங்க நீங்க. இது தனிவீடு இதுக்கு நல்ல வாடகை வரும். அதை வாங்கி பிளாட்டுக்கு கொடுத்திடுவோம்.'' அவனும் சரி என்று ஆமோதிக்கிறான்.

அடுத்த வாரமே பிள்ளைகளின் பள்ளி, அவனுடைய அலுவலகத்திற்கு அருகில் உள்ள பல குடியிருப்பு மனையில் ஒன்றை வாடகைக்கு எடுத்தார்கள். மாதம் மூவாயிரம் ரூபாய் வாடகை. தன் சொந்த வீட்டை அலுவலக நண்பன் ஒருவனுக்கு மூவாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு வாடகைக்கு விட்டான் குரு. ஒரு வாரம் சென்றபோது, ''அம்மா மூணு பிளாட் தள்ளி ஒரு வீட்டுலே ரொம்ப அழகான பப்பிம்மா எனக்கும்மா.'' மினி அம்மாவைக் கெஞ்சுகிறாள்.

6



"மினி வாயை மூடு.. நாயால நாம பட்டதெல்லாம் போதாதா? மறந்துட்டியா?"

"போம்மா நாய் யாரு கேக்கறா. பப்பிதான் வேணும். எத்தனை ஸ்வீட்டா இருக்கு தெரியுமா?"

"போடி அது பெரிசாகாதா? பெரிசானா அதுவும் நாய்தானே."

"போம்மா அந்தப் பெரிய நாய்கூட அங்கிள் கூப்பிட்டாருன்னு எப்படியெல்லாம் நடந்துகிச்சு. நாமளும் குட்டியிலோர்ந்து வளர்த்தா நாம சொல்றது எல்லாம் கேட்கும் நீங்க நாய் வாங்கித் தரலை. இனிமே சாப்பிடவே மாட்டேன்."

கோபத்தோடு வாயிலில் போய் அமர்ந்து கொள்கிறாள் மினி.

"ஏய் மினி உதை வாங்கப் போறே, மரியாதையா பூஸ்ட்டும், பூரியும் செஞ்சுவச்சிருக்கேன் சாப்பிடு."

"மாட்டேன் எனக்கு எதுவுமே வேண்டாம்" வாயிலில் கன்னத்தில் கை வைத்து கோபமாக அமர்ந்து இருந்தாள் மினி.

"சரி பட்டினி கிட எனக்கென்ன போச்சு. பாவமேன்னு நினைச்சு செல்லம் கொடுத்து வளர்த்தா திமிர்தான் ஏறிப் போகுது." கொஞ்ச நேரம் கழித்து எங்கோ சுற்றப்



போயிருந்த ரிஷியும் வருகிறான். அம்மாவிடம் பிடிவாதம் பிடிக்கிறான்.

கீதா முடியாது என்று சொல்லவே, ரிஷியும் கோபித்து கொண்டு வாயிலில் போய் அமர்ந்தான்.

"இதபாருடா ரெண்டுபேரும் எத்தனை உயிரெடுத்தாலும் நான் ஒத்துக்க மாட்டேன். நாய், பேய் எதுவும் வேண்டியதில்லே." கீதா எரிச்சலாகக் கூறிவிட்டு உள்ளே திரும்பி வேலையை கவனிக்கச் செல்ல ஆரம்பிக்கும் போது, "என்னம்மா பேய் கூட வா விக்கறாங்க. அப்ப எனக்கு பேய் வாங்கி கொடுத்துடம்மா. மினி நாயை வச்சுக்கட்டும்." ரிஷி தலையை ஆட்டிக் கூற, சட்டென்று சிரித்து விடுகிறாள் கீதா.

"சரி.. சரி.. வா.. டிபன் சாப்பிட்டு விளையாடப் போ." வேண்டாம் என்கிறான் ரிஷி.

"எக்கேடும் கெட்டுப் போங்க." சொல்லிவிட்டு உள்ளே நகர மினி அழுது கொண்டிருக்கிறாள். ரிஷியும் கன்னத்தில் கை வைத்தவாறே வாயிலில் அமர்ந்து கொண்டு இருக்கிறாள். எத்தனையோ முறை கூப்பிட்டும் இருவரும் எழுந்து வரவில்லை. கீதா எரிச்சலோடு டிவியில் சீரியல் பார்க்க அமர்ந்து விடுகிறாள்.

மணி ஏழடித்தது. சீரியலில் மூழ்கி இருந்தவள் நடு நடுவே விளம்பரம் வரும்போது எழுந்து வருகிறாள்.

"டேய் சாப்பிட வறீங்களா இல்லையா?" மறுபடியும் வாத விவாதம். மறுபடியும் சீரியல் ஆரம்பித்துவிட டிவியின் முன் போய் அமர்ந்து விடுகிறாள்.

டிவியிலும் வள் வள்ளென்று நாய் குரைக்க மினியும் ரிஷியும் உள்ளே ஓடி வருகிறார்கள்.

''ஹாய் அந்த டிராமாவிலே நாய் சூப்பரா குரைக்குது பாரேன்.'' ரிஷி சொல்ல மினியும் ஆவலாகப் பார்க்கிறாள்.

''டேய் நம்பளைத் துரத்தின டாபர்மேன் மாதிரி இல்லே.''

''ஆமாண்டி அதே கலர். ஆனா டாபர்மேன் எல்லாம் ஒரே மாதிரி தாண்டி இருக்கும்.''

''டேய் நம்பளும் டாபர்மேன் குட்டி வாங்கலாமா?''

''கட்டாயம் வாங்கிக்கலாம் டீ. நம்ப அப்பாவை எப்படி துரத்தி சாக்கடையிலே விழவச்சுது'' சொல்லி ரிஷி சிரிக்கிறான்.

''அதை விட அம்மா மரத்துலே ஸ்பைடர் மேன் மாதிரி ஏறினாங்களே அது ஸூப்பரா இருந்தது இல்லே. கட்டாயம் டாபர் தான் வேணும்.''

''சரி வாங்கிக்கலாம். வா டிபன் சாப்பிட்டு வந்துடலாம். பூரி உருளைக் கிழங்கு சப்ஜி செய்திருக்கேன்.'' கீதா கெஞ்ச.

''வேண்டாம்'' முறுக்கிக் கொள்கிறாள் மினி.

''வாடி நம்ப வாசலிலேயே போய் உக்காந்துக்கலாம்.'' சொல்லிவிட்டு ரிஷி வாசலுக்கு ஓட, மினியும் ஓடுகிறாள்.

''டேய் வந்தேன்னா ரெண்டு பேரையும் வெட்டி போட்டுடுவேன்.''

''போட்டுக்கங்க. மினி சொல்லிவிட்டு அண்ணனுடன் வாசலில் வந்து உட்கார்ந்தாள்.



''ஏண்டா வீட்டுக்குள்ளே இருந்தா டிவியாவது பார்த்திருக்கலாம் இல்லே.'' மினி சண்டை பிடிக்க,

''ஏய் பயித்தியம் அங்கே உள்ளே போனா அம்மா பாடத்தை படிக்கச் சொல்ல மாட்டாங்க. அதான் எஸ்கேப் ஆயிட்டேன்.''

அவன் சொல்ல, சொல்ல ''அடப்பாவி'' என்கிறாள் மினி. இருவரும் ஹோம் வொர்க் செய்யாமல் இருட்டில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் குரு அலுவலகம் விட்டு வருகிறான். ''ஹாய் என்னடா கண்ணுங்களா அப்பாவுக்காக வெயிட் பண்ணிகிட்டு இருக்கீங்களா?''

''ஆமா'' என்ற மினி ''அப்பா ப்ளீஸ் எனக்கு ஒரு பப்பி வேணும்பா அரேன்ஜ் பண்றீங்களா? வாங்கித் தருவீங்களா?''

''அப்பா.. ப்ளீஸ்'' ரிஷி கெஞ்ச, ஒரு நிமிடம் மலைத்து போய் விடுகிறான் குரு.

ஒரு நிமிடம் ஆத்திரம் வந்தாலும் அலுவலகத்தில் இருந்து வந்த களைப்பு, பசிவேறு, எதையும் பேச முடியாமல் செய்ய பிறகு பேசிக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொள்கிறான். உள்ளே கீதா கொடுத்த டிபனை, காபியை விழுங்கியவன்,

''ஆமா பிள்ளைங்க ரெண்டு பேரும் அங்கே என்ன செய்யறாங்க. படிக்கலையா ஹோம்வொர்க் முடிச்சுட்டாங்களா?''

''ஹோம் வொர்க் கூடச் செய்யலை.. வந்ததுலேருந்து நாய்க்குட்டி வாங்கித்தான்னு ஒரே தொணப்பி எடுத்துகிட்டு

இருக்காங்க. நான் திட்டினதுக்கு ரெண்டு பேரும் சாப்பிடாம ஸ்டிரைக்.''

''என்னது ஸ்கூல்லேந்து வந்ததுலேந்து ஒண்ணும் சாப்பிடலையா?''

பதறிப்போய் கேட்ட குருவிற்கு ''ஆமாங்க'' என்று பதிலுரைக்கிறாள் கீதா.

''அறிவிருக்கா உனக்கு? இத்தனை நேரம் குழந்தைங்க ஒண்ணும் சாப்பிடாமயா இருந்தது.பாவம்..''

''மினிம்மா, ரிஷி வாடா.. வாங்க.. அப்பாவோட சாப்பிடவாங்க.'' ஆசையாகக் கூப்பிடுகிறான்.

''ம்.. எங்களுக்கு வேண்டாம். நாய் வந்தாதான் சாப்பிடுவோம்.''

''நாய் தான் வேணும். ஓகே.. ஓகே நான் வாங்கித் தரேன்.''

''நீங்க பொய் சொல்றீங்க.''

''இல்லேடா.. நான் கட்டாயம் வாங்கித் தரேன்.''

''இல்லே.. இல்லே'' மினி கத்த, ரிஷியும் சேர்ந்து கத்துகிறான்.

''எல்லாம் நீங்க கொடுக்கற செல்லம்.'' கீதா கோபிக் கிறாள்.

''ஆமா.. நீங்க எங்களைத்தான் திட்டிகிட்டே இருப்பீங்க. நாங்க சாப்பிடவே மாட்டோம்.'' ரிஷி கத்த,

''ஆமா..'' மினியும் கூடச் சேர்ந்து கத்துகிறாள்.



''போய்த் தொலைங்க, யாரும் சாப்பிடவேண்டாம்.'' கீதா கத்துகிறாள். ரிஷியும், மினியும் கோபித்துக் கொண்டு வாசலுக்குப் போக,

''கீதா.. பேசாம இரு'' மனைவியை அடக்கியவன்,

''கண்ணுங்களா.. இன்னிக்கு சாப்பிடுங்க. நாளைக்கு கட்டாயம் வாங்கிட்டு வரேன். வாங்கிட்டு வரலேன்னா நீங்க சாப்பிடவேணாம்.''

''முடியாது இப்பவே வேணும்.''

''சரிவாங்க. சாப்பிடுங்க. போவோம்.''

''மாட்டோம்.'' இரு குழந்தைகளும் கோரஸாக கத்தின.

''சரி கொஞ்சம் சாப்பிடுங்க போவோம்.'' குரு கெஞ்சி, கெஞ்சி கொஞ்சி பிள்ளைகளை ஒரு வழியாக ஒத்துக் கொள்ள வைக்க, பிள்ளைகள் அரை மனதுடன் சாப்பிடு கின்றனர்.

''அப்பா வாங்க போய் நாய் வாங்கிட்டு வரலாம்.'' ரிஷியும் மினியும் கத்த,

''நாயாவது, பேயாவது போய் படுங்க. அப்பாவே ஆபீசிலிருந்து ரொம்ப டயர்டா வந்திருக்காரு.'' கீதா சொல்லி முடித்தவுடன் ஆரம்பித்தது அழுகை. மினியும் ரிஷியும் கை, கால்களை உதைத்துக் கொண்டு சிறு குழந்தைகள் போல் அழுகின்றனர்.

''இதுங்களே ஒரு நாய். இதுங்களுக்கு இன்னொரு நாய் தேவையா'' கீதா எரிச்சலோடு கூறுகிறாள்.

''கீதா.. குழந்தைகளைத் திட்டாதே. இதோ நாங்க போய் வாங்கிட்டு வரோம்.''

"ஏங்க அறிவிருக்கா? அறிவு கெட்ட நாய் மாதிரி பிஹேவ் பண்றீங்க? இந்த இருட்டிலே எந்த நாயைத் தேடிப்போவீங்க? நாயென்ன கடையிலா வச்சுகிட்டு இருக்கான். சோப்பா, இல்லை பிஸ்கட்டா? 'குடுப்பான்னு' காசு கொடுத்து வாங்க முடியுமா என்ன?"

"கீதா.. ஏன் சொன்னா புரிஞ்சுக்க மாட்டேங்கறே? ஏற்கனவே பிள்ளைகள் பட்டினி. சரியா சாப்பிடலை. இதுலே நான் வேற போகாம ஏமாத்த முடியுமா. வெக்ஸ் ஆயிடுவாங்க. நாய் மாதிரி வள்வள்ளுன்னு பிடுங்காம வழியை அனுப்பு."

குருவின் வார்த்தைகள் கீதாவை எரிச்சலைத் தூண்ட, பதில் பேசாமல் விருட்டென்று உள்ளே போகிறாள் கீதா.

குழந்தைகள் சந்தோஷத்தோடு ஷூ, தொப்பி, டார்ச் சகிதம் கிளம்ப, குருவும் அவர்களோடு சேர்ந்து கிளம்பு கிறான். தன்னுடன் பிளாஸ்டிக் கோணியையும் எடுத்துப் போகிறான் குரு.

"இது எதுக்குப்பா?"

"ஏண்டா புது நாயை அப்படியே கொண்டு வரமுடியுமா? அவுங்க அம்மா வந்து கத்தி நம்மை பிடுங்குமே."

இவர்கள் எண்ணம் தெரிந்ததோ என்னவோ, ஒருவீட்டில் எல்லா நாய்களும் நாலு கால் பாய்ச்சலில் பாய்ந்து ஓடி வந்தன.

"அப்பா.. அப்பா இந்த டாக் ரொம்ப நல்லாயிருக்குப்பா. அதை பார்த்தா டாபர்மேன் போல இருக்கு."

சொல்லி முடித்தவுடன் குரு சற்று பயத்துடனே டாபர்மேனையும் அதன் குட்டிகளையும் பார்க்கிறான்.



கேட்டு போட்டு இருந்தது. இவனைப் பார்த்ததும் நாலுகால் பாய்ச்சலில் ஓடிவந்து கத்த சில நாய்கள் கேட் மேலே ஏற, குருவும், பிள்ளைகளும் பயந்தபடி நின்றுபின் ஓட்டம் பிடித்தனர்.

"அப்பா டாபர்மேன் பெஸ்ட்னு சொல்றாங்க," ரிஷி கேட்க,

"பெஸ்ட் நாய்ன்னாலும் நமக்கு அது வேண்டாம். அது வாயையும் பல்லையும் பாத்தியா?" குரு கேட்க.

"அப்பா நீங்க ஏன் கோணி எடுத்துட்டு வந்திருக்கீங்க." மினி கேட்க.

"நாய்க் குட்டியை எப்படி எடுத்துட்டுப் போறது. அதுக்கு தான்." குரு பிள்ளைகளுக்கு விளக்கம் சொல்கிறான்.

"அப்பா நாயை திருடப் போறீங்களா?" மினி சற்று பயந்து போய் கண்ணை விழித்துக் கேட்கிறாள்.

## 7



"சீ.. வாயை மூடு.. குழந்தைகளாச்சேன்னு பாத்தா ரொம்பதான் தலைக்கு மேலே போறீங்க?"

"என்னப்பா நீங்க? ஏன் கோபிச்சுக்கறீங்க? துட்டு கொடுத்து வாங்கினா பப்பியை மடியிலே வச்சுகிட்டு வருவோம். யாரும் பாக்காம எடுக்கத்தானே இதை கொணாந் துருக்கீங்க. எனக்குத் தெரியும். நான் கண்டுபிடிச்சிட்டேன்." கையை ஆட்டி ஆட்டி ரிஷி பேச,

''என்னடா கண்டு பிடிச்சே நாயே. உங்க அம்மா சொல்றதுதான் சரி உங்களுக்கு ஒண்ணும் வாங்கித் தரக்கூடாது கிளம்புங்க.''

''என்னடா ரிஷி அப்பாவை டென்ஷன் பண்றே?'' கத்திய மினி.

''ஸாரிப்பா வாங்கப்பா நாய் பிடிக்கலாம். ஸாரிப்பா நாய் பாக்கலாம்'' என்று சொல்ல மூவரும் அடுத்த வீட்டிற்கு வந்தனர்.

ஒரு ஆளுயர கிரேட் டேன் நின்று கொண்டு இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது. அதனருகில் குட்டி கிட்டி எதுவும் இல்லை.

''அப்பா.. வேண்டாம்பா ப்ளீஸ் அந்தக் கடா நாய் வேணாம். மறுபடியும் நாம அவஸ்தைப் பட வேணாம்.'' ரிஷி கூற,

''ஆமாப்பா'' என்கிறாள் மினி.

மறுபடியும் சிறிது தூரம் நடந்தனர். ஒரு வீட்டில் அல்சேஷன் ஒன்று தன் குட்டிகளோடு படுத்து இருந்தது.

''இந்த நாயைப் பாருங்க. பிடிச்சிருந்தா அப்புறம் உள்ளே போய் ஓனர் கிட்டே போய் பேசி ஒரு குட்டியை எடுத்துட்டு போகலாம் அப்பா. அந்த பிரௌன் குட்டி ரொம்ப நல்லா இருக்கு இல்லே.'' மினி ஆவலாகக் கூற,

''போடி அந்த கறுப்பும் வெள்ளையும் கலந்த குட்டி தான் நல்லாயிருக்கு.''

''அது வேண்டாம்,'' ரிஷி எரிச்சலோடு கூற,



''போடா, அந்த பிரௌன் குட்டி தான் நாம எடுக்கணும்.'' மினி பிடிவாதம் பிடிக்க,

''முடியாது'' ரிஷி கத்த, அல்சேஷன் எகிறி எகிறி பாய்ந்து வந்தது. அவ்வளவுதான் அந்த இடத்தில் இருந்து ரொம்ப தூரம் போய் நின்றனர் பிள்ளைகள், குருவும் பிளாஸ்டிக் கோணியோடு வேகமாக நடக்க, நாய் குலைத்ததால் லைட்டைப் போட்டுவிட்டு ''யாரு.. ஹூ ஈஸ் தேர்?'' என்றவாறு சற்று கடுமையான குரலில் கேட்டவாறு கதவைத் திறந்து கொண்டு மிலிட்டிரிக்காரர் ஒருவர் வர,

அல்சேஷன் இன்னும் வேகமாகக் குரைக்க சற்று ஓட்டமும் நடையுமாகப் போகிறான் குரு.

''ஏய்... யாரு.. யாரு..'' அவர் கத்த,

''அப்பா சீக்கிரம் வாங்க. நீங்க நாயைத் தூக்கிட்டு வந்துடப் போறீங்கன்னு தெரிஞ்சுடப் போகுது சீக்கிரம்.'' மினி கத்த,

''வாயை மூடு டீ நாயே. அப்பாவை மாட்டி விடறியா?''

ரிஷி நங்கென்று மினி தலையில் தட்ட, ஓவென்று அழுகிறாள் மினி.

''ரெண்டு பேரும் சண்டை போட்டீங்கன்னா பேசாம வீட்டுக்கு போக வேண்டியதுதான். ஒண்ணும் கிடையாது.'' குரு கடுகடுக்க, பிள்ளைகள் இருவரும் மௌனமாயினர். மினி மனதிற்குள் கறுவிக் கொள்கிறாள்.

'இரு வீட்டுக்கு போனதும் அம்மாகிட்டே சொல்றேன்.'

மறுபடியும் தேடல் தொடர்ந்தது. தெய்வத்தை தேடி பக்தன் அலைவதைப் போல் ஒரு அலைச்சல். பாதி தூரம்

வந்திருக்க மாட்டார்கள். ஒரு வீட்டில் கேட் திறந்திருக்க ''அப்பா அங்க பாரு'' மினி கிசு கிசுக்க, ஒரு கறுப்பு டாபர்மேன் தன் குட்டிகளோடு அலைந்து கொண்டிருந்தது. ''அப்பா எல்லா குட்டியுமே கறுப்பா இருக்குப்பா. 'டாபர் சூப்பர்பா' வாங்கிக்கலாம்பா. அவுங்க வீட்டிலே போய் பேசுவோம்பா.''

''வாடி நாம போய் உள்ளே இருக்கற அங்கிளை கூப்பிட்டு பார்ப்போம்.''

''டேய் நாய் இருக்குடா பத்திரம்.'' குரு பதட்டமாகக் கூற,

''இல்லேப்பா கட்டிதான் வச்சிருக்குப்பா நம்ம கூப்பிட்டா வீட்டு சொந்தக்காரங்க வந்தா சரியாயிடும்.'' ரிஷி கத்தியபடி உள்ளே வேகமாக ஓட, அடுத்த நிமிடம் சுவற்றில் பட்ட பந்து போல் திரும்பி ஓடி வருகிறான்.

''அப்பா ஓடுங்க. நாயை கட்டலைப்பா. செயின் லூஸா தான் இருக்கு. குட்டி எல்லாம் வேறு ஓடி வருது.'' அவன் சொல்லிக் கொண்டே வேகமாக ஓட, குருவும் ஓடு கிறான். மினி ஓ.. என்று அழுதவாறே அலறி ஓடிவரு கிறாள்.

இன்னும் இருட்டு அதிகமாக இறங்கி இருக்க, நாய்க்கு பயந்தவாறே மூவரும் தலை தெறிக்க ஓடி வருகின்றனர்.

இரவு அதிகமாகிவிட, தினமும் சோம்பேறித்தனமாக படுத்தவாறே அந்த வழியாகப் போகும் யாரோ ஒருவரைப் பார்த்து வள்ளென்று கத்தும் தெரு நாய்களுக்கு, மூவரும் ஓடி வருவது சந்தோஷத்தை ஏற்படுத்த, ஒரு வித சந்தோஷத்தோடு மூவரையும் துரத்த ஆரம்பித்தது. கடிப்பது



போல் அவை குரைத்தபடி வர, மினி இன்னும் பெரிதாக அலறுகிறாள். குருவின் கை, கால்கள் தந்தி அடிக்க, குழந்தைகளைக் கூட கண்டு கொள்ளாமல் வேகமாக ஓடுகிறான் குரு. ரிஷி 'அப்பா... அப்பா' என்று கூப்பிட்டபடி ஓடிவர சற்று பின்னால் ஓடி வந்த மினியின் ஸ்கர்ட்டைப் பிடித்து இழுத்துக் கிழித்தது ஒரு தெரு நாய். மினி ஓவென்று அலற, குரு கை கால்கள் நடுங்க, நிற்கிறான். ரிஷி கீழே கிடந்த கல்லைத் தூக்கி அடிக்க, நாய்கள் சற்று பின் வாங்கிப் போக, மினிக்குக் கையைக் கொடுத்து அவளையும் இழுத்துக் கொண்டு ஓடுகிறான் ரிஷி.

ஒரு வழியாக வீட்டிற்குச் சென்றபோது மூவரும் பலமாக இரைத்தபடி வருகின்றனர். ஒருவாறு காலிங் பெல்லை அடித்துவிட்டு படியில் சற்று சாய்ந்து உட்கார்ந்தபோது, கதவு திறந்தது.

''என்னடா பப்பியை வாங்கிட்டீங்களா?''

''அவரு எங்கே வாங்கப் போறாரு. தெரியாம எடுக் கணும்னா எப்படி எடுக்க முடியும்? நல்ல வேளை தப்பிச்சு வந்தோம். அந்த நாயெல்லாம் கையை கடிக்க வருது.''

''என்னங்க... என்னென்னவோ சொல்றான். நாயை வாங்கப் போனீங்களா, திருடப் போனீங்களா?''

''வந்தவுடனேயே நீ ஆரம்பிச்சிட்டியா? பாவம் குழந்தை களாச்சேன்னு கூட வந்தேன் பாரு. எனக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்'' குரு கத்த...

''சரி சரி வாங்க. ஏதாவது சாப்பிடுங்க. குழந்தைகளுக்கும் கணவனுக்கும் சாப்பாடு போட்டுவிட்டு, எல்லோரும் சாப்பிட்டு முடித்தவுடன் மெதுவாக பேச்சை ஆரம்பிக்

கிறாள்: உங்க இன்னொரு பிரண்ட் பாலு இருக்காரே அவரு கிட்டே கேளுங்களேன். அவர் நாயை வாங்கி வந்து தரார்னு சொன்னாங்க.''

''அப்படியா எனக்குத் தெரியவே தெரியாதே.''

மினி அழுதுகொண்டே நடந்ததைக் கூற,

''என்னங்க இது. இப்படியா செய்வாங்க? வீடு வீடா தெருத் தெருவா போவீங்க. கையிலே கோணி எதுக்கு?'' கீதா எரிச்சலோடு கேட்க,

''நைஸா அமுக்கிப் போட்டுக்கத்தான்'' ரிஷி சிரித்தபடி கூற,

''சே! என்னங்க இப்படி எல்லாம் பிஹேவ் பண்றீங்க. ஆபீசர் மாதிரியா நடந்துக்கறீங்க?''

''நீங்க யாரும் பேசாதீங்க. போய்ப் படுங்க.'' குரு கத்தி விட்டு அப்பாடா என்று அமருகிறான். இன்னும் அந்த நாய் பயம் மனதை விட்டுப் போகவில்லை. உடல் வேறு லேசாக நில நடுக்கத்தில் பூமி அசைவது போல் அசைந்தது. 'அப்பா இன்னிக்கு தப்பி வந்ததே பெரும்பாடுதான். அப்பா... எத்தனை பெரிய வாய். அதில் எத்தனை எத்தனை பற்கள். விளையாட்டாகக் கடித்தால்கூட அரை கிலோவிற்கு மேலேயே சதை போய்விடும்.' உடல் மறுபடியும் தூக்கிப் போட,

''என்னாச்சு? ஏங்க இப்படி? பயத்துலே ஏதாவது...'' கீதா நிறுத்தவும், குழந்தைகள் யாரும் இல்லை என்று நிச்சயித்த பின் அவளிடம் கேட்கிறான்.

''ஏன் மறை கழண்டு போச்சுன்னு சொல்லறியா?''



''நான் ஏதாவது சொன்னேனா என்ன? நீங்களே தப்புத் தப்பா ஏதோ பேசறீங்க? உங்களுக்குள்ளே இருக்கற ரகசியத்தை இப்ப வெளிப்படுத்துவானேன். சில உண்மைகள் தெரியறதுக்கு தெரியாம இருக்கறதே நல்லது.'' கீதா பேசப் பேச,

''என்ன நீ வாய்க்கு வந்தபடி பேசறே?''

''நான் எதுவுமே பேசலே. நீங்க நடந்துக்கறதே ஒரு மாதிரியாதான் இருக்கு. சாதாரண மனுஷனா திங்க் பண்ணி நடந்துக்க மாட்டீங்களா?''

''என்ன அப்படி தப்பா நடந்துகிட்டேன்?''

''என்னவா? நாய்க் குட்டி வாங்க கோணியா தூக்கிட்டுப் போவீங்க? முயல் குட்டியா வாங்கப் போறீங்க? பாதி ராத்திரிலே அந்தப் பசங்களையும் ஏமாத்தி ரோடு ரோடா அலைஞ்சு கடைசியிலே நாய் துரத்தி, வீட்டுக்கு வந்திருக் கீங்க இது தேவையா?''

''பிள்ளைங்க எங்கே?'' என்று மெதுவான குரலில் கேட்டவன்,

''தூங்கறாங்க'' பெண்டாட்டி சொல்ல,

''தேங்க் காட்'' என்றவன், ''த பாரும்மா பிள்ளைகளை ஏமாத்ததான் அந்த கெட் அப். நான் கட்டாயம் வாங்கு வேன்னு நினைச்சுகிட்டு இருந்தாங்க. கொஞ்ச நேரம் ஏமாத்தி அலைய வச்சதுலே இனிமே நாயை வளர்க்கவே முடியாதுன்னு தெரிஞ்சுகிட்டு இருப்பாங்க. நாய் துரத்தின தாலே இனிமே நாயே வேண்டாம்னு முடிவுக்கு வந்திருப் பாங்க. இது தெரியாம என்னை போய் ஏதேதோ பேசித் தொலைக்கறே?''

''எங்களுக்கு நாய் வேண்டும்'' ரிஷி கூற,

தூக்கி வாரிப் போடுகிறது குருவிற்கு.

''எனக்கு பப்பி... அப்பா பொய் சொல்லிட்டீங்க'' மினி ஓவென்று அழுது ஆர்ப்பாட்டம் செய்ய,

'இவர்கள் இருவரும் தூங்கலையா' மலைத்துப் போய் விடுகிறான்.

''இல்லைடா. நாளைக்கு...'' அவன் சொல்லச் சொல்ல,

''வேண்டாம்.. ஏமாத்திட்டீங்க'' ரிஷி கத்துகிறான்.

''வாடி... நாமளே போய் ஏதாவது கிடைக்குமான்னு பாக்கலாம்.''

ரிஷி கூப்பிட, கண்ணீரைத் துடைத்தபடி மினியும் ரிஷியும் கிளம்ப,

''டேய் நாய் துரத்திகிட்டு வரும்.. கடிக்கும்டா.''

''கடிக்கட்டும்'' ரிஷி கத்திவிட்டு ''வாடி'' மினியை இழுத்துக் கொண்டு நகர,

''டேய் நாய்ங்களா? நீங்க ஒண்ணும் போய்த் தொலைக்க வேண்டாம்.''

கீதா எரிச்சலுடன் கத்த.

''போம்மா...'' என்றவாறே இருவரும் நகர முற்பட,

''இது வேண்டாமா?'' என்று ஒரு நாய்க் குட்டியைக் காண்பிக்கிறாள்.

கீதா அன்று சங்கர் எடுத்து வந்தானே அதே நாய்க்குட்டி கண்ணை கண்ணை சிமிட்டிக் கொண்டு விழித்தது.



# 8



''ஹாய் அன்னிக்கு சங்கர் அங்கிள் கொண்டுட்டு வந்தாரே அந்த பப்பிடா'' ரிஷி கூற,

''ஆமா...'' என்கிறாள் மினி.

''ஏய் அந்தப் பப்பியைக் கொடு'' இருவரும் அதைத் தூக்கியவாறே உள்ளே நகர,

''ஏய் என்ன பண்றே நீ?'' குரு சற்று கோபத்துடன் கேட்க,

''தெரியலையா? நீங்க பிராமிஸ் பண்ணதை நான் நிறைவேத்தி வச்சிருக்கேன்'' கீதா சற்று பெருமையாகக் கூற,

''எது இந்த கன்டிரியை வாங்கித் தரேன்னு நான் சொன்னேனா?'' குரு எரிச்சலோடு கேட்க,

''போதும்... ரொம்ப புத்திசாலித்தனமா நடக்கற மாதிரி ஞாபகமா? கன்டிரி கன்டிரின்னு சொல்றீங்களே. இதை ரோட்லேந்தா எடுத்தேன். நீங்க போனவுடனே கட்டாயம் நாய் கிடைக்காதுன்னு தெரியும். அதுக்குதான் உங்க பிரண்டுக்குப் போன் பண்ணேன். உடனே குட்டியோடு வந்துட்டார். ஆயிரம் ரூபா குட்டிக்கு முந்நூறு ரூபாதான் வாங்கிட்டாரு.''

''அடிப்பாவி...'' பொண்டாட்டி சொல்லச் சொல்ல எறிகிறான் குரு.

"நம்மை அப்படி அழ வச்சான். அவன்கிட்டேயா போய் வாங்கினே."

கோபத்தில் பல்லைக் கடிக்கிறான். அதுவும் அந்த தெரு நாய்க்கு முன்னூறு ரூபா கொடுத்தா வாங்கினே. அநியாயம்."

"வீணா பழி போடாதீங்க. அவர் நமக்குவேணா துரோகம் செய்திருக்கலாம். ஆனா நாய்க்குட்டியை வாங்கி விக்கவறர்தானே. அதுதான் கேட்டேன். நமக்கும் காரியம் ஆகணுமில்லே."

கீதா சமாதானம் சொல்ல,

"என்ன காரியம் ஆகணும். பத்து பைசா பெறாத நாய்க்குப் போய் முன்னூறு ரூபாய் கொடுத்து வாங்கிட்டு வந்திருக்கே."

கீதாவுக்கும் ஆத்திரம் வந்தது. மூக்கு உடைத்து சிவந்தது.

ஆத்திரத்துடன் கணவனை உறுத்துப் பார்க்கிறாள்.

"ஐயோ புருசன் கஷ்டப்படுவாரேன்னு வாங்கி வச்சதுக்கு எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும். என்னிக்காவது ஒரு நல்ல காரியம் பண்ணினா புகழ்ந்து பேசியிருக்கீங்களா? உங்க பிரண்ட் மேலே இருக்கற கோபத்தை எம் மேலேயும் நாய்க் குட்டி மேலும் ஏன் காண்பிக்கறீங்க? பொண்டாட்டி எழுநூறு ரூபா மிச்சப் படுத்தி இருக்காளேன்னு கொஞ்சமாவது சந்தோஷம் இருக்கா சே!" கதவை இழுத்து சார்த்தி விட்டு உள்ளே போகிறாள்.



வாயிலில் மினியும், ரிஷியும் பப்பியோடு விளையாடு கிறார்கள்.

"டேய் இதுக்கு ஒரு பேர் வைக்கணும்" மினி ரிஷியிடம் கேட்க, "அதான் ஜிம்மின்னு பேர் இருக்கே."

"சே... நல்லாவே இல்லை. டேய் இது பாப்பா இல்லை கேர்ள்."

மினி கேட்க,

ரிஷி குட்டியை எடுத்து திருப்பிப் பார்க்கிறான். "தெரியலைடீ."

"டேய் கேர்ள்ஆ இருந்தா ரோஸின்னு வைக்கலாம்."

"என்னது ரோஸியா?"

"ஆமாண்டா. பேரு நல்லா இருக்கும்?"

"போடி... பேரே நல்லா இல்லே. போகட்டும் திரி, ரோஸ்னு வேணா வச்சுக்கலாம்."

"போடா" எரிச்சலுருகிறாள் மினி.

"சரி ஆம்பிளையா இருந்தா என்ன செய்வே?"

"ரிஷின்னு வச்சுக்கலாம்" மினி குறும்பாகச் சொல்லி சிரிக்க, அடிக்க கை ஓங்குகிறான் ரிஷி.

"அம்மா பாருங்க ரிஷி அடிக்கிறான்."

"ஏண்டா நாய்களா எப்பவுமே சண்டை போட்டுக் கறீங்க?

''அதுதான் நாயை வாங்கி கொடுத்தாச்சு இல்லே. சண்டை போட்டுகிட்டே இருந்தீங்கன்னா ஒரு நாய் தான் வீட்டுலே இருக்கலாம்'' கீதா கத்துகிறாள்.

அம்மா கத்த, கத்த மினியும் ரிஷியும் மௌனமாக நாய்க்குட்டியைத் தூக்கியவாறே படுக்கை அறைக்கு எடுத்துச் செல்லுகின்றனர்.

''மினி பெட்டுலே படுக்க வைக்காதே. கீழே கோணி போட்டுருக்கேன் பாத்தியா. அதுலே படுக்க வை.'' கீதா சொல்லிவிட்டு நகர,

''சே... இந்த அம்மா ஏண்டி இப்படி இருக்காங்க? அதுவும் பாவம் சின்னகுட்டி தானே.'' ரிஷி கூற, ''ஆமாம்மா'' மினி பதிலுரைக்கிறாள்.

''சரி கதவை மூடு. அம்மாவுக்குத் தெரிய வேண்டாம். பெட்டிலேயே படுக்க வச்சுப்போம்.''

கதவை மூடி சார்த்திவிட்டு, மினி தன் பெட்டிலேயே குட்டியை விட்டுக் கொண்டாள். ''பாவம் இது சாப்பிட்டதோ இல்லையோ தெரியலைடா.'' குட்டி வேக வேகமாக வாலை ஆட்டியவாறே அவள் அருகில் இருந்து கொண்டு அவள் முகத்தைப் பார்த்தது.

''அம்மா கிட்டே கேக்கட்டுமா?''

''வேண்டாம் ஏதாவது திட்டப் போறாங்க. பேசாம பிஸ்கட்டைப் போடுவோம். மேலே அந்த டப்பாவுல இருக்கு பாரு. அதுலேர்ந்து போடு'' மினி கூற, ரிஷி டப்பாவிலிருந்து ஒரு பிஸ்கட்டை எடுத்து நாய்க்கு ஊட்ட,



நாய் வெடுக்கென்று பிஸ்கட்டோடு ரிஷியின் கையையும் சேர்த்து கடித்தது.

''ஸ்... ஆ...'' என்று கத்துகிறான் ரிஷி. நாயா இது பேய், பிசாசு, பூதம் என்று நாய்க்குட்டியின் மண்டை யின் மேல் படால் என்று தட்ட, 'வீல்' என்று நாய்க்குட்டி கத்த,

''சீ பாவம்டா. வாயில்லாத ஜீவன். அதைப் போயா அடிப்பே.'' மினி அதன் தலையைத் தடவிக் கொடுக்க,

''அதுக்காட வாயில்லே. வெடுக் வெடுக்குனு பிடுங்குது. அது போய் பாவங்கறியே சீ'' என்று மறுபடியும் நாய் குட்டியின் தலையில் தட்ட கைகளால் தடுத்தாள் மினி. நாய்க்குட்டி மறுபடியும் ரிஷியின் கையை தாவி பிடித்துக் கடித்தது.

''ஐயையோ அம்மா...'' அலறுகிறான் ரிஷி. ரிஷி பார்ப்பதற்கு சற்று வளர்த்தியாக நல்ல கொழுக் முழுக் கென்று இருப்பவன்.

''அம்மா நாய்க்குட்டி கடிக்குது'' மறுபடியும் அலற,

''ரொம்ப நல்ல பப்பிடா. இது கட்டாயம் வாட்ச் டாக்கா இருக்கும். திருடன் உன்னை மாதிரி குண்டா வந்தா நல்லா பிடுங்கும்'' மினி கூற,

''கேலியா பண்றே?'' ரிஷி எரிச்சலடைய,

''போடா அதையேன் அடிக்கறே? அடிச்சா அப்படித் தான் கடிக்கும்'' என்றவள் நாய்க்குட்டியைத் தடவித் தடவிக் கொடுக்கிறாள்.

"பிஸ்கட் சாப்பிட்டியா தண்ணி வேணுமா? இரு" என்றவள் ஒரு கப்பில் தண்ணீரை ஊற்றித் தர முதலில் மினியையே குறுகுறுவென்று பார்த்த பின் தண்ணீரை நக்கி நக்கிக் குடிக்க ஆரம்பித்தது.

நாய்க்குட்டி கடித்து விட்டதால் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று கைக்கு ஆன்டிபயாடிக் மருந்தை தடவியவாறே, வந்த ரிஷி ஓவென்று கத்துகிறான்.

"ஏண்டி நாயே என் கப்பிலே நாய்க்கு எப்படிடீ தண்ணி வச்சே?"

"என்னடா ரொம்ப குதிக்கறே? வேறே ஒண்ணும் இல்லே. அதான் கொடுத்தேன். அதுக்கு சொந்தக்காரங்க கப்புன்னா ரொம்ப பிடிச்சிருக்கு. எத்தனை தண்ணி குடிச்சிருச்சு பாரு"

"உன்னை உதைக்கணும்..." ரிஷி மினியைப் பார்த்து அடிக்க,

"அம்மா..." மினி கத்த, வள் வள் என்று கத்திய குட்டி நாய் ரிஷியின் படுக்கையில் போய் அமர்ந்து படுக்கையை நனைத்தது. பார்த்த மினி விழுந்து விழுந்து சிரிக்கிறாள்.

"நல்லா வேணும்... என்னை அடிச்சே இல்லே. கண்ணா அவன் தலகாணியிலேயும் கொஞ்சம் உச்சா போடா" மினி கொஞ்ச,

"அட நாயே அம்மா பாத்தா... இப்ப என்ன செய்யறது?" ரிஷி குட்டியை அடிக்கப் போக கட்டிலுக்கு அடியில் இருந்த சின்ன சந்தில் நுழைந்து ஒளிந்து கொண்டது நாய்க்குட்டி. கட்டிலின் கீழே படுத்துக் கொண்டு சின்ன சந்தில் கை



விட்டுப் பார்க்கிறான் ரிஷி. 'நாய் கிடைக்கட்டும். இன்று கைமா பண்ண வேண்டியதுதான்' பல்லைக் கடித்தவாறே கையால் துழாவுகிறான்.

"டேய் ரிஷி பத்திரம்டா. மறுபடியும் கையைக் கடிச்சிரப் போவுது" மினி கூற,

ரிஷி டக்கென்று கையை இழுத்துக் கொண்டான்.

'சே... ஏன் இந்த நாய் இப்படி பண்ணுது? மினி பெட்டிலே போகக் கூடாது.. சே' என்று மனதிற்குள் புலம்பியவன் தன் பெட்ஷீட்டை கீழே போட்டான். பெட்டின் மேல் போடப்பட்டிருந்த தடித்த படுக்கை உறையில் கொஞ்சம் இறங்கி இருந்தது. படுக்கை நனையவில்லை. உறையையும் கீழே தூக்கிப் போட்டான் ரிஷி. கையை வாஷ் பேசினில் கழுவிக் கொண்டான். வெறும் படுக்கையில் போய் படுத்துக் கொண்டான்.

'அம்மா காலையில் பார்த்தால் திட்டுவார்களே என்ன செய்வது? பப்பியே வேண்டுமென்றே செய்தது என்று சொல்லி விடலாம்.' நினைத்தபடி படுத்தபோது படுக்கை லேசாக நாற்றமடிப்பது போல் தோன்றியது.

"சே!" அவன் நொந்து கொண்டபோது "டேய் ஒரே நாத்தம்... ஐயோ" என்று மினி முகத்தை மூடிக் கொண்டு தூங்குகிறாள்.

இரவு செல்லச் செல்ல இருவரும் விளக்கை அணைத்து விட்டு படுத்து விட்டனர். நடு இரவில் யாரோ மினியின் தலையணையில் வந்து ஒட்டிக் கொண்டது போல் தோன்ற, மினி பயந்து போய் கண் விழித்துப் பார்க்கிறாள். பப்பி தான்

தன் மெத்தென்ற உடலை மினியின் முகத்தருகே வைத்தவாறு ஒண்டிக் கொண்டிருந்தது.

''ஏன் பப்பி இப்படிச் செய்தே? நல்லவேளை ரிஷி தூங்கிட்டான். இல்லே உன்னை வெட்டிப் போட்டிருப்பான்'' பப்பியிடம் கொஞ்சுகிறாள் மினி.

மறுநாள் காலையில் கீதா வந்து கதவைத் தட்டியபோது ரிஷி போய் தூக்கக் கலக்கத்தில் கதவைத் திறக்க,

''ஐயையோ என்னடா இது படுக்கையெல்லாம் நாய் லெட்டின் போய் வச்சிருக்கு.'' கத்துகிறாள் கீதா.

## 9



''எங்கே அது?'' கீதா கத்துகிறாள். ரிஷியின் முதுகில் பளாரென்று ஒன்று வைக்க அவன் ஓவென்று அழுகிறான்.

''எங்க அந்த நாய்?'' கீதா மறுபடியும் கத்த, நாய்க்குட்டி கட்டிலுக்கு அடியில் போய் புகுந்து கொண்டது.

''அதுக்கு தான் நாய் பேய் எதுவும் வேண்டாம்னேன். கேட்டீங்களா? படுக்கையை நனைக்கறதை பாத்து கிட்டு இருந்தியா?'' மறுபடியும் ரிஷியின் முதுகில் ஒன்று வைக்க,

''இல்லைம்மா என்னை ஏமாத்திட்டுப் போயிருச் சும்மா.''



''சனியன் அந்த நாய் வேண்டாம். கொண்டு போய் விட்டுரலாம்.''

கீதா சொல்ல, சொல்ல மினி ஓவென்று அழுகிறாள்.

''முடியாது. நாய் எனக்கு வேணும்.''

''முதுகிலே வச்சேன்னா தெரியும். படுக்கை எல்லாம் பாழ் பண்ணி வைக்குது. அதைப்போய் வீட்டுலே வச்சுப் பாங்களா?''

''போம்மா நாய்க்குட்டி எல்லாத்தையும் டிரெயின் பண்ணனும். இதெல்லாம் பெட்டுன்னு அதுக்கு எப்படித் தெரியும்'' மினி கத்துகிறாள்.

''நான் ஸ்கூலுக்குப் போயிட்டு வரவரைக்கும் நாய் இங்க தான் இருக்கணும்'' மினி கூறி விட்டுச் செல்ல,

இதற்குள் நாயிடமிருந்த விரோதத்தை மறந்து விட்டவனாய் ரிஷி ஒரு பிளாஸ்டிக் பந்தை உள்ளே போட நாய் காலால் தள்ள, சுவாரசியமாக விளையாடிக் கொண்டு இருக்கிறான் ரிஷி.

''அம்மா பப்பி இருக்கட்டும்மா. நாம சொல்லிக் கொடுத்திடுவோம்.''

''சரி சரி முதல்ல பல்லை விளக்கிட்டு, குளிச்சு, சாப்பிட்டு விட்டு ஸ்கூலுக்குப் போற வழியைப் பாருங்க.'' கீதா அதட்ட, பிள்ளைகள் மூலைக்கு ஒருவராக ஓடினர்.

''மம்மி என் பிரண்ட். சுஜா வீட்டுலே மூணு நாய் இருக்கு. அவுங்க எல்லாம் ஸூப்பரா டிரெயின் பண்ணு வாங்க. அதைப் பத்தி நான் கேட்டுட்டு வரேன்'' ரிஷி சொல்லுகிறான்.

"சரி அதை அப்புறம் கேட்டுக்கலாம். கிளம்புங்க."

பிள்ளைகள் கிளம்புகிறார்கள். "பை... அம்மா பப்பியை பத்திரமா பாத்துக்கம்மா." நாயைக் கொஞ்சி, கெஞ்சி, அதைத் தடவிக் கொடுத்துவிட்டு பிள்ளைகள் செல்ல, கீதா ஒரு பெருமூச்சோடு உள்ளே செல்கிறாள். நாய்க்கு பாலை ஒரு கிண்ணத்தில் வைக்கிறாள். முதலில் சற்று பயந்தாலும், பின் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெதுவாக பாலின் அருகில் வந்தது. நக்கி நக்கி கண்களை மூடியவாறே பாலைக் குடித்தது பப்பி.

கீதாவைப் பார்த்து வாலை வாலை ஆட்டியவாறு அவள் புடவையைப் பற்றி இழுத்தது. புடவையை யாரோ இழுப்பது தெரிய, ஒரு நிமிடம் திடுக்கிட்டவள் அடுத்த நிமிடம் நாயைப் பார்த்து புன்னகை புரிகிறாள். வாலை வாலை ஆட்டிக் கொண்டு புடவையை இழுத்தது.

"ஏய்... என்ன செய்யறே நீ?" குட்டியின் தலையைத் தடவிக் கொடுக்கிறாள். எடுத்து மடியில் வைத்துக் கொள்கிறாள். குட்டி மடியில் அமர்ந்தவாறே ஆனந்தமாக கண்களை மூடியது. குட்டியைப் பார்க்க, பார்க்க மனம் குழைந்தது.

'என்ன அழகான நாய்க்குட்டி. இதற்கும் ஒரு பெயர் வைக்க வேண்டும். இது ஆணா பெண்ணா?' யோசிக்கிறாள்.

"என்னங்க இந்த நாய்க்குட்டி ஆணா, பெண்ணா?" கீதா குட்டியைக் கணவனிடம் காண்பித்தவாறு கேட்க,

"இந்த சனியனை எங்கிட்டே கொண்டு வராதேன்னு சொன்னேன் இல்லே" பேப்பரில் மூழ்கி இருந்த குரு கத்த,



"உங்ககிட்டே யார் கொண்டு வந்தா? இது மேலா, பீமேலா பாருங்கன்னு சொன்னேன். அதுகூட பாக்கக் கூடாதா?" கீதா எரிச்சலாகக் கேட்க,

"அந்தக் கருமம் எல்லாம் எனக்குத் தெரியாது. வேற யாரையாவது கேட்டுத் தொலை."

நாய்க்குட்டியைத் திருப்பிப் பார்க்கிறாள். சின்னச் சின்ன பாலூட்டும் சுரப்பிகள் போல் இருக்க, இது பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். இது பெயர்... என்ன வைக்கலாம். யோசிக்கிறாள் ரீது... சட்டென்று அந்தப் பெயர் மனதிலாட,

"ரீது... ரீது குட்டி... ரீதும்மா" கொஞ்ச ஆரம்பிக்கிறாள்.

"ரீது..." குட்டி தன் குண்டு கண்களால் அவளையே பார்த்தது.

"ரீது... தீது..." என்று செல்லம் கொஞ்சவும் அது வள் வள்ளென்று குரைத்து தன் சந்தோஷத்தைக் காண்பித்தது.

"அட போக்கிரி. இத்தனூண்டு இருக்கே. அதுக்குள்ளே குரைக்கிறியா?" என்று கன்னத்தில் தட்டுகிறாள்.

பின் மெதுவாகக் கீழே விடுகிறாள். "போ... போய் விளையாடு" சொல்லிவிட்டு கணவனிடம் வந்தவள் சற்று ஆத்திரத்துடன் கணவனைக் கேட்கிறாள்.

"ஏங்க உங்களுக்கே தெரிய வேணாம். பாவம் சின்ன குட்டி. அதைப் போய் ஏதோ விரோதியைப் பார்க்கற மாதிரி பார்த்து சண்டை போடறீங்க?"

''விரோதியா... அதுக்கும் மேலடீ அந்த சனியன். தெருநாயைக் கொண்டு வந்து முந்நூறு ரூபா கொடுன்னு கேட்டானே. நீ எப்படி அதை வாங்குவே? அன்னிக்கு அத்தினி திட்டினே. இன்னிக்கு கொஞ்சி ஒழுகறே?''

''ஆரம்பிச்சிட்டீங்களா? உங்க பிரண்ட் தானே யோக்கியமாகவா இருப்பாரு? ஒழியட்டும். ஆபீஸ் கிளம்பற வேலையைப் பாருங்க.''

சொல்லிவிட்டு, கணவனுக்கு டிபனைக் கொடுத்து விட்டு மதியம் சாப்பாட்டைக் கட்டுகிறாள். இதற்குள் எந்த ஷர்ட்டைப் போடலாம் என்று பார்த்துவிட்டு ஒவ்வொன்றாக கீழே தள்ளியவன் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு குளிக்க கிளம்புகிறான்.

அவன் கீழே தள்ளிய ஷர்ட்டில் நாய்க்குட்டி வந்து அமர்ந்தது. அங்கங்கே ஷர்ட்டுகளை நனைத்துவிட்டு இன்னும் ஒரு ஷர்ட்டை அசிங்கப்படுத்தியது. பின் எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு அதன் மேல் படுத்து உறங்க ஆரம்பித்தது. குளித்துவிட்டு வந்தவன் ஷர்ட்டின் மேல் பட்டன் இல்லாமல் இருப்பதைப் பார்த்ததும் எரிச்சல் உற்றான்.

'சே... இதை தைச்சு வைக்கக் கூடாது. ஏதாவது கேட்டா, எனக்கு சொன்னீங்களா? உங்க ஷர்ட் உங்களுக்குத்தான் அக்கறை இருக்கணும்' என்பாள் பெண்டாட்டி. முணு முணுத்துக் கொண்டே வேறு ஷர்ட்டாவது எடுத்துப் போட்டுக் கொள்ளலாம் என்று அறையினுள் நுழைந்தவன், ஆச்சரியப் படுகிறான். அவனுடைய எல்லா ஷர்ட்டிலும் குட்டி மூத்திரத்தை பேய்ந்து ஈரமாக்கி இருந்தது. இன்னு



மொரு ஷர்ட்டில் டூ பாத்ரூம்.. சே என்று எரிச்சலோடு கத்துகிறான் குரு.

''கீதா... ஏய் கீதா... இங்க வா... வந்து இந்த கண்றாவியைப் பாரு.''

''ஏங்க உங்களுக்கு வேலை வெட்டி ஒண்ணும் கிடையாதா? எதுக்கு இப்படி கத்தித் தொலைக்கறீங்க?''

''ஆமாண்டி நான்தான் வேலை இல்லாமல் வீணா பேசறேன். நீ ரொம்ப ஒசத்தி.''

''எதுக்கு இப்ப திடீர்னு உண்மையைப் பேசறீங்க?''

''ஆமாண்டி எனக்கு இது ரொம்ப தேவை. உன் நாய் பண்ணிய வேலையைப் பாரு. இத பாரு இனிமே இங்க வீட்டுலே வச்சுக்கற வேலை எல்லாம் வேணாம். மரியாதையா குடுத்துட்டு வா.''

''ஏங்க. ஏதாவது ஒண்ணு பிடிவாதமா நினைச்சுகிட்டு அதே பிடியா நின்னுகிட்டு இருக்கீங்க? பிள்ளைங்க நூறு தடவை சொல்லிட்டுப் போயிருக்காங்க. இதைக் கொண்டு போய் விட்டுட்டா. அவ்வளவுதான் என்ன நடக்குமோ தெரியாது.'

''அப்படியா ஏன் பேச மாட்டே? நீ வச்சதுதான் சட்டம்னு ஆயிடுச்சு. அது செஞ்சு வச்ச வேலையைப் பாரு'' அவன் காண்பிக்க, முதலில் பார்த்தவள் பிறகு பக்கென்று சிரித்து விடுகிறாள்.

''உனக்கு சிரிப்பா இருக்கா?'' குரு எரிச்சலுடன் கேட்க,

''பின்னே ஒரு ஷர்ட் எடுத்தவர் எல்லாத்தையும் எதுக்குக் கீழே போட்டீங்க.''

''ஆமாண்டி இந்த சனியன் இருக்குன்னு யாருக்குத் தெரியும்? இப்படி வீடெல்லாம் அசிங்கப்படுத்தும்னு யாருக்குத் தெரியும்? சனியனை கட்டிப் போட்டு வை.''

''என்னங்க இப்படி சொல்லறீங்க? அதைப் போய் கட்டுவாங்களா? பாவம் இல்லே.''

''அப்ப ஒரே இடமா போட்டு வை.''

''இல்லைங்க அது டிரெய்ன் பண்ணனும். டிரெய்ன் பண்ணா சரியாயிடும். உங்களை எல்லாம் அனுப்பின பின் அதுதான் பண்ணப் போறேன்.''

''அதை பண்றயோ இல்லையோ. என் துணியை முதல்ல வாஷுக்குக் கொடு. நாளைக்குப் போட்டுக்கறதுக்கு ஒண்ணுமே இல்லை'' சொல்லிவிட்டுக் கணவன் செல்ல, கணவனின் சட்டையை எடுத்து அலசியவள் வாஷிங் மெஷினில் போட்டு விட்டுத் திரும்ப நாய்க்குட்டி அவளின் புடவையையும் மினியின் கவுனையும் போட்டுக் கொண்டு கண்களை மூடி உறங்கிக் கொண்டு இருந்தது.

''ஏய்...'' முதலில் ஆத்திரம் வந்தாலும் பின் யோசிக் கிறாள். சின்னக் குழந்தை தானே அதற்கென்று படுக்க ஒரு படுக்கை எல்லாம் தயார் செய்ய வேண்டும். பின் பாத்ரூம் போக டிரெய்ன் பண்ணி விட்டால் சரியாகிவிடும். பழைய தலையணையை எடுத்து சின்ன படுக்கை போல் தைத்து



குழந்தைகள் படுக்கும் அளவுக்கு அருகில் இருக்கும் பக்கத்து அறையில் ஒரு மூலையில் போடுகிறாள்.

அதற்கென்று தண்ணீருக்கு ஒரு கப்ல, பால், சாதம் சாப்பிட ஒரு சின்ன தட்டு எல்லாம் ரெடி செய்து முடித்து நாய்க்கும் பால், பிஸ்கட் போன்றவற்றை சாப்பிடக் கொடுத்து விட்டு, மாலை டிபன், இரவு சமையல் என்று முடிக்கவே மணி ஐந்தைத் தொட்டது.

வரும்போதே ''அம்மா... பப்பி எங்கே?'' என்று கேட்டவாறே ஓடி வந்தது குழந்தைகள். சின்ன பந்தை போட்டு, அதன் முன்னால் ஓடி அதை பிடிக்க வைத்து என்று பிள்ளைகள் குதித்துக் கொண்டிருந்தன.

குரு சரியாக ஐந்தரை மணிக்கு வந்தான். வந்தவன் முகம் கை, கால் கழுவி உடை மாற்றி டிபனை சாப்பிட்டு அடுத்த அறைக்கு வந்தவன், ஏதோ காலில் கொழ கொழ வென்று தட்டுப்பட்டு சறுக்கிவிட சறுக்கி பொத்தென்று விழுந்தான்.

## 10



பந்து குரு விழுந்த அறையை நோக்கி ஓடி வர ரிஷி அதை எடுக்க ஓடி வருகிறான். சரியாக அந்த நேரம் பார்த்து குரு சறுக்கி விழ, ரிஷி சிரித்தபடி கத்துகிறான்.

''ஏய் மினி வா. அப்பா அழகா ஸ்கேட் பண்றாருடி.''

''எங்கேடா?'' வேகமாக ஓடி வந்த மினி எட்டிப் பார்க்கிறாள்.

''ஐயையோ ஷேம் ஷேம் அப்பா டூ பாத்ரூமை மிதிச்சிட்டாரு.''

அவள் ஓவென்று கத்தி குதூகலிக்க, கீதா ஓடி வருகிறாள்.

''ஐயையோ என்னது அப்பா விழுந்திட்டாரு. சிரிக்கிறீங்களா? போங்க'' பிள்ளைகளைத் துரத்திவிட்டு கணவனிடம் கேட்டு, அவன் எழுந்திருக்க உதவி செய்கிறாள்.

''ஆமாண்டி பிள்ளையும் கிள்ளி விட்டுட்டு தொட்டிலையும் ஆட்டற கதையா இது? அந்த நாய் சனியன் வேண்டாம்னு சொன்னேன் இல்லே. எம் பேச்சை கேக்கலை இல்லை. இப்பப் பாரு வீடு பயங்கர அசிங்கமாவுது. நானும் ஏதாவது ஒரு விதத்துலே அடிபட்டுகிட்டு இருக்கேன்'' அவன் கத்த,

''இருங்க இன்னிக்கு டிரெய்ன் பண்ணிடறேன்'' கீதா சற்று பதிவிசாகக் கூற,

''கிழிச்சே.'' என்கிறான் குரு.

அடுத்த மூன்று நாட்களும் பிள்ளை, பெண், பெண்டாட்டி மாற்றி மாற்றி நாய்க் குட்டியை பால்கனியில் வைத்துக் கொண்டு ''ச்சு போ... ஸ்... ஸ்...'' என்று சத்தம் போட்டு காண்பித்து எதை எதையோ செய்கிறார்கள். நாய்க்குட்டி அவர்கள் செய்வதை எல்லாம் தன் குண்டு கண்களால் வேடிக்கை பார்த்துவிட்டு, உள்ளே வந்ததும் மூத்திரத்தைப் பெய்கிறது.



கீதாவிற்கே அலுத்து விட்டது. ''என்னடா இது வேணும்னே இப்படிப் பண்ணுது?''

''இல்லை ஆன்ட்டி. அது யூரின் போன ஒரு துணியை இங்கே போட்டு வச்சிங்கன்னா அது இந்த இடத்துலே வந்து போகும்.'' நாய் வளர்க்கும் ரிஷியின் நண்பன் கூறுகிறான்.

அன்றும் நாய்க்குட்டி குருவின் ஒரு பனியனை அசிங்கம் செய்துவிட அதைத் தூக்கிக் கொண்டு போய் பால்கனியில் போட்டாள் கீதா.

''எம் பனியனை ஏன் இங்கே போட்டே?'' பார்த்த குரு கத்த, அவன் சிவந்த முகத்தையும், கத்தின தோரணையையும் பார்த்தவள், சற்று கூட பயப்படாமல் அலட்சியமாகப் பேசுகிறாள். ''உங்க பனியனைப் பார்த்தா தான் அது பாத்ரூமே போவுது. பொல்லாத பனியன். இதை விட்டுட்டு வேற போடுங்க.'' கீதா அலட்சியமாகப் பேச குரு கோபமாக உள்ளே போகிறான்.

ஒரு வழியாக முயன்று முயன்று பால்கனியில் போக ஆரம்பித்தது நாய்க்குட்டி. கிட்டத்தட்ட மூன்று வார போராட்டம். காலையும், மாலையும் குழந்தைகளும், கீதாவும் த்சு... த்சு... என்று கத்திக் கொண்டே இருந்தார்கள். இவர்கள் கத்துவதை எல்லோரும் வேடிக்கை பார்க்க, கீதாவோ குழந்தைகளோ வெளியே வந்தால் எல்லோருமே 'த்சு.. த்சு' என்று கேலி பேச ஆரம்பித்தார்கள்.

ஒரு முறை கீதா மார்க்கெட்டுக்குக் கிளம்பிச் செல்லும் போது, அந்த வழியில் நின்றிருந்த இளைஞர்கள் 'த்சு.. த்சு'..' என்று கேலி பேச ஆரம்பிக்க,

"உச்சு போம்மா..." இளைஞர்கள் கேலி பேச, எரிச்சலோடு திரும்பிப் போகிறாள். அந்தக் கோபம் மொத்தத்தையும் குருவின் மேல் தான் காண்பிக்கிறாள்.

"அது உள்ள யூரின் போனா என்ன? நீங்க பண்ண ஆர்ப்பாட்டத்தில் நான் அதை பால்கனிக்கு கொண்டு போய் நிக்க வச்சேன். இப்ப என்ன பாத்து உச்சு போம்மாங்கறாங்க பொறுக்கி பசங்க" வெடிக்கிறாள் கீதா.

குருவும் பதிலுக்கு எரிச்சலோடு கத்துகிறான். "நான்தான் நாயே வேண்டாம்னு சொன்னேன் இல்லே. நீதான் கட்டிக்கிட்டு அழுதே இல்லே. இதுவும் வேணும் இன்னமும் வேணும்?"

இருவரும் கர்புர்ரென்று சண்டைபோட, குட்டி தன் உருட்டை கண்களால் வேடிக்கை பார்த்தது. பிறகு என்ன நினைத்ததோ என்னவோ குருவைப் பார்த்து வள் வள்ளென்று கத்த, கீதா ஆனந்திக்கிறாள். குட்டிக்கு தன் மேல் எத்தனை ஆசை?

"நல்லா சுத்து... என் செல்ல குட்டி. ஒரு நாள் வெடுக்குனு புடுங்கு. அப்பதான் அங்க புத்தி வரும்" சிரித்தபடி கீதா சொல்ல, கத்திய குட்டியையே பயத்தோடும், கீதாவை எரிச்சலாகவும் பார்த்தவாறு உள்ளே போகிறான் குரு.

எல்லா கோபமும் போய் குட்டி மேல் அன்பு பெருக எடுத்து அணைத்தவாறே மடியில் வைத்துக் கொள்கிறாள்.

ஒரு வழியாக பால்கனியில் போக ஆரம்பித்தபின் "போம்மா பால்கனி பக்கமே போக முடியலே. ஒரே நாறுது" பெண்ணும் பிள்ளையும் குறைபாட,



"குட்டி அதைத்தான் டாய்லட்டா யூஸ் பண்ணுது. கொஞ்சம் தண்ணி கொட்டுங்க" என்கிறாள் கீதா.

பிள்ளைகள் ஒரு சின்ன பக்கெட் பிடித்து வந்து தண்ணீர் முழுவதையும் ஊற்ற மொத்த தண்ணீரும் கீழே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவரின் தலை மேல் விழுந்தது.

"என்ன மேடம் இது?" எரிச்சலோடும், ஆத்திரத்தோடும் அவர் கீதாவைப் பார்த்துக் கத்த, கீதாவும் குழந்தைகளும் சட்டென்று மறைந்து போயினர். வெளியில் ஏதோ சப்தம் கேட்கிறதே என்று வந்த குரு மாட்டிக் கொண்டான்.

"சார் கொஞ்சம் கீழே இறங்கிவாங்க." அவர் குருவைக் கூப்பிட்டு குரு கீழே வந்ததும் கண்டமேனிக்குப் பேச குருவும் கோபத்தோடு மேலே போகிறான்.

"ஏண்டி அறிவிருக்கா உனக்கு? எதுக்கு தண்ணியை பால்கனியில கொட்டினீங்க? அந்த ஆள் தலைமேலே எல்லாம் தண்ணி."

"ஸ்... சத்தம் போடாதீங்க. குட்டி அங்கதான் பாத்ரூம் போகுது. ஒரே நாத்தம் அடிக்குதுன்னு பசங்க சொன்னாங்க. அதான் தண்ணி கொட்டினேன்."

"ஐயையோ. அந்த ஆளுக்கு தெரிஞ்சா அவ்வளவுதான். நான் செடிக்கு தண்ணி கொட்டினேன்னு சமாளிச்சேன். அவன் திரும்பி கூப்பிடறதுக்குள்ளே வந்து தொலை. இந்த நாயாலதான் இத்தனை பிரச்சனையும்" கத்துகிறான் குரு.

இரண்டு மூன்று மாதங்கள் சென்றிருக்கும். குட்டி சற்று பெரிதாகி விட்டது. வாலை வாலை ஆட்டிக் கொண்டு வள் வள்ளென்று கத்திக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தது.

''குழந்தை என்னமா குரைக்குது.'' கீதா ஆனந்தப் படுகிறாள். கீதாவின் தலைப்பை பிடித்துக் கொண்டு போகாத குறையாக அவள் போகுமிடமெல்லாம் செல்லுகிறது. குழந்தைகளைக் கண்டால் குதித்துக் கொண்டு செல்கிறது. குருவைக் கண்டால் மட்டும் ஏனோ ஆவதில்லை.

அன்று நாய்க்கு கழுத்தில் பட்டை கட்டி சற்று மெல்லிய சங்கிலி போட்டு வெளியே அழைத்துச் செல்லும்போது ஏக குஷியாக இப்படியும் அப்படியும் ஓடுகிறது. சற்று பெரிய நாயைப் பார்த்து குழந்தைகள் பயந்து ஓட பின்னும் குஷியாக குரைத்தபடி ஓடுகிறது ரீது.

''ஏய் ரீது வா'' கீதா பின்னாலேயே ஓடுகிறாள்.

''மிஸஸ் குரு. இட் ஈஸ் நாட் பேர். நாயை கண்ட்ரோல் பண்ணி வைங்க'' பக்கத்து பிளாட் மேரி பளிச்சென்று முகத்துக்கு நேரே பேசுகிறாள்.

அன்று வாக்கிங் அழைத்துச் செல்ல நாயை, அழைத்துக் கொண்டு அவள் கிளம்ப குதித்துக் கொண்டு கிளம்புகிறது ரீது.

''ரீது கத்தக் கூடாது. ஒழுங்கா போயிட்டு ஒழுங்கா வரணும்.'' எச்சரிக்கை செய்துவிட்டு அழைத்துச் செல்கிறாள் கீதா. முதலில் சமத்துப் பெண்ணாக வந்த ரீது, பக்கத்து வீட்டுக்கு வந்த புது விருந்தாளியைப் பார்த்த உடன் குலைக்க ஆரம்பித்தது.



''ஹேய்... சூ...'' கீதா அடக்கியும் பிரயோசனமில்லை. வந்த விருந்தாளி சற்று நடுங்குகிற டைப் என்று தோன்றியதும், ரீது வேக வேகமாக வாலை ஆட்டியபடி, இன்னும் பலமாகக் குரைக்க, காலை வாக்கிங் போலாம் என்று வந்தவர் திரும்பி பயந்தபடி நடக்க, சங்கிலியை இழுத்துக் கொண்டு ஓட, ஆரம்பித்தது ரீது. கீதா நடுங்கிப் போகிறாள். வந்தவர் ஓட, நாலு கால் பாய்ச்சலில் குஷியாக கத்தியபடி ஓடியது ரீது.

''ரீது... ரீது... வா.. நில்லு...'' கீதா கத்தியும் பிரயோசனமில்லை.

அன்று அலுவலக விடுமுறை என்பதால் வீட்டில் படுத்திருந்த குரு அவசரம், அவசரமாக லுங்கியைச் சரி செய்தபடியே அவளின் குரல் கேட்டு ஓடி வருகிறான்.

''ஏய் பிடிங்க அதை'' கீதா கத்த எரிச்சலோடு நாயின் பின் ஓடுகிறான். வெகு நேரம் வரை இப்படியும் அப்படியும் ஓடிய நாய், கடைசியில் அவன் கையில் மாட்டியது. சங்கிலியை இழுத்துப் பிடித்துக் கொண்டான். ''இதை வெளியே அழைச்சுகிட்டு போகாதேன்னு சொன்னேனா இல்லையா?'' கத்துகிறான்.

இதற்குள் பக்கத்து வீட்டு விருந்தாளி சற்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மெதுவாக எழுந்து வர அவரைப் பார்த்தவுடன் இன்னும் சந்தோஷத்தில் ஏறி எகிறி குரைக்க, பயந்து போன மனிதர் பக்கத்தில் இருந்த நீச்சல் குளத்தில் பொத்தென்று விழுந்தார்.

''ஐயையோ'' கத்தியவாறே கீதா அவரை தூக்க ஓடுகிறாள். கீதா ஓட, என்னவோ ஏதோ என்று எண்ணி நாயும் நாலு கால் பாய்ச்சலில் ஓட ஆரம்பித்தது.

''ஏய்... சூ... நில்லு'' குரு கத்துகிறான். அடக்கிப் பார்க்கிறான். அது ஓடும் வேகத்திற்கு ஓட முடியாமல், தவிக்கிறான். பெஞ்சில், மரத்தில், வீதியில், கல்லில் என்று எக்கச்சக்கமாக முட்டி மோதி ஏய் ஏய் என்று கத்தியவாறே ஓடுகிறான். ப்ளாட்டுகளின் முடிவில் கேட் வந்துவிட சட்டென்று கேட்டில் முட்டிக் கொண்டு கீழே விழுகிறான். சங்கிலி கையை விட்டுப் போக ஆனந்தமாக குதிரை போல் ஓடியது. வந்தவர், போனவர் எல்லாம் அலறி ஓட, ஓர் அரை மணி நேரம் இந்த ஆட்டம்தான்.

இதற்குள் பிள்ளைகள் பள்ளியிலிருந்து வந்து இறங்க ரிஷி ஓடி வந்து நாயைப் பிடிக்கிறான்.

''உள்ளே கொண்டுட்டு வா.'' அம்மா கேட்க, அதை இழுத்து வந்தான் ரிஷி.

''அப்பப்பா நாயா இது பேய். என்ன அமர்க் களப்படுத்துச்சு'' குரு சுள்ளென்று எறிந்து விழுகிறான்.

அடுத்த நாள் பிளாட் மீட்டிங்கில் நாயை வெளியே கொண்டு வரக்கூடாது என்று ஸ்டிரிக்டாகச் சொல்லி விட்டார்கள். வீட்டிற்குள்ளே வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். ஜனங்கள் நடமாடும் நேரத்தில் அது வெளியே வரக்கூடாது. நீச்சல் குளத்தில் விழுந்தவருக்கு முதலுதவிக்கு ரூபாய் வேறொருவரை துரத்தியதற்கு பெனால்டி என்று கிட்டத்தட்ட ஐநூறு ரூபாய் செல வானது.

குருவிற்கு ரீதுவைப் பிடிக்கவே இல்லை. ஒரு நாய் இன்னொரு நாயைப் பார்த்தால் கர் புர்ரென்று கத்துமே அது



போல் ரீதுவைப் பார்த்தாலே கத்துகிறான் குரு. ரீது எதையும் லட்சியம் செய்யவில்லை.

''அம்மா எல்லோரும் தூங்கினப்புறம் நைட்லே ரீதுவை வெளியே அழைச்சுகிட்டு போகலாம்மா'' என்கிறான் மகன்.

அன்றையிலிருந்து ரீதுவை பால்கனிக்கு தள்ளி விடுகிறாள் கீதா.

''போ... போய் வேடிக்கை பார். நைட் தான் வெளியே போக முடியும்...'' ஒரு இரண்டு நாட்கள் சென்றிருக்கும். விடாமல் அழைப்பு மணி அழுந்த 'யாராயிருக்கும்' யோசித்தவாறே கதவைத் திறக்கப் போகிறாள் கீதா. மிக்ஸியில் பாதி மாவை அரைத்துக் கொண்டிருந்தாள். பிள்ளைகள் பள்ளிக்கு அனுப்பியாகி விட்டது. புருஷனும் அலுவலகத்திற்கு அனுப்பியாகி விட்டது. இந்த பன் னண்டு மணிக்கு யார் வந்து இப்படி காலிங் பெல் அழுத்த றாங்க?

கதவைத் திறந்தவளின் எதிரில் ஒரு பதினாறு வயது இளம் பெண் நித்யா நின்று கொண்டிருக்கிறாள். கையில் ஒரு தட்டில் கேக்கும், ஒரு டம்ளரில் ஆரஞ்சு ஜூஸும் கொண்டு வந்திருந்தாள்.

''ஏய் நித்தி வாட் ஹேப்பண்ட். சாப்பிடற தட்டோடு வந்துட்டே?'' சிரித்தபடி கீதா கேட்க,

''ஆன்ட்டி எக்ஸாமுக்கு படிச்சுகிட்டே சாப்பிட்டுகிட்டு இருந்தேன். எங்க வீட்டு மேலே இருந்த பால்கனியில் இருந்து என் பிளேட்டைப் பார்த்து குரைக்கிறது உங்க நாய்.

என் பிளேட்டைப் பார்த்து ஜொள் விட்டு கேக்கு மேலே எல்லாம் ஜொள். ஐஸிஸைகூட எச்சை பண்ணிடுச்சு. இதை யார் சாப்பிடறது? தயவு செய்து இனிமே பால்கனிக்கு பக்கத்துலே நாயை விடாதீங்க.''

நித்யா சொல்லச் சொல்ல தலை சுற்றியது கீதாவிற்கு. அன்றையிலிருந்து கீழே யாரும் இல்லை என்றால்தான் பால்கனியிலே நாயையே விட்டாள். ரீதுவிற்குத் தான் எதுவுமே பிடிக்காமல் போனது. எங்கும் சுதந்திரமாக அழைத்துப் போவதில்லை. சுதந்திரமாக பார்க்க அனுமதி இல்லை. சே! என்று வெறுத்துப் போய் விட்டது. கோபத்தில் பட்டினி கிடந்தது. பால் சாப்பிடவில்லை. பிரட்டையும் சாப்பிடவில்லை. முட்டை, சாதம் எதையும் முகர்ந்து பார்க்கக் கூட மறுத்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை லேடீஸ் கிளப் மீட்டிங்கிற்குப் போன கீதா வருத்தமா நாயைப் பற்றி பேச, ''கீதா நானே உங்க வீட்டுக்கு வந்து நாயைப் பார்க்கிறேன். எங்க வீட்டுலே பத்து பெட்ஸ் இருக்கு. அதுக்கு என்ன உடம்புன்னு நான் சொல்லிடுவேன்.'' வீட்டிற்குத் திரும்பும்போது கீதா மாதர் சங்கத் தலைவியையும் கூடவே அழைத்து வருகிறாள்.

குரு வந்து கதவைத் திறந்தவன், இவள் பின்னால் நின்றவளைப் பார்த்து முகத்தைச் சுருக்கிக் கொண்டு உள்ளே போனான். குழந்தைகள் டி.வி.யில் ஆழ்ந்திருந்தன. சோபாவில் அமர்ந்திருந்த ரீது நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்து கீதாவை நக்கிக் கொடுத்து விட்டு தலைவியைப் பார்த்து குரைத்தது.



''கீதா இது நாயான்னு டௌட்டா இருக்கு. என்ன பிரீட்?'' என்று கேட்கிறாள் தலைவி.

''ஏதோ பாரின் பிரீட்னு சொன்னாங்க. எதுன்னு தெரியலை?'' கீதா கௌரவமாக சொல்ல,

''ஸாரி கீதா. இந்த நாய்க்கு லேசா கழுதை ஜாடை அடிக்குது'' என்கிறாள் தலைவி.

## 11



கேட்டுக் கொண்டிருந்த குரு வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கிறான். 'வேண்டும் நன்றாக வேண்டும். நாயை வைத்துக் கொள்ளாதேன்னு எத்தனை சொன்னேன்? எல்லாம் திமிர்.'

கீதாவின் முகம் விழுந்தது. மெதுவாக எழுந்து வந்து மாதர் சங்கத் தலைவியை அனுப்பி விட்டு முக வாட்டத்தோடு நிற்கிறாள்.

''பெரிய இவ. இவ வீட்டு நாய் மட்டும் இங்கிலாந்து பிரைம் மினிஸ்டர் டோனி பிளேயர் வீட்டு நாய்ன்னு நினைப்பு. சரியான பொறாமை பிடிச்ச நாய் அவ. எந்த பொருள் காட்டினாலும் சரி அவ வீட்டுலே இருக்கிறது தான் பெஸ்ட்டுன்னு சொல்லுவா. திமிர் பிடிச்ச நாய்'' மாதர் சங்கத் தலைவியை ஒரு பாட்டம் திட்டித் தீர்த்து விட்டாள் கீதா.

''ஏதோ நாய் உடம்புக்கு மருந்து சொல்வான்னு பார்த்தா இப்படி திமிரா பேசிட்டுப் போரா.''

''அம்மா அதெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா. அதை உள்ளேயே அடைச்சு வைக்கறோம் இல்லே. அதுதான்'' ரிஷி கூற.

''நீ மத்தியானம் கூட்டம் குறைஞ்ச உடனே வெளியே அழைச்சிட்டு போ. நாங்க ஸ்கூல் விட்டப்புறம் வந்து அழைச்சிட்டுப் போறோம்.'' ரிஷி கூற, தலை ஆட்டு கிறாள்.

அன்று மதியம் பிள்ளைகளே ரீதுவை சங்கிலி கட்டி இழுத்துப் போனார்கள். அவர்களுடன் ஆனந்தமாக ஓடிய ரீது ஒவ்வொரு மரம் மட்டையிடமும் நின்று முகர்ந்து பார்த்து ஒன், டூ என்று பாத்ரூம் போய்விட்டு சுதந்திரமாக சுற்றி விட்டு சில பேரைப் பார்த்து குரைத்து விட்டு இப்படியும் அப்படியும் ஓடுகிறது.

இதற்குள் ரிஷியின் நண்பன் பாலாஜி வந்துவிட இருவரும் பேசிக் கொண்டிருக்கின்றனர். இன்னொரு நண்பன் விட்டல், மது என்று வந்துவிட அரட்டை கிளம்பியது. மதுவின் தங்கையும் வந்துவிட மினி அவருடன் பேசிக் கொண்டிருக்கிறாள். சங்கிலி கையை விட்டுப் போனதே தெரியவில்லை.

அவர்கள் விடை பெற யத்தனிக்கும்போதுதான் மினி கவனிக்கிறாள்.

''டேய் ரிஷி நாயைக் காணோம்டா'' இருவரும் பதறிப் போய் தேட,



''ஏய் லூசு நாயை எங்கேடி விட்டே? உங்கிட்டே தானே சங்கிலியைக் கொடுத்தேன்'' எரிந்து விழுகிறான் ரிஷி.

மினி ஓவென்று அழத் தொடங்குகிறாள்.

நண்பர்கள் ஆளுக்கு ஒரு மூலையில் தேட, கடைசியில் மது தான் கத்துகிறான்.

''ஏய் ரிஷி இங்க பாரு உங்க ரீது டூ பாத்ருமைத் தின்னுது'' மது காண்பித்த இடத்தில் ரீது சுவாரசியமாய் சாப்பிட்டுக் கொண்டிருக்க,

''ஐயையே'' என்கிறாள் மினி. மற்ற நண்பர்களின் முன்னால் அவமானப்பட்டவர்களாய் நிற்கிறார்கள் மினியும் ரிஷியும்.

மண்டையில் ஒன்று வைத்து அதை பிடித்து இழுத்து வந்து, வைத்தபோது,

''டேய் ரிஷி அதை அடிக்காதே. எல்லா நாயும் இந்தக் கண்றாவி எல்லாம் சாப்பிடும். அதுக்கு சாப்பாடு பத்தலே நிறைய சாப்பிடக் கொடு'' என்று பாலாஜி சொல்லிவிட்டுப் போக,

''எனக்கு மானமே போச்சு. ஸ்கூல் முழுவதும் எம் பேர் ரிப்பேர் ஆயிடும். அதுவும் அந்த மது இருக்கானே. சரியான ஓட்ட வாய். இத்தனை நேரம் ஒரு அம்பது பேர் கிட்டே சொல்லி இருப்பான். எல்லாம் இந்த சனியனாலே'' என்று ரீதுவின் தலையைத் தட்ட ரீது சட்டென்று தன் காலை நீட்டி ஷேக் ஹேண்ட் தர, ரிஷி உருகி விடுகிறான்.

''பாவம்டா. அது குழந்தைடா. அதுக்கு என்ன தெரியும்? அது பாத்ரூம்னு தெரியுமா?'' மினி பரிந்து கொண்டு பேசுகிறாள்.

''நீ சொல்றதும் சரிதான். அதுக்கு என்ன தெரியும்?'' என்று சொல்லி ரீதுவின் தலையைத் தடவ, அது தன் அழகான நாக்கால் ரிஷியின் கையை நக்கியது.

''ஐயையே பப்பி ஷேம். நான் க்ரீனைத் தொட்டுக்கறேன். அது எதையோ சாப்பிட்டுட்டு உன் கையை வேறு நக்கிடுச்சு'' சொல்லிவிட்டு மினி விருட்டென்று உள்ளே ஓடி மறைகிறாள்.

அம்மாவிடம் விஷயத்தை உடைத்திருப்பாள் போலிருக்கிறது. ரிஷி நாயோடு வரும்போதே கீதா கத்துகிறாள்.

''முதல்லே அதை பாத்ரூமுக்குக் கூட்டிகிட்டு போய் அது வாயைக் கழுவு. ரிஷி உன் கையை சோப்புப் போட்டுக் கழுவி டெட்டாலைப் போட்டுக் கழுவு'' கீதா சொல்ல,

''அம்மா மினியையும் அனுப்பும்மா.''

''ஒண்ணும் வேண்டாம். சண்டை வரும். நீயே செய்.'' கீதா கத்துகிறாள்.

அன்றையிலிருந்து யாராவது இருக்கிறார்களா என்று பார்த்து பால்கனியில் விடுவாள். மதியம் கீதா வெளியே அழைத்துப் போவாள். மாலை பிள்ளைகள் அழைத்துப் போகும். வீடும் அசிங்கத்திலிருந்து தப்பியது. ஒரு சில பிரச்சனைகள் ரீதுவால் வரத்தான் செய்தன. இருந்தாலும் எப்படியோ சமாளித்துக் கொண்டுதான் இருந்தார்கள். சிறு குழந்தைகளை எங்கே பார்த்தாலும் போதும். சங்கிலியை



அறுத்துக் கொண்டு கடிப்பது போல் ஓடும் ரீது திடீரென்று குலைக்க ஆரம்பித்தால் முகத்தை மேலே கீழே மாற்றி மாற்றி வைத்து குரை குரை என்று குரைத்துத் தீர்த்துவிடும்.

''பெரிய நியூசென்ஸ்'' என்று அக்கம் பக்கத்தினர் புகார் கூட சொல்ல ஆரம்பித்தனர்.

இது டாபர்மேன் கன்டிரி க்ராஸ் என்று யாரோ சொன்னார்கள். ''அம்மா எம்பிரண்ட் சொன்னான். அதுக்கு ஊசியெல்லாம் போடணுமாம். இல்லேன்னா ராபிஸ் வந்திடுமாம்.'' அன்று கணவனிடம் நாய்க்கு ஊசி போடணும் என்று கேட்டபோது ''வேற வேலை இல்லை. நான் எல்லாம் எடுத்துட்டுப் போக மாட்டேன்.''

''நீங்க ஒண்ணும் போக வேண்டாம். எனக்கு பைசா கொடுங்க. கேஸ் தீர்ந்து போச்சு. அப்படியே நாயையும் காட்டிட்டு வரேன்.''

''இந்தா'' என்று நாய்க்கு ஐம்பது ரூபாயும் கேஸுக்கு முந்நூறு ரூபாயும் கொடுத்தான் குரு.

''ஏங்க இது எப்படி பத்தும்?'' கீதா எரிச்சலோடு கேட்க,

''எல்லாம் வெட்னரி ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் காமி. பிரியா செய்வானுங்க. கன்டிரிக்கு துட்டு வேற போலருக்கு.''

தன்னைத் திட்டியதாய் நினைத்துக் கொண்டு கீதா கணவன் அலுவலகம் போன பின், குட்டியைத் தூக்கிக் கொண்டு போகிறாள். ஆட்டோவில் வெட்னரி ஆஸ்பத்திரிக்கு போய் வருவதற்கு அறுபது ரூபாய் கேட்க, ஐம்பது

ரூபாயில் பேரம் பேசி ஆஸ்பத்திரிக்குச் சென்றாள். ஆஸ்பத்திரி மூடிக் கிடந்தது.

"இல்லைங்க. காலைல வர வேண்டிய டாக்டர் லீவு. பத்து மணிக்கு வரவேண்டியவர் காலைலேயே வந்து போயிட்டார். ஆஸ்பத்திரி பன்னிரண்டு மணி வரைக்கும்தான்." மெதுவாக வெளியே சற்று தொலைவில் இருக்கும் கேஸ் ஏஜென்ஸிக்குப் போகிறாள்.

"சிலிண்டர் வர இன்னும் பத்து நாள் ஆகும் மேடம்" என்றவர்கள்,

"அட பப்பிக்யூட்டா இருக்கே" என்று கொஞ்ச, 'வெட்னரி ஆஸ்பத்திரியை மூடி விட்டார்கள்' என்று சொல்ல,

"அட என்ன மேடம் அந்த தயா இருக்கான் இல்லே."

"யாரு..."

"உங்ககிட்டே பேசினான்னு சொன்னீங்க இல்லே. அவன் கிட்டே கேட்டாலே போட்டுடுவானே. ஒரு பத்து ரூபா தள்ளுங்க. போட்டுடுவான்."

கீதாவிற்கு எரிச்சல் வந்தது. எல்லாவற்றிலுமா லஞ்சம்.

"த போறேன்" என்றவள் கேஸ் கடைக்கு அருகில் இருக்கும் தனியார் ஆஸ்பத்திரிக்குப் போகிறாள். அங்க ஒரு டாக்டர் அமர்ந்து நாய், பூனை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்க, டாக்டர் பூனையைப் பரிசோதனை செய்து கொண்டிருந்தார்.

"எத்தனை மாசக் குட்டி?"

"மூணு மாசம் சார்."



"இந்த நாய்க்குட்டியும் உங்களது தானே."

கேட்டதற்கு அமர்ந்திருந்தவன் தலையை ஆட்ட,

"பேரோ, ராபிஸ் எல்லாத்துக்கும் சேர்த்து முந்நூறு ரூபா கொடுத்திடுங்க" என்று சொல்லிக் கொண்டிருக்க, 'அடப்பாவி நாய்க்குட்டியே நான் முந்நூறு ரூபாய்க்கு தான் வாங்கினேன்.' என்று நினைத்தவள் மறுபடியும் அரசாங்க வெட்னரி ஆஸ்பத்திரிக்குப் போகிறாள்.

"ஏம்மா ஒரு தடவை உனக்கு சொன்னா புத்தி இல்லை." அவன் கைகளை ஆட்டி ஆட்டி பேச, அவள் அவமானப் பட்டவளாய் நிற்க, மேசை மேல் உட்கார வைக்கப்பட்ட ரீது வெடுக்கென்று அவனின் கையைக் கடித்தது.

"என்ன மேடம் இது? கடிக்கும்னு சொல்ல மாட்டீங்க?" என்றவன்.

எத்தனை மாதம் என்றெல்லாம் கேட்டு, இரண்டு இன்ஜக்ஷனையும் போட்டான். தன் கைகளை எல்லாம் முதலில் சுத்தம் செய்து கொண்டு கடிபட்ட இடத்தில் மருந்து வைத்துக் கொண்டான். அவனுக்கு லஞ்சமாக பத்து ரூபாய். ஒரு அட்டை ஒன்று கொடுத்தார்கள். அதற்கு பத்து ரூபாய் என்று கொடுத்துவிட்டு, அவள் கிளம்பியபோது ஆட்டோ டிரைவர் முணு முணுக்கத் தொடங்கினான். ஐம்பது ரூபாய் என்று பேசிவிட்டு ஊர் முழுவதும் அலைய வைத்ததாக, சொல்லி வீட்டை அடையும்போது மேலும் இருபது ரூபாய் பிடுங்கிக் கொண்டு போனான்.

'கையில் இருநூற்று அறுபது ரூபாயை வைத்துக் கொண்டு எப்படி கேஸ் வாங்குவது? மறுபடியும் கணவனிடம் பணம்

கேட்டால் நாயை கொன்று போட்டாலும் போடுவான். பார்ப்போம். இன்னும் பத்து நாளைக்குள் நாற்பது ரூபாயை எப்படியாவது சம்பாதிக்க வேண்டியதுதான்.' நினைத்துக் கொள்கிறாள் கீதா.

பிள்ளை வந்தபோதே "நாற்பது ரூபாய் குறையுது. கேஸ் வந்ததுன்னா நான் தொலைஞ்சேன். என்ன செய்யறதுன்னு தெரியலை?" கீதா புலம்ப,

"நீ பேசாம இரும்மா எங்க ஸ்கூல்லே டீச்சர் ஏதோ ஃபண்டுக்கு வேணும்னு கேட்டாங்கன்னு சொல்லி வாங்கித் தந்துடறேன்" என்கிறான் ரிஷி.

அன்று சொன்னபடியே ரிஷி ரூபாயை வாங்கித் தந்துவிட, சந்தோஷமடைகிறாள் கீதா.

அடுத்த நாள் ரிஷியின் டீச்சர் எதேச்சையாக அவனுடைய வீட்டிற்கு வர, பார்த்த கீதாவும், ரிஷியும் திடுக்கிட்டனர்.

## 12



**எ**து நினைத்தார்களோ அதுவே நடந்தது. குருவிற்கு விஷயம் தெரிந்து போய், "இப்போதே நாயைக் கொண்டு போய் விடு" என்று குதிக்கவே ஆரம்பித்தான்.

இத்தனை களேபரத்துக்கும் நடுவில் நாய் நன்றாக வளர்ந்து கொண்டிருந்தது. இவர்கள் நால்வரைத் தவிர ஒரு



ஈ, காக்காவை வீட்டுப் பக்கமே அண்ட விடாமல் குரைத்துத் தீர்த்தது.

"அம்மா என் பிரண்ட் பாலாஜி சொல்றான். இது ஏதோ தெரு நாய் மாதிரி இருக்குங்கறான். நல்ல ஜாதி நாய் கொலைச்சுகிட்டே இருக்காதாம்மா."

"போடா புண்ணாக்கு எங்க பிரண்ட் வீட்டிலே டாபர்மேன் குலைக்க ஆரம்பிச்சா நிறுத்தவே நிறுத்தாது" என்கிறாள் மினி.

"அம்மா நம்ம ரீதுவிற்கு நாளைக்கு பர்ஸ்ட் பர்த் டே தானே. செலிபரேட் பண்ணலாமா?" மினி ஆசையாகக் கேட்க,

"அம்மா அம்மா ப்ளீஸ்" என்கிறான் ரிஷி.

"டேய் வாயை மூடுடா. நாய்க்கு மருந்துக்கே உங்கப்பா என்னை கடிச்சு குதறிட்டார். இப்ப இதுவேற கொண்டாடினா தீர்ந்தேன்."

"என்னம்மா ரீதுவும் நம்ம வீட்டுலே ஒரு மெம்பர் தானே.

"அது பர்த்டே கொண்டாடலைன்னா அதுக்கு வருத்தமா இருக்காது" மினி கேட்க,

"போதுண்டி அதிகப் பிரசங்கி, கிழவியாட்டம் பேசாதே" கீதா கோபித்துக் கொள்கிறாள்.

"அம்மா ப்ளீஸ் கேக்குக்கு மட்டும் காசு கொடுங்க. வேற ஒண்ணும் வேண்டாம். ரிஷி கெஞ்ச "எங்கிட்டே கிடையாது. நீ அப்பாகிட்டே கேட்டுக்க."

அப்பா வந்ததும் பசிப்பதாக அடம் பிடித்து 'கேக் வேண்டும்' என்று சொல்லி மூன்று கூடை கேக்கும் மூன்று கப் ஐஸ்க்ரீமும் வாங்கி வந்தனர். ஏற்கனவே இருந்த இரு கலர் பலூன்களைத் தொங்க விட்டாள் மினி. தன் தொப்பியில் பூ வைச்சு சொருகி ரீதுவுக்குப் போட, ரீது இப்படி அப்படி தலையை ஆட்டி தொப்பியைக் கீழே தள்ளியது.

''நீ பண்றது நல்லா இல்லே. இன்னிக்கு உன் பர்த்டே இல்லே.''

ரீதுவிற்கு ஷாம்பூ போட்டு குளிப்பாட்டி விட்டு துடைத்து விட்டுப் பார்க்கும்போது துண்டு முழுவதும் முடியாக இருந்தது.

நாலைந்து பேன்களும் கூட,

''டேய் இங்கே பாருடா ரீதுக்கு டிக்ஸ் இருக்குடா.''

''ரொம்ப டிக்ஸ் ஆச்சுன்னா கஷ்டமாம்.'' மினி கவலையோடு சொல்ல, அவசரம் அவசரமாக கண்ணுக்குத் தெரியும் டிக்ஸை எல்லாம் எடுத்துப் போட்டு விட்டு பிரண்ட்ஸ் வீட்டிலிருந்து வாங்கி வந்த டிக் பௌடரைப் போடுகிறான் ரிஷி.

''அம்மா அடுத்த மாசம் டிக் பௌடர் வாங்கணும். மறந்துடாதீங்க. ப்ரண்ட்ஸ் வீட்டிலேர்ந்து கடன் வாங்கிட்டு வந்தேன்.'' ரிஷி கூற,

''ஆமாண்டா ஒவ்வொரு செலவா சொல்லுங்க. அந்த உண்ணியை நசுக்காதே. ஒரு பாட்டில்லே கிரசின் வச்சு



அதுலே போட்டாதான் சாகும். இல்லேன்னா வீடு மொத்தமும் வந்திடும்.''

''சரிம்மா'' என்றவர்கள் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்கள். நல்லவேளை குரு இன்னும் அலுவலகத்தில் இருந்து வரவில்லை. மூன்று கூடை கேக்கை வைத்து, அதில் சின்ன மெழுகுவர்த்தி ஏற்றி, ஹேப்பி பர்த்டே பாடி, கேக்கை ரீதுவுக்கு ஊட்ட, கேக்கின் காகிதத்தோடு கேக்கை விழுங்கியது ரீது. அவசரம் அவசரமாக கேக்கை விழுங்கிய பின் இவர்களிடம் இருந்த இரண்டு கூடை கேக்குகளையும் டபக்கென்று பாய்ந்து கடித்து விழுங்கியது.

''டேய் நீதான் எல்லாத்தையும் சாப்பிட்டே இல்லே. அப்ப ஐஸ்க்ரீம் உனக்கு கிடையாது'' மினி நாயிடம் கூறி விட்டு ஐஸ்க்ரீமை அவசரம் அவசரமாக விழுங்க, நாய் ஓடி வந்து அவர் முன் நின்றது. அவளையே பாவமாகப் பார்த்தது.

''அம்மா பாருங்கம்மா இந்த ரீதுவை. கேக்கை எல்லாத்தையும் காகிதத்தோடு முழுங்கிடுச்சு. இப்ப ஐஸ்க்ரீமைக் கொண்டான்னு கேக்குது பாருங்கம்மா'' மினி புகார் செய்கிறாள்.

''சீ... அதுக்கு போடு. அதுக்கு போடாம சாப்பிட்டா வயித்தை வலிக்கப் போகுது'' ரிஷி கூற,

'சே' மினி எரிச்சலோடு ஐஸ்க்ரீம் கொஞ்சம் கீழே வைக்க டபக்கென்று விழுங்கியது. மினி அடுத்த வாய் போடு வதற்குள் மறுபடியும் அவளைப் பாவமாகப் பார்க்க மொத்த ஐஸ்க்ரீமையும் நாய்க்கே கொட்டுகிறாள் மினி. ரிஷியின் நிலைமையும் அதுதான்.

ரீது ஐஸ்க்ரீம் பேப்பரையும் கடிக்க.

''சீ.. இது நாயே இல்லைடி. கட்டாயம் அந்த ஆன்ட்டி சொன்ன மாதிரி கழுதையாதான் இருக்கும்.''

''ஏய் நீங்க வேற பேசாம இருக்க மாட்டீங்க. கொண்டா அந்த காகிதத்தை'' ரீதுவின் வாயிலிருந்து ஐஸ்க்ரீம் கப்பை பிடுங்கப் பார்க்கிறாள் கீதா. அது தராமல் வாயில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. ரொம்ப இழுத்தால் உர்ரென்று சத்தத்தை எழுப்ப, ''அம்மா பத்திரம் கடிச்சிடப் போகுது'' ரிஷி கூற,

''சனியன்ங்க எக்கேடும் கெட்டுப் போங்க'' என்றவாறே உள்ளே போகிறாள் கீதா.

பின்னும் ஆறு மாதம் ஓடியது. ரீது சற்று பெரிய நாயாக அழகான நாயாக மாறியது. தெரியாதவர் ஒருவரைக்கூட உள்ளே விட மறுத்தது.

ரீதுவை நினைத்தாலே மினிக்கும் ரிஷிக்கும் ரொம்பப் பெருமை. கீதாவுக்கும் கூட சற்று கர்வம்தான். பக்கத்து வீட்டில் நுழைபவர்கள்கூட ''சார் அந்த வீட்டு நாய் இருக்கா பயமா இருக்கு?'' என்று கேட்டபடி வந்தனர்.

வழக்கம்போல் ரீது வாக்கிங் அழைத்துச் சென்றபோது எதிரே கீழ் வீட்டு மனிதர்கள் வளர்க்கும் முரட்டு சேவல் வந்து கொண்டிருந்தது. சாதாரணமாக ரீது வரும்போது எதுவுமே இருக்காது. அதுவும் ஒரு ரவுண்ட் அடித்து விட்டு எல்லோரையும் பார்த்து குரைத்து விட்டு வரும். இன்று திடீரென்று தன் உயரத்துக்கு ஒன்று வெள்ளையாக, சிவப்புக் கொண்டையோடு 'கொக் கொக்' என்று ஆட்டிக்



கொண்டு நிற்பதைப் பார்த்ததுமே ரீது பேசாமல் நின்று விட்டது.

''டேய் இந்த சேவலை ரீது புடிச்சிரப் போகுதுடா. அப்புறம் வம்பாயிடும். கீழ் வீட்டு அங்கிள் பயங்கர மானவர். உண்டு இல்லைன்னு ஆக்கிடுவார்'' என்ற மினி 'சூ சூ' என்று சேவலை விரட்ட 'லொள்' என்று மெதுவாகக் குரல் கொடுத்தது ரீது.

மினி துரத்தியதால் வந்த கோபத்தில் கொக்கரக்கோ என்று கத்தியவாறு மினியைக் கொத்த வந்தது சேவல்.

''ஏய் சீக்கிரம் வாடி ஓடிடலாம்'' ரிஷி கூப்பிட இவர்களுக்கு முன்னால் நாலு கால் பாய்ச்சலில் ரீது வீட்டில் இருந்தது. 'சேவல் கத்துகிறதே' என்று எட்டிப் பார்த்த கீழ் வீட்டு மாமா, மற்றும் ஏதோ வேலையாக அங்கே நின்றிருந்தவர்கள் எல்லாம் சேவல் கொக்கரித்து நாய் ஓடியதைப் பார்த்து சிரிக்க, ரிஷி எரிச்சலோடு கத்துகிறான்.

''அம்மா இந்த நாயே நமக்குத் தேவையில்லை. இது கழுதைம்மா. கொண்டு போய் விட்டுடுங்க'' வீட்டிற்கு முதலிலேயே ஓடி வந்து விட்ட ரீது, ரிஷி அடிக்கப் போகிறான் என்று பயந்து கீதாவின் பின்னால் ஒளிந்து கொண்டது. அடிக்கப் போனவனைத் தடுக்கிறாள் கீதா.

''பேசாம இருடா.''

''என்னம்மா பேசாம இருக்கறது. மானமே போச்சு. சேவலைப் பாத்து இது உள்ளே ஓடி வந்து ஒளிஞ்சுகிட்டு இருக்கு.''

''டேய் பேசாம இருடா. அது சேவலை எங்கே பார்த்திருக்கு? திடீர்னு பார்த்தவுடனே பயம் வந்திருக்கு. போகட்டும் விடு.''

அவள் சமாதானப்படுத்த 'உன்னை' மிரட்டி விட்டுப் போகிறான் ரிஷி. சரியாக ஒரு வருடத்திறகு முன்பு இது குட்டியாக இருக்கும்போதே வேறொரு நிகழ்ச்சி நடந்து சரியாக அவமானப்பட்டிருக்கிறாள் கீதா. நாய் வாங்கிய புதிதில் சின்னதாக குரைத்ததே தவிர பிறகு குரைக்க வில்லை. லொள் லொள் என்று இவள் குரைக்க கற்றுக் கொடுக்கிறாள்.

வந்த புதிதில் ஒரு நான்கைந்து நாட்கள் இப்படியே குரைத்துக் காண்பிக்க, அன்று ஏதோ வேலையாக குருவைப் பார்க்க வந்தவர்களின் கண்களில் பட்டு கேள்விக்கு இடமாகி விட்டாள். நண்பர்களே சற்று போரடித்தால் 'லொள் லொள்' என்று குருவைக் கூப்பிட்டு விளையாடுவார்களாம். குரு இதைச் சொல்லி வருத்தப்பட்டபோது கீதா கூனிக் குறுகிப் போனாள்.

அன்று வெகு நாட்கள் ஒலிக்காத சங்கு ரிப்பேர் செய்யப்பட்டு ஒலிக்கத் தொடங்கியது. ரீதுவும் ஊவென்று பெரிதாக ஒலி எழுப்ப சங்கு நின்றபோதும் இதன் ஓலம் தனியாகக் கேட்டது.

''இதோ பாருங்க மிஸஸ் கீதா. உங்க நாய் உங்களுக்கு உசத்தியாக இருக்கலாம். அதுக்காக கண்ட நேரத்தில் எல்லாம் ஊளையிட்டு எல்லோருக்குமே பயமா இருக்கு. உங்க நாயை கண்ட்ரோல் பண்ணி வையுங்க'' சுற்றி இருப்பவர்கள் எச்சரிக்கை செய்தனர்.



பின்னும் ஆறு மாசம் ஓடிப் போனது. ரீது வீட்டு விலக்கு ஆனது. வீடு முழுவதும் ரத்தக் கறை. ''ஐயையோ என்ன இது என்று பதைத்த கீதா ஒரு துணியை கிழித்து தரையைத் துடைக்கலானாள்.

''ஏய் கீதா அதை சோபாவுலே ஏத்தாதே. வீடு எல்லாம் ரத்தம் பாரு.'' கீதா கொஞ்சம் பஞ்சை எடுத்து வால் பகுதியில் வைத்து கட்ட, ஒரே நிமிடத்தில் வால் பகுதியைக் கடித்து பஞ்சை சின்னா பின்னமாக்கிப் போட்டது ரீது. மூன்று நாட்களும் கீதா பக்கெட்டும் துணியுமாக நாய் பின்னாலேயே அலைகிறாள்.

'ஏய் ஒரு இடமா இரு' ஒரு இடத்தில் இருக்க வைத்தால் குரைத்து குரைத்து அடுத்த பிளாட்டில் இருப்பவர்கள் எட்டிப் பார்க்க, ஒரு அறையில் பூட்ட மறுபடியும் குரைக்கிறது. கொஞ்சம் ஏமாந்தபோது கதவைப் பிராண்டி, ரூமை விட்டு வெளியே வந்து குரைத்து குரைத்து நாலா பக்கமும் ஓட, துடைத்து துடைத்து கீதா சோர்ந்து போனாள். நாயை மதியம் எங்கும் வெளியில் அழைத்துச் செல்ல வில்லை. குருவின் அறையில் போய் அசிங்கப்படுத்திவிட்டு வந்தது ரீது.

அன்று மாலை குழந்தைகள் வந்தபோது துடைக்கும் துணியும் கையுமாக தலை வலி தைலத்தை தடவியவாறே அமர்ந்திருந்தாள் கீதா.

''டேய்.. என்னால முடியலே. டூ பாத்ரூம் எதுவுமே நான் எடுக்க மாட்டேன். ஆளுக்கு ஒரு கை துடைங்க'' கீதா கேட்க பிள்ளைகள் மூக்கை மூடியவாறே எடுத்துப் போட்டனர்.

அடுத்த நாள் "என்னடா இப்படி ஆயிட்டே இருக்கு. வீடு மொத்தமும் அசிங்கம் பண்ணி வச்சிருக்கு" கீதா கேட்க,

"அம்மா பொட்டை நாய்க்கெல்லாம் தேர்ட்டீன் டேஸ் வரைக்கும் ப்ளீட் ஆகும். எம்பிரண்ட் சொன்னான்." ரிஷி கூறக் கூற பயந்து போனாள் கீதா.

'ஐயோ இன்னும் பதிமூணு நாளைக்கு இதை வைத்துக் கொண்டு எப்படி சமாளிப்பது? நாயும் வேண்டாம், பேயும் வேண்டாம்.' அவள் நினைத்தபோது, பின்னும் மூன்று நாட்கள் ஓடிப் போயின. ரீது பால்கனியில் போய் நின்று கொண்டிருக்க, கீழே நான்கைந்து இளவட்ட நாய்கள் நின்று குரல் கொடுக்கிறது. கொஞ்சமாகக் குரைக்கிறது. ஸ்டைலாக ஊளையிடுகிறது.

என்னவோ ஏதோ என்று எட்டிப் பார்த்த கீதாவிற்கு திக்கென்றது. அவள் பிளாட்டுக்குக் கீழே நாலைந்து நாய்கள் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு எச்சில் படிய நிற்கிறது. பார்த்துவிட்டு உள்ளே திரும்பிய குரு தலையில் அடித்துக் கொள்கிறான்.

"உன் அழகான பொண்ணுக்கு லவ்வர்ஸ். இந்த ஜூலியட்டை தேடி எத்தனை ரோமியோ நிக்கறானுங்க பாரு கருமம். கட்டாயம் அசோசியேஷனிலே நம்பளை காலி பண்ண சொல்லப் போறாங்க. எரிச்சலோடு அவன் பேசியபோது,

"போதுங்க நாயும் பேயும் வேணாம். கொண்டு போய் எங்காவது விட்டுருவோம். நாயும் வேணாம் பேயும் வேணாம்" மறுபடியும் புலம்புகிறாள் கீதா.



"சரி பிள்ளைகளுக்கு தெரிஞ்சிடப் போகுது. அவுங்க வரதுக்கு முன்ன கொண்டு போய் விட்டுடறேன்" என்றவாறு நாயைத் தேடுகிறான். நாயைக் காணவில்லை.

## 13



நாயை எங்கேயும் காணவில்லை. "எங்கங்க போயிடும் இங்கதான் ரூம்லே இருந்தது" ஒவ்வொரு அறையாகத் தேடுகிறான். எங்கேயும் காணவில்லை.

"பால்கனியிலே தானே நின்னுகிட்டு இருந்தது." குரு கேட்க,

"தெரியலையே" என்கிறாள் கீதா.

ஒவ்வொரு அறையாக இண்டு இடுக்கு விடாமல், சந்து பொந்துகளைத் துளைத்து துளைத்து துழாவி ம்.. ஹூம்.. எங்கே போயிருக்கும் அது?

கொஞ்ச நேரம் சென்றிருக்கும் பிள்ளைகளே திரும்பி வந்து விட்டனர்.

"என்னப்பா சீக்கிரம் வந்துட்டீங்க" என்ற ரிஷி முகம் கழுவி உடை மாற்றி அம்மா கொடுத்த டிபனையும் பாலையும் முழுங்கிவிட்டு, "அம்மா ரீது எங்கே?" என்று கேட்கிறான் ரிஷி.

"வாசல்லே நாலைஞ்சு நாய்களை பாத்தியா?" கீதா கேட்க,

''பாத்துட்டு இப்பதான் விரட்டி விட்டுட்டு வரேன். என் பிரண்ட் பாலாஜி சொன்னான். ஆம்பளை நாயெல்லாம் வீட்டையே சுத்தி சுத்தி இருக்காம். ரீதுவைக் கவனிச்சுக்க ஒடிடப் போறதுன்னு சொன்னானே.''

வயதுக்கு மீறி பையன் பேசும் பேச்சைக் கேட்டவள் கணவனை ஏறெடுத்துப் பார்க்கிறாள். கணவன் தலையில் அடித்துக் கொள்கிறான்.

''அம்மா ரீது எங்கேம்மா? வேற டாக்கோட மேட் பண்ணனும்மா. இல்லைன்னா ஒடிடுமாம்.'' சர்வ சாதாரணமாக அவன் சொல்லச் சொல்ல எரிச்சல் வந்தது.

அந்த காலத்தில் இதது சொல்லலாம் சொல்லக்கூடாது என்றார்கள். இப்போது எதுவுமே இல்லை. எல்லாமே சிதறு தேங்காய்தான். பிள்ளைகளுக்கு ஐ க்யூவும் அதிகம். எத்தனை விஷயங்களை தெரிந்து வைத்து தொலைத்து இருக்கிறான்.

''ரீதுவைக் காணோம்டா'' குரு சொல்ல சட்டென்று அப்பாவையே திரும்பிப் பார்க்கிறான்.

''போங்க டாடி கேலி பண்ணாதீங்க. இங்கதான் எங்கயாவது இருக்கும். இதற்குள் மினியும் வந்துவிட ரீது இல்லை என்று தெரிந்ததும் டிபனைக் கூட தொடாமல் ரீது, ரீது என்று புலம்பி அழுகிறாள் மினி.

''ஏய் சனியனே கம்முனு இரு. இனிமே வீட்டுக்குள்ளே அசிங்கம் பண்ணின நான் எடுக்க மாட்டேன்.'' கீதா எச்சரிக்க,



''நீ ஒண்ணும் செய்ய வேண்டாம். நாங்களே பார்த்துக்கறோம்'' என்கிறாள் மினி.

''ஆமா கிழிச்சீங்க'' என்கிறாள் கீதா.

ஆனால் பிள்ளைகள் அவள் வார்த்தையைக் கேட்காமல் தேட ஆரம்பித்தன. மினி உள்ளும், ரிஷி வெளியேயும் தேடினார்கள். ரீது போன சுவடு தெரியவில்லை.

''அம்மா நீங்களும், அப்பாவும்தான் ஏதோ பிளான் பண்ணி ரீதுவை கொண்டு போய் விட்டுட்டீங்க. பாவம் ரீது எங்கே அழுதுகிட்டு இருக்கோ'' மினி பெரிய மனுஷியாகக் கூற,

''டாடி நீங்க சுத்த மோசம். நம்ம வீட்டிலே வளர்த்த ஜீவன் தானே டாடி. இப்படிக் கொண்டு போய் யாராவது விடுவாங்களா? அது பாவம் இல்லே.''

''இத பாருங்கடா நாங்க விடலே. அதுவே காணோம்னு தேடிகிட்டு இருக்கோம்.''

மினியும், ரிஷியும் வீடு முழுவதும் தேடினார்கள். மனதிற்கு எதுவும் போதுமானதாக இல்லை. திருப்தி இல்லை. அப்பாவும் அம்மாவும் ஏதோ செய்து விட்டார்கள் என்று தோன்றுகிறது. எப்படிக் கண்டுபிடிப்பது? பாவம் ரீது புது மனிதர்களிடம் போய் எப்படி இருக்கிறதோ? இது குலைக்கிறது என்று அவர்கள் அடித்து விட்டால், மனதில் பலவித எண்ணங்களோடு வேதனையோடு அமர்ந் திருந்தனர்.

ரிஷியும், மினியும் பிளாட்டின் வாயிலில் உள்ள தோட்டத்தில் அமர்ந்து கொண்டு வேதனையோடு எங்கோ

பார்த்துக் கொண்டிருக்க, வழக்கம் போல் அவன் நண்பன் பாலாஜி வருகிறான்.

''டேய் என்னடா ரெண்டு பேரும் உம்முனு உக்காந்துட்டு இருக்கீங்க?'' மினி பிழியப் பிழிய அழுகிறாள்.

''எங்க ரீதுவைக் காணோம்.''

''சரி என்னோட வா தேடலாம்.'' ரிஷியும் மினியும் சேர்ந்து சைக்கிளின் பின்னால் ஏறிக் கொள்ள, பாலாஜி சைக்கிளை ஓட்டுகிறான். ஒவ்வொரு மூலையைக் கூட விடாமல் தேடுகின்றனர். ரீதுவின் சுவடே காணோம். வெள்ளையாக, கறுப்பாக மரக்கலரில் எத்தனையோ நாய்கள் உருண்டையாக, உயரமாக, நீள வாட்டில் எல்லாம் இருக்கும்போது ரீதுவை மட்டும் காணவில்லை.

மினி அழுகையை நிறுத்தவே இல்லை. ரிஷியும் லேசாக அழ ஆரம்பித்தான்.

''டேய் கிடைக்கும்டா எதுக்கு அழறே?'' நண்பன் தேற்றுகிறான்.

''எங்க பேரண்ட்ஸ்தாண்டா நாயை எங்கோ போட்டுட்டாங்க.''

''அப்படி இருக்காது.. டாகுக்கு ப்ளீடிங் ஆச்சு இல்லே. அந்த ஸ்மெல்லுக்கு நிறைய ஆம்பிளை நாய் வருமாம். அதுனால ஏதாவது ஒரு ஆம்பிளை நாயோட உங்க வீட்டு நாய் ஓடிப் போயிருக்குமோ என்னவோ.''

''சே... சே... ரீது ரொம்ப நல்ல நாய். அது மாதிரி எல்லாம் செய்யாது'' கண்ணீரைத் துடைத்தவாறே மினி கூற,



''இல்லேப்பா எங்க மாமா வெட்னரி டாக்டர். அவருதான் இதையெல்லாம் சொல்லி இருக்காரு. கொஞ்ச நாள் ஆனா தானா திரும்பி வரும்'' பாலாஜி சொல்லச் சொல்ல மௌனமானான் ரிஷி.

இருந்தாலும் வீட்டில் உள் நாட்டு போர். ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வதில்லை. குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதும், வீட்டிற்கும் வருவதும் ஒரு சுரத்தில்லாமல் இருந்தது. மினி பாதி நேரம் அழுது கொண்டே இருக்கிறாள்.

இரவில் புருஷனிடம் தன் கவலையைத் தெரிவிக்கிறாள் கீதா.

''என்னங்க குழந்தைங்க ரெண்டு பேரும் சுரத்தில்லாம இருக்காங்க. அதுவும் மினி அழுதுகிட்டே இருக்கா சரியா சாப்பிடறதில்லே.''

''அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே? நானா நாயைக் கொண்டு போய் விட்டேன்'' குரு ஆத்திரப்பட,

''உங்களை சொல்லலை. எப்படியாவது நாயைத் தேடி கண்டு பிடிங்க.''

''கொஞ்ச நாள்ல எல்லாம் சரியா போயிடும் பேசாம இரு.''

''இல்லேங்க எனக்கே ஒரு மாதிரி இருக்கு. பின்னாடியே வரும். அழகா குரைக்கும். ஒரு மனுஷங்களை உள்ளே விடாது. வெளியே போகணும்னா பூட்டைக்கூட பூட்ட வேண்டாம். வீட்டை அப்படியே திறந்து போட்டுப்

போகலாம். பக்கத்து வீட்டு பிரமீளா கூட புலம்பினாங்க. உங்க ரீது இருந்தவரைக்கும் அத்தனை ஸேப்டியா இருந்ததுன்னு சொன்னாங்க.''

பெண்டாட்டி சொன்னபோது பிடிக்காததுபோல் இருந்தாலும் உண்மை அதுதான். எத்தனையோ முறை சாவியை எங்கேயோ வைத்து விட்டு சாவி எங்கே சாவி எங்கே என்று தேடி இருக்கிறான். அதற்கு என்ன புரியுமோ இங்கேயும் அங்கேயும் ஓடிவிட்டு சாவியை வாயில் கவ்விக் கொண்டு வரும். ஷூ போட்டானென்றால் சாக்ஸை வாயில் கவ்வியவாறு வரும். கீழே பேப்பர் போட்டு விட்டுப் போனால் அதையும் வாயில் கவ்விக் கொண்டு வரும். வாலை ஆட்டியபடியே ஆள் உள்ளே வந்தாலே செல்லமாகக் குரைத்து குரைத்து மேலே விழுந்து பிடுங்கி 'ஏய்.. சூ... சூ' என்று குரு துரத்தினாலும் விடாது. சந்தடி சாக்கில் காலடியை கையை நக்கி விட்டுப் போகும்.

கீதா வந்தால் குதித்துக் குதித்து வாலாட்டும். கை கால் முகம் எல்லாவற்றையும் ஒரு சுறுசுறுப்போடு நக்கும். மடியில் ஓடி வந்து படுத்துக் கொள்ளும். கீதா பார்த்து விட்டால் கீழே உருண்டு புரண்டு பார்க்கிறாளா என்று பார்த்து வித்தை காண்பிக்கும். குழந்தைகள் வந்து விட்டாளே இன்னும் குதிதான். குரைத்து குரைத்து இருவரும் கொஞ்சி தடவும் வரை விடாது. அவர்கள் விளையாடும் போது கூட போய் நின்று கொள்ளும். பந்து விழுந்தால் வீட்டிற்குள் எடுத்துக் கொண்டு ஓடி வந்து விடும்.



''அம்மா பாரும்மா இந்த ரீதுவை பாலை தூக்கிட்டு வந்துடுச்சு. அதைக் கொடுக்கச் சொல்லும்மா'' மினி குற்றம் சொல்லும் பாவனையில் அம்மாவிடம் முறையிடுவாள். ரிஷி ஓடி வருவாள். ''ஏய் பாலைக் கொடு'' என்று கேட்க,

அது ஒவ்வொரு அறையாக ஓடி கண்ணா மூச்சி ஆடும். கஷ்டப்பட்டு பிடித்து பந்தைக் கீழே போடச் சொன்னால் போடாது. அதன் வாயை பிடித்துக் கொண்டு பந்தை வெளியே எடுத்துப் போவான் ரிஷி. ஒருமுறை அப்படி செய்தபோது, மறுபடியும் எகிறி அவன் கையில் இருந்த பாலை பிடுங்கி வாயில் வைத்துக் கொண்டது. வாயில் கை வைத்தால் கர் புர்ரென்று உறும, குழந்தைகள் எல்லோரும் பயப்பட, கிட்டத்தட்ட அன்று முழுவதும் ஆட்டம் காட்டியது.

இப்படி குடும்பத்தோடு ஒருவனாக இருந்து விட்டு இன்று ரீது இல்லை என்றால் வீடே வெறிச்சோடித்தான் போனது. மினியும், ரிஷியும் பந்தைத் தொடவே மறுக்கின்றனர். ரிஷி பிள்ளைகளோடு விளையாடினாலும், சுவாரசியமாக விளையாடுவதில்லை. மினி விளையாடவே போவதில்லை. பள்ளியில் இருந்து வந்து டிபன் சாப்பிட்டு விட்டு, ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருப்பாள்.

''ஏங்க போலீஸ்லே கம்ப்ளைண்ட் கொடுத்து பாக்கலாமா?''

கீதா கேட்க,

''என்னன்னு கொடுப்பே?'' குரு எதிர் கேள்வி போடுகிறான்.

''அதாங்க இந்த நிறம். இத்தனை வயசு காணோம்னு சொன்னா என்ன?''

''உளராதே. என்ன பிரீட்டுன்னு கேட்டா என்ன பதில் சொல்வே. உங்க சங்கத் தலைவி சொன்னாளே அது போல கழுதை ஜாடை அடிக்குதுன்னு சொல்லுவியா? அதெல்லாம் வேண்டாம். நானே தேடிப் பார்க்கிறேன்'' என்கிறான் குரு.

அன்றையிலிருந்து அலுவலகம் விட்டு சற்று சீக்கிரம் வந்து நாயைத் தேட ஆரம்பித்தான். ரீது தினமும் போகும் தெருக்கள், தெரிந்த மனிதரின் வீடுகள், ரீது யார் வீட்டிற்குப் போகுமோ அங்கெல்லாம் தேடியும் பல னில்லை.

ஒரு இரண்டு மாதங்கள் சென்றிருக்கும். ஒரு ஞாயிற்றுக் கிழமை ''டேய் ரிஷி இங்க பாரு உங்க ரீது'' ரீதுவை கூடவே அழைத்துக் கொண்டு ரிஷியின் நண்பன் வந்தான்.

''ஏய் ரீது எப்படி இருக்கே?'' என்றவாறே ஓடிப்போய் அணைத்துக் கொண்டாள் மினி. அதுவும் செல்லமாக முனகி வாலை ஆட்டி அவள் கையை நக்க, ரிஷி வந்து தலையைத் தடவ, அவளின் முகம், கை, வாயை கூட ரீது நக்க,

''எங்கேடி போய்த் தொலைஞ்சே?'' என்றவன் பாலாஜி இதை எங்கே பாத்தே?'' என்கிறான்.



''எங்க வீட்டுக்குப் பின்னாடி ஒரு சேரி இருக்கு. அதுலே ஒரு ஸ்டிரே டாக்கோட இதுவும் சுத்திகிட்டு இருந்தது. இன்னிக்குத்தான் நான் பாத்தேன்'' பாலாஜி சொல்ல, நறுக்கென்று ரீதுவின் தலையில் தட்டுகிறான் ரிஷி.

''அப்பா யார் வந்திருக்கா பாரு'' ரிஷியும் மினியும் ஓவென்று கத்த, படுக்கையில் படுத்தபடி செய்தித்தாளை பார்த்துக் கொண்டிருந்தவன் என்ன ஏது என்று கேட் ரீதுவைப் பார்த்ததும் குருவின் முகமும் சந்தோஷத்தில் பூரிக்க,

''ஏய்...'' என்று அவன் கூப்பிட குஷியோடு குரைத்தது ரீது.

கீதா ஓடி வந்து ரீதுவை அணைத்துக் கொள்கிறாள். அதன் தலையில் முத்தமிடுகிறாள். ரீது வழக்கப்படி அவளின் புடவையை கடித்து முகத்தை நக்க,

ரீதுவை அணைத்து கொஞ்சுகிறாள் கீதா.

''எங்கேடா போனே?''

''அம்மா அது வயிற்றைப் பாருங்களேன் பெரிசா ஆயிடுச்சு'' பிள்ளைகள் கூற.

''ஆமாம் அதுக்கு குட்டிகிட்டி பிறக்கப் போவுதோ என்னவோ.'' கீதா கூற.

''குட்டியா? போதும். இதையே கொண்டு போய் விட்டுடுங்க. இனி நாயே வேண்டாம்.'' குரு கத்த சட்டென்று ரீதுவை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு சொல்கிறாள்

மினி, ''நமக்கு நாயே வேண்டாம். ஆனா ரீது மட்டும் இருக்கட்டும்.'' மினி கூற,

''நோ.. நோ நீங்களே டிசைட் பண்ணுங்க. அப்பாவா, நாயா?'' குரு எரிச்சலோடு கேட்க,

''நாய்'' என்று கோரசாக கீதா உட்பட கத்த விழிக்கிறான் குரு.

ரீது ஆனந்தமாக குருவைப் பார்த்துப் பார்த்துக் குரைத்தது.